حفاظة الإسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (நாம் இதை ஆரம்பிக்கின்றோம்)

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவி S. S. முஹம்மது அப்துல் காதிர் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 1	ஹிஜ்ரி 1348 துல் கஅதா மீ 1930 ளு ஏப்ரல் மீ	இதழ் 3

OFFICE OF THE REGIST... No. 2 MAY 1930 MADRAS

உம்முல் குர் ஆன்

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் (திரு) நாமத்தால் (நாம் இதனை ஆரம்பிக்கின்றோம்) [திரு குர் ஆன்]

1 (சர்வ) லோகத்தினரையும் (படைத்துப்) பரிபக்குவப்படுத்துவோனுகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியன

2 அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்

3 தீர்ப்பு நாளின் அதிபதி

4 உன்னையே (நாங்கள்) வணங்குகிறோம்; மேலும் உன்னிடமே நாங்கள் உதவி தேடுகின்றோம்

5 எங்களை நேரான வழியில் நடத்துவாயாக

6 (நேரான அவ்வழி யாதெனில்) எவருக்கு நீ அருள் புரிந்தாயோ அவருடைய வழி

7 உன் கோபத்திற்கு ஆளானவர்களோ, இன்னும் வழிதப்பியவர்களோ, சென்ற வழியன்று

இது திரு குர் ஆனின் முதல் அத்தியாயம். இது ஏழு வசனங்கள் உடையது. இந்த அத்தியாயத்திற்குப் பலவிதமான காரணப் பெயர்கள் உண்டு. குர் ஆன் ஷரீபு இந்த அத்தியாயத்தைக் கொண்டு ஆரம்ப மாகும். குர் ஆன் ஷரீபை பிள்ளைகளுக்குக் கற்பிக்கையில், இந்த அத்தியாயமே முதலில் போதிக்கப்படும்; தொழுகைகளிலும் இந்த அத்தியாயமே முதலாவதாக ஓதப்படும். மேலும் இதுவே முதல் முதலாக வெளியாக்கப் பெற்ற அத்தியாயமாக இருக்கிறது. ஆதலால்

இதற்கு "பாத்திஹத்துல் கித்தாப்" (வேதத்தின் திறப்பு) என்ற பெயர் வரலாயிற்று.

இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் ஆண்டவனது புகழ் கூறப்படுகின்றது. எனவே ஸூறத்துல் ஹம்து (புகழுடைய அத்தியாயம்) என்று இது பெயர் பெற்றுளது. இதற்கு உம்முல் குர் ஆன் (குர் ஆனின் தாய், குர் ஆனின் சத்து, குர் ஆனின் சாரம்) என்றும் பெயருண்டு. இதற்குப் பலகாரணங்கள் உள.

இறைவனைப் பற்றியன, மறுமையைப் பற்றியன, நபித்துவத்தைப் பற்றியன, இறைவனது கற்பனையைப் பற்றியன, ஆகிய இந்த நான்கு விஷயங்கள் திரு குர் ஆன் முழுவதிலும் முக்கியமாகக் கூறப்பட்டுள. எனவே, இந்த அத்தியாயத்தில் முதல் இரண்டு வசனங்கள் இறைவனையும், அவனுடைய குணாதிசயங்களையும் குறிக்கும்; மூன்றாவது வசனம் மறுமையைப்பற்றி யுரைக்கும்; நான்காவது வசனமோ இறைவனது கற்பனையைப் பற்றிக் கூறும். அதாவது மனிதன் மரக்கட்டையைப் போல் ஒன்றும் செய்ய இயலாதவனாய், தான் செய்யும் எக்காரியத்திற்கும் அவன் உத்தரவாதி யாகான், என்று சிலர் தப்பாக எண்ணி இருப்பதை மறுத்து, எல்லாம் இறைவனது செயலே யாயினும், அதற்கு ஓரளவு மனிதன் ஜவாப்தாரி யாவன் என்பதை உறுதிப்படுத்தும். ஏனைய மூன்று வசனங்களும் நபித்துவம், கற்பனை இவைகளை இயம்பும். எனவே திரு குர் ஆனின் முக்கிய சாரம் இதில் உளது.

திருமறைகள் யாவற்றிலும் அல்லாஹ்வின் துதி, அவனை வழிபடுதல், அவனை வணங்குதல், இறைவனது பாரமார்த்திக வழியை அருளும் வண்ணம் வேண்டுதல், ஆகிய காரியங்கள் நிறைந்துள. இதற்கேற்ப இந்த அத்தியாயத்தில் முதல் மூன்று வசனங்கள் அல்லாஹ்வின் புகழ்களாகும்; நான்காவது வசனமோ இறைவனுக்கு இபாதத்துச் செய்ய முயலுவதையும், அடியான் தன்னுடைய இயலாமையை இறைவனிடம் கூறி, தனக்கு உதவி புரியுமாறு அவனை வேண்டுவதையும் குறித்து நிற்கும்; ஐந்து, ஆறு, ஏழு ஆகிய மூன்று வசனங்களுமோ, இறைவனது பாரமார்த்திக வழியை அடைவதற்குரிய வகையில் தனது அகக்கண் மலரவும், நேரான பாதை கிட்டவும், இறைவனைப் பிரார்த்திக்கும் வழிகளாம்.

பரி பக்குவப்படுத்தும் தன்மையாகிய றுபூபிய்யத்தின் பெருமை, அடியானது அடிமைத்தனமாகிய உபூதிய்யத்தின் சிறுமை, ஆகிய இரண்டையும் உணர்தல் வைதிகக் கலைகளின் முக்கிய நோக்கம். ஆகவே, இந்த அத்தியாயத்திலுள்ள முதல் மூன்று வசனங்கள், அவ்விறைவனே இம்மை மறுமை ஆகிய இரண்டு உலகத்திலும் எல்லாக் காரியத்திற்கும் இணையற்ற அதிபதி என்பதைக் குறிக்கின்றன. இதற்குப் பின்னுள்ள நான்கு வசனங்களும் அடியானது அடிமைத்தனத்தின் சிறுமையை அறிவிப்பன வாகும். அதாவது, அடியானது புறக்காரியங்களான அந்த இபாதத்துகளும், அகக்காரியங்களான முகாஷபா, முஷாஹதா முதலியவைகளும், இறைவனது உதவியின்றி இனிது முற்றுப் பெறா என்பதை எடுத்தோதும். ஆகவே, வைதிகக் கலையின் சாரம் இந்த அத்தியாயத்தில் பொதிந்துளது.

மனிதர்களின் கல்விகளில் வைதிகக்கலைகள் யாவும் இறைவனையும், இறைவனின் லக்ஷணங்களையும் செயல்களையும், அவனது விதிவிலக்குகளையும் விளக்கி, அகத்தூய்மை, ஆத்மார்த்த ஒளி, இறைவனின் முகாஷபாத்துகள், ஆகிய இவைகள் வெளியாவதையும் விவரிக்கும். முதல் அத்தியாயத்தில் இந்த விபரங்கள் யாவும் அடங்கியுள. உதாரணமாக இறைவன் எல்லாக் காரியங்களுக்கும் சர்வாதிகாரி; சிருஷ்டிப் பொருள்களின்மீது சர்வ சக்தியுள்ளவன்; சகலத்தையும் அறிந்தவன்; ஆகிய இந்த உண்மைகளை, 'எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே' என்ற வாக்கியம் அறிவிக்கும். அல்லாஹ்வை அறிய வேண்டின், அவன் றப்புல் ஆலமீனாக இருக்கிறான் என்பதை அவசியம் அறியவேண்டும். "(சர்வ) லோகத்தினரையும் (படைத்துப்) பரிபக்குவப் படுத்துவோன்" என்னும் பதம் மேற்சொன்ன உண்மையை உணர்த்தும்; பின்பு அல்லாஹ்வின் அளவற்ற அருளையும், நிகரற்ற அன்பையும் கூறி, அவனது குணாதிசயங்களை வர்ணிக்கும்; மேலும் அவனது பூரண தத்துவத்தையும் வல்லமையையும் உரைக்கும்; தீயோர் தண்டனை பெறாமல் தப்பார் என்பதையும், தீயோரால் துன்பம் அடைந்தோரின் உரிமைகள் புறக்கணிக்கப்படா என்பதையும் அவ்வசனம் புகலா நிற்கும்.

நான்காவது வசனம் பக்தனது பணிதலையும் வழிபாட்டையும்கூறி, அந்த றப்புல் ஆல

மீனுகிய அல்லாஹ்வின் உதவியில்லாமல் அவ் வழிபாடு பூர்த்தியாவதில்லை என்பதை எச்ச ரிக்கை செய்யும். பின், முகாஷபாத்துகளின் வகைகள் கூறப்பட்டுள. அவ்வகைகள் எண் ணிலடங்கா. ஆயினும் அவைகளை மூன்றுவித மாகப் பிரிக்கலாம்.

(1) நேர் வழியென்ற ஒளியைப் பெறுதல் இதயத்தில்தான்; இதைக்குறித்தே 5-ஆவது வசனத்தில், எங்களுக்கு நேரான வழியைக் காட்டுவாயாக எனக் கூறப்பட்டுளது. (2) நேரான வழியைப் பெற்ற அடியானுக்கு, அல்லாஹு தஆலாவின் அருள் கொடையை அடைந்த நல் அடியார்களின் அந்தஸ்துகளும் பதவிகளும் வெளியாகும். ஆகவே அவர் களுக்கு அளித்த நேரான பாதையைத் தந் தருளும் வண்ணம், ஆருவது வசனத்தின்கண் தனது விருப்பத்தை அடியான் விண்ணப் பிக்கின்ருன். (3) அந்த நேரான வழியைப் பெற்ருலும், அவ்வழியில் அவன் தன் இச்சை களில் ஈடுபட்டு இட ரெய்தாமலும், ஐயம் திரிபுகள் கொள்ளாமலும் இருக்கவேண்டும். ஆகவே, ஆசைகளுக்கு ஆளாகி இறைவனது கோபத்திற்கு இலக்கானவர்களும், சந்தேகங் களுக்கு இடங்கொடுத்து சரியான வழியி லிருந்து தவறியவர்களும் சென்றதுபோலல் லாமல், நேர் வழியிலே ஸ்திரமாகச் செலுத் துவாயாக எனப் பிரார்த்திக்கின்ருன்.

பலவகையான உணர்ச்சிகளுக்கு மூளை நடு நாயகமாக இருப்பதேபோல், இந்த அத்தி யாயமும் மிக மேன்மையான கருத்துகளுக் குத் தாயகமாகும். ஆதலின் இதற்கு "உம் முல் குர் ஆன்" என்றும், "உம்முல் கித் தாப்" என்றும் பெயர் வந்தது. இன்னும் பலவகையான காரணங்களைத் தழுவி, இந்த அத்தியாயத்திற்கு, ஸப்உ மதானி, வாபியா, காபியா, அஸாஸ், ஷிபா, ஸூறத்துத்துஆ, எனப் பல்வேறு காரணப்பெயர்களும் வழங்கி வருகின்றன.

இத்தகைய சிறப்புவாய்ந்த இந்த அத்தியா யமானது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மக்காவிலிருக்கும் போதே வெளியாக்கப் பெற்றது என்றும், மக்காவை நாயகமவர்கள் ஹிஜ்றத் செய்து மதீனவிற் குடியேறிய பின் வெளியாக்கப் பட்டதென்றும், மக்காவில் ஒரு முறையும் மதீனவில் ஒரு முறையுமாக இருமுறை வெளியாக்கப்பட்டது என்றும் சொல்லப் படும். எனினும், இது மக்காவில் அல்லாமல் மதீனவில்தான் வெளியாக்கப்பெற்றது என் பதற்குத் தக்க ஆதாரம் எதுவும் இருப்பதா கத் தெரியவில்லை. ஆதலால், உலமாக்கள் இந்த அபிப்பிராயத்திற்கு மாருன கருத்துள் ளவர்களாக இருக்கிருர்கள். மேலும் திரு குர் ஆனில் முதல் முதலாக வெளியாக்கப் பெற்றது இந்த அத்தியாயம்தான் எனச் சிலர் கூறுவர். இதைச் சிலர் எதிர்ப்பது முண்டு. இதற்குக்காரணம் யாதெனில், நாய கமவர்கள் ஹிருமலைப் பொதும்பில் இருக் கும்போது, ஜிப்ரயில் அலைஹிஸ் ஸலாமவர்க ளால் கூறப்பட்ட 97 ஆவது அத்தியாயத் தின் முதல் ஐந்து வசனங்கள் தாம் என்ப தற்குத் தக்க ஆதாரமிருப்பதால், இதை நம்பமுடியாது என்றனர். ஆனல், இந்த அத்தியாயம்தான் முதல்முதலாகவெளியாக் கப்பெற்றது எனக் கூறுவோர், ஷ வசனங் கள் ஹிரு மலைக் குகையில் வெளியானவை என்பதை மறுக்கவில்லை. அவை ஓர் அத் தியாயத்திலுள்ள 5 வசனங்கள் மாத்திரமே யாகும். ஆனல் அதற்குப் பின் குர்ஆனி லுள்ள முழு அத்தியாயம் என்று பூராவும் வெளியாக்கப் பட்டதில், இது தான் முத லாவது அத்தியாயம் என்று பதில் கூறு கின்றனர். இதுதான் சரியான சொல் என் பது பல இமாம்களின் அபிப்பிராயம். தவிர வும், இந்த சூறத்து, தொழுகையில் ஓதப்பட வேண்டியதாக இருப்பதால், நபிகள் நாயக மவர்களுக்கு நபிப்பதவி கிடைத்த ஆரம்ப காலத்திலேயே இஃது வெளியாக்கப்பட் டிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. ஆதலால், இந்த அத்தியாயம் முதல்முதலாக வெளியாக்கப்பெற்ற முழு அத்தியாயமாகும் என்பதில் சந்தேகங்கொள்ள இடமில்லை.

நாயக வாக்கியம்

எவன் ஒரு முஸ்லிமுடைய குறையை மறைக்கின்றானோ, அ(வ்வாறு மறைப்ப)வனுடைய குறைகளை அல்லாஹு தஆலா, கியாமத்து நாளில் மறைக்கின்றான் (புகாரீ, முஸ்லிம்)

ஒருவருக்ொருவர் தூற்றித்திரியாமல், முஸ்லிம்கள் கௌரவமாக வாழவேண்டும் என்பதே இந்த ஹதீதின் கருத்து. எனவே ஒரு முஸ்லிம் சகோதரர் தவறிழைத்துவிட்டால், அதை மற்றவர் மன்னித்து அவருக்கு நற்புத்தி புகட்டவேண்டும்; குற்றத்தை ஊர் அறிய எடுத்துச்சொல்லி, தூற்றித் திரியலாகாது. ஒரு முஸ்லிம் செய்த பிழையைப் பொறுத்து, அவனுக்கு நலம்புரிய வேண்டுமென்ற நல்லெண்ணங் கொண்டு, குறையை மறைத்தல் முஸ்லிம்களுக்கு மரியாதையாகும். குறைகாரணமாகவே ஒருவன் கெட்ட பெயர் அடைவான். ஆதலின் யாரும் தனது குறைகளை வெளியே புலப்படாமல் காத்துக் கொள்ளுதல் இயற்கை. அங்ஙனமே பிறரிடம் காணும் குறையை நாம் மற்றவரிடம் எடுத்துரைக்கக் கூடாது. இதுதான் அல்லாஹ்வுக்கு உகந்த காரியம். எவரையும் அவமானஞ் செய்யாமல் இருப்பதையே அல்லாஹ்வும் விரும்புவான். ஆனதுபற்றியே, ஏனையோரிடம் கண்ட குறைகளை மறைத்து, அன்னவரை அவமானம் காணாதிருப்பின், மறுமையில் மனிதர் யாவரையும் நிறுத்தி விசாரிக்கும் சமயத்தில், அல்லாஹு தஆலா உங்களது குற்றங்களை மறைத்து, உங்களின் மானத்தைக் காப்பான் என நபிகள் நாயகமவர்கள் மேற்கண்ட ஹதீதில் கூறி இருக்கிறார்கள்.

அவ்விதம் குறைகளை மறைத்தல் என்பதால், தன்னுடைய சுற்றத்தார் சிநேகிதர் ஆகிய இவர்களின் குறைகளை மாத்திரம் மறைப்பது என்றல்ல; தனது பகைவரின் குற்றங்களையும் பிறரிடம் புகலக்கூடாது. உறவினரின் பிழைகளை மட்டும் மறைப்பது சுயநலமாம். பிறரது குறைகளைக் கூறல் அவரை மானங் கெடுப்பதாகும். ஒருவரின் குறையைப் பலரறியப் பேசின், அவரிடம் பிறருக்குள்ள நன்மதிப்பு நாசமுறும். நபிகள் நாயகமவர்கள் மேற்கண்ட ஹதீதில், முஸ்லிம்கள் யாவருக்குமே பொதுவாகக் கூறி இருக்கிறார்களே அன்றி, சுற்றத்தார் சிநேகிதர் என்று பிரித்துக் கூறவில்லை. ஆகவே நமக்குத் தெரிந்த யாவராயினும், தெரியாதவராயினும் சுற்றத்தா ராயினும், மாற்றா ராயினும் அனைவரிடமும் ஒன்று போலவே நடந்துகொள்ள வேண்டும். இனி பிழை புரிந்தோரைத் தனிமையில்அழைத்து, "உம்மிடம் இன்னின்ன குற்றங்கள் உள. அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுதல் நலமாகும். இன்னின்ன பாவங்களை நீவிர் புரிந்தீர். அவைகளை இனிமேல் செய்யாது "தௌபா" செய்துகொள்க. நீவிர் செய்து வரும் கெட்ட காரியங்கள் வெளியானால், உலகம் உம்மை எள்ளி நகையாடும், உமக்கு மதிப்பு இராது. ஆதலால் அவைகளைப் பேணி நடந்துகொள்க" என இதமாக இயம்புதலே மேன்மையாம்.

இவ்வாறு இதம்பேசி நேரான வழிக்குத் திருப்புவதெல்லாம் தனிப்பட்ட நபர்களையும், தன்னைப் பொருத்தமட்டில் உள்ளவருக்குமேயாம். ஒரு பிரசங்கியார் தப்பும் தவறுமாகப் பிரசங்கம் செய்கிறார்; அல்லது ஒரு நூலாசிரியர் தவறாக ஒரு விஷயத்தை எழுதிப் பிரசுரிக்கிறார்; அல்லது ஒரு குழுவினர் தங்களது தவறான கொள்கை அல்லது நடத்தையைப் பரவச் செய்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம். அவ்வாறாயின் நாம் என் செய்தல் வேண்டும்? அன்னவரிடமும் முன்கூறியது போல் இதம் பேசி அவர்களின் தவறை அவர்களுக்கு எடுத்துக் கூறித் திருத்திக் கொள்ளச் செய்வதுடன், அவரால் யார் யாருக்குப் பிரசாரம் செய்யப்பட்டதோ அவர்களுக்கும் அதை அறிவித்துத் திருத்திக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்

வாறு திருத்திக்கொள்ள அப்பிரசங்கியாரோ நூலாசிரியரோ குழுவினரோ இணங்கவில்லையேல், அவர்களிடமுள்ள நட்பை நாம் அகற்றி விடுவதுடன், அவர்களா லேற்படும் தீங்குகளைப் பொது ஜன நன்மையை நாடிப் பொது மக்களுக்கு அறிவிக்க வேண்டும். ஆனால், தகாத விதமான வாதங்களால் தூஷணை செய்வதும் நிந்திப்பதும் நீதியாகா. இவ்விதமாக எடுத்துக் கூறுவதானது நன்மையை ஏவித் தீமையை விலக்க வேண்டுமென்ற இஸ்லாமியச் சட்டப்படி முஸ்லிமாக உள்ள ஒவ்வொருவருக்கும் கடமையாகும். இவ்வாறு எடுத்துப் போதிப்பது இஸ்லாம் மதச் சட்ட திட்டங்கள் சாற்றியுள்ள வரையறைக்கு உட்பட்டு இருக்க வேண்டுமே யொழிய அதற்கப்புறமுஞ் செல்லலாகாது. அவ்வாறு அளவு கடந்து காரியம் புரிவதால் நன்மையை ஏவித் தீமையை விலக்குதல் என்ற நியதி எந்த நன்மையை உத்தேசித்து ஏற்பட்டதோ அந்த நன்மையை அது பயப்பதற்குப் பதிலாக தீமையையே பயக்குமென்பதை நண்பர்கள் ஞாபகத்தில் வைக்கவேண்டும். நன்மையை ஏவித் தீமையை விலக்குவதும், மேற் கூறப்பட்ட ஹதீதும், முக்கியமாக ஒற்றுமையையும் கூட்டுறவையும் அடிப் படையாகக் கொண்டும், அதை அபிவிருத்தி செய்வதை முக்கிய நோக்கமாகக் கொண்டும், கூறப்பட்டவைகள் என்பது அவைகளை கவனித்துப் பார்ப்போருக்குப் புலப்படாமற் போகாது. ஆகவே, நல்லவார்த்தையினால் ஆவது பொல்லாத வார்த்தையினாலாகாது என்னும் பொன்மொழிக் கேற்ப நல்லவார்த்தையினால் இதமாகப் பேசுவதே ஏற்றமாகும்.

நீதி சார உரைகள்

ஹஜ்றத் இமாம் ஹஸன் (றலி) அவர்களின் ரிவாயத்து.

திமிஷ்கு எனும் நகரிலுள்ள வணிக மக்களிற் சிலர் வந்து, என் தந்தையாரின் சமுகம் சேர்ந்து, "அமீறுல் முமினீன் அவர்களே! ஈருலகினும் சீர் பெறும் சாதனம் யாது? எங்கள் நல் வினைகள் பெருகும் மார்க்கம் என்ன? இரண்டுக்கும் ஏற்றவண்ணம் எங்களுக்கு நல்லுபதேசம் நவின்றருள்க" என்று வேண்டிக் கொண்டனர். அதற்கு என் தந்தையாராகிய ஹஜ்றத் அலீகர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் கூறியது ஈதாகும்.—

"மனிதன் மரித்தபின் அவனது நல்வினை தீவினை இரண்டும் தொடர்பின்றி நின்று விடும்; ஆனால், மூன்று காரியங்கள் மட்டுமே தொடர்ந்து நிலைத்திருக்கும். (1) பயனளிக்கும் கல்வி (2) மஸ்ஜிது, மத்ரஸா, சத்திரம், தர்மக்கிணறு, சாலையோரங்களில் மரம் வளர்த்தல் முதலிய தர்மகாரியங்கள் (3) சற்புத்திர புத்திரிகள். இனி புகழுடம்பு தாங்கி வாழ வேண்டுமாயின், நீவிர் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடவுங்கள்; மேலும் நெஞ்சார நற்கருமங்களையே செய்யுங்கள்."

ஹஜ்றத் அபூ தர்ரு ஙிபாரீ (றலி) அவர்கள் ரிவாயத்துச் செய்தது.

ஒருநாள் ஹஜ்றத்அலீ (றலி) அவர்கள், மஸ்ஜிது கபாவில் உபதேசம் செய்துகொண்டிருந்தார்கள். அவ்வேளை அவர்களது முகத்தில் துக்கக்குறி தோன்றியது. அவர்களின் மனமோ மிக இளகித் தென்பட்டது. இறுதியில் ஹஜ்றத்அலீ அவர்கள் சபையோரைப் பார்த்து, "நான் உங்களுக்குச் சில உபதேசங்கள் செய்வேன். விலை மதிக்க முடியாத ஆணி முத்துக்களினும், அவை அருமையும் பெருமையும் வாய்ந்தவை. ஆதலின் கவனமுடன் காதுகொடுத்துக் கேளுங்கள்" என்று கூறினார்கள். அவையாவன:—

"அறஞ் செய்வதால் ஆஸ்தி குறையாது. அல்லாஹு தஆலாவுக்காக ஒருவன் தன்செல்வத்தைச் செலவிட்டு, வாழ்வில் தாழ்வு அடையான்; அல்லாஹு தஆலா, அவனது வாழ்வின் நிலையை உயர்த்துவான். பொருட் செல்

வம் படைத்திராத தரித்திரன் தன்னிடமுள்ள கல்விச் செல்வத்தைப் பிறருக்கு வழங்கி, அந்தோ ! என்னிடம் பணமிருப்பின் பலருக்கும் பயன்படும் நற்கருமம்புரிய முற்படுவேனே என்று மனமார நினைப்பின், அவனுக்கு நிகரிலாத நற்பயன் கிட்டும்.''

ஹஜ்றத் இமாம் ஹுஸைன் (றலி) அவர்கள் ரிவாயத்துச் செய்தது.

பனூஸஅத் எனும் கூட்டத்தாரின் தலைவர் ஒரு தினம் என் பிதாவின் சமுகம் வந்தார். அத்தலைவர் அகந்தை மிகக் கொண்டவர். தற்பெருமை பேசித் திரிபவர்; பிறருடன் பேசின், பெருமை குன்றும் என்று கருதுபவர். அத்தகையவருக்கு என் தந்தையார் கூறிய கட்டுரை:—

"இறுமாப்பு அல்லது அகந்தை மிகுந்த தீக்குணமாம். கியாமத்து நாளில் அல்லாஹு தஆலா அந்த அகந்தைக் காரரைக் கண்ணெடுத்தும் பாரான். அணுவளவேனும் தற்பெருமை கொண்டுளோர் சொர்க்க லோகத்தை எட்டிப்பார்க்கவும் இயலாது, என்று நபிகள்நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறி இருக்கிறார்கள்.''

ஹஜ்றத் அம்மாறுப்னுயாஸிர் றலியல்லாஹு அன்ஹு கூறியது.

ஒருநாள் நான் ஹஜ்றத் அலீ அவர்களை நோக்கி, "சொர்க்க உலகம் செல்லத் தகுதி உடையோர் யாவர்?' என வினவினேன். அதற்கு அவர்கள் கூறியதாவது :—

"ஸாலி ஹீன்கள், ஷஹீதுகள், சத்திய புருஷர், கற்பைக் காப்போர், அல்லாஹ்வை விதிப்படி வணங்கும் நல்லடியார், ஆகிய இவர்களே சொர்க்கஞ் செல்லுவர் என நான் நிச்சயமாக நம்புகிறேன்.''

ஸெய்யிதுனாஹஸன் (றலி) அவர்கள் ரிவாயத்துச் செய்தது.

என் தந்தையவர்கள் ஒரு நாள் மஸ்ஜிது கபாவிலிருக்கும் போது ஒருவர் வந்து "ஹஜ்ரத் அவர்களே ! என்னுடைய சொத்தில் ஒருவன் நம்பிக்கை மோசம் செய்தால் நானும் அவனுடைய சொத்தில் அவ்வாறு மோசம் செய்யலாமா? அல்லவா?'' என வினவினார். அதற்கு என் தந்தையவர்கள் அவரை நோக்கி, ஒருவர் உமது பொருளைத் திருடி கிணற்றில் மூழ்கிவிட்டால், நீரும் அக்கிணற்றுக்குள் மூழ்கிவிடுவீரோ? என வினவிவிட்டு, மேலும் கூறியதாவது :—"அமானத்து நல்ல காரியங்களைச் சேர்ந்த தொன்றாகும். நீவிர் நல்லமனிதர் என நான் நம்புகிறேன். உமக்கு மோசம் செய்தவருக்கும் நீர் மோசம் செய்யவேண்டாம். நீர் பரிசுத்த திரு குர்ஆனை நோட்டமிட்டுப்பாரும். எவர்கள் நல்ல காரியங்களை இவ்வுலகில் செய்கிறார்களோ அவர்களுக்கு நன்மையுண்டு. மறு உலகமானது (இந்த உலகத்தைப் பார்க்கிலும்) சிறந்தது. பேணுதலுள்ளவர்கள் தங்குமிடம் நல்ல இடமாகும்.'' என்று நம்முடைய றப்பு அதில் கூறி இருக்கிறான் என்றார்கள்.

ஹஜ்றத் அபுதர்ரு கிபாரி (றலி) அவர்கள் ரிவாயத்துச் செய்தது.

ஒரு நாள் ஹஜ்ரத் அலீ (றலி) அவர்கள் எனது இல்லத்திற்கு வந்திருந்தார்கள். அந்தச் சபையில் இருந்தவர்களில் ஒருவர் ஹஜ்றத் அலீ (றலி) அவர்களை நோக்கி "ஹஜ்றத் அவர்களே! நல்ல மனிதர் இன்னார் எனத் தெரிந்து கொள்வதெப்படி?'' என வினவினார். அதற்கு அவர்கள் கூறியதாவது:—"எவன் தன் சிநேகிதர்களுக்கு நல்லவனாக இருக்கிறானோ அவன் அல்லாஹ்வினிடத்திலும் நல்லவனே. எவன் தன் அயலகத்தானுக்கு நல்லவனாக இருக்கிறானோ அவன்தான் அயலகத்தார்களில் நல்லவனாவான். "எவருடைய கையினாலும், நாவினாலும், முஸ்லிம்கள் காக்கப் பெற்றிருக்கிறார்களோ அதாவது எவருடைய கையினாலும் நாவினாலும் இதர முஸ்லிம்களுக்குக் கெடுதி வரவில்லையோ அவர்தான் சரியான முஸ்லிம்'' என நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்'' என்றார்கள்.

حفاظة الاسلام مدراس

இந்திய முஸ்லிம்கள் வேண்டுவதென்னை?

இப்பூமியிலே தற்சமயம் நம்மவரின் சமூக நிலையும் ராஜீய நிலையும் மிகவும் சிக்கலாக இருக்கின்றன. அவ்விரண்டிலும் விழுமிய சீர்திருத்தம் உடனே செய்தல் வேண்டும். ஒவ்வொரு முஸ்லிமும் அத்துறையில் விழிப்புக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்; சோம்பிக் கிடப்பின் கட்டாயம் சிறுமையே கிட்டும் என்பது திண்ணம். தேச அரசியலிலே திருத்தம் ஏற்பட்டதன் பலன் யாது? அதனால் முஸ்லிம்களுக்கு என்ன நலம் கிடைத்தது? இதனை ஆராய்ந்து பார்த்தல் அவசியம். சட்ட சபைகளிலே ஏனைய மதப் பிரதிநிதிகளில் சிலர் பலவகையான தீர்மானங்களும் மசோதாக்களும் கொண்டு வருகின்றனர். வெளிப்பார்வைக்கு அவை நலம் பயப்பனவாகத் தோன்றுகின்றன. பிற அங்கத்தினரும் அரசாங்கத்தினரும் அதனைக் கண்டு மயங்கி, ஆதரவு அளிக்கின்றனர். உடனே சட்டம் உதித்துவிடுகின்றது.

சட்டசபைகளிலுள்ள முஸ்லிம் அங்கத்தினரில், மார்க்க சட்டதிட்டங்களையும் அரசாங்க சட்டதிட்டங்களையும் நன்கு அறிந்துளோர் எத்தனை பேர்? மிகச் சிலரென்பதில் ஐயமில்லை. மார்க்க உண்மைகளை இம்மியளவும் உணராதார் தமக்குள்ள ஆங்கிலக் கல்வியின் பசப்பினாலும் பணப் பெருக்கினாலும், நம்மவரின் பிரதிநிதிகளாக வந்துவிடுகின்றனர். புறமதப் பிரதிநிதிகள் கொணரும் தீர்மானங்களும் மசோதாக்களும் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு உகந்தனவா? முஸ்லிம்களுக்குச் சாதகம் அளிக்குமா? அல்லது பாதகம் தருமா? என்று நமது சமூகப் பிரதிநிதிகளில் எத்தனை பெயர் சிரத்தையுடன் ஆராய்ந்து பார்க்கின்றனர்? இஸ்லாம் மார்க்க உண்மைகளை நன்கு உணராததனால், சில சமயங்களிலே அவைகளை ஆதரித்துப் பேசுகின்றனர்; வாக்கும் தந்துவிடுகின்றனர். அதனால் நம்மவருக்கும் நமது மார்க்கத்திற்கும் தீமைகள் நேருகின்றன. தனக்கு இடர் தானே தேடிக்கொள்ளுதல் தகுமோ?

அந்தோ! உயிரினும் நனி சிறந்த நமது மார்க்கம் பங்கமுறுகின்றது; நமது நலங்களும் உரிமைகளும் சிதைகின்றன: சாரதா சட்டம் இதற்குச் சான்றாகும். நலம் பயக்க வேண்டிய சட்டசபைகளினால், தீமைகள் நேருதல் அடுக்குமோ? எனவே அங்ஙனம் சட்டசபைகளின் மூலம் நமக்கும் நம் மார்க்கத்துக்கும் பங்கம் ஏற்படாமல் நாம் பாதுகாக்க வேண்டும் அல்லவா? இதற்கு நம்மவர் அனைவரும் பெருமுயற்சி செய்தல் வேண்டும். ஏனோ தானோ என முஸ்லிம் மக்கள் இருக்க ஒண்ணாது. ஆதலின் முஸ்லிம் மகா ஜனங்களின் கடமை யாது? அரசாங்கத்தின் பொறுப்பு எப்படி? நமக்கு வேண்டிய சீர்திருத்தங்கள் என்னென்ன? ஆகிய இவை போன்ற பல விஷயங்களை நாம் ஆழ்ந்து ஆராய்தல் வேண்டும்.

இப்பாரத தேசம் பற்பல சமூகங்களின் வாழ்விடமாகும்; பலப்பல சமயங்களுக்கும்

தாயகமாக விளங்குகின்றது. ஹிந்துக்கள், பௌத்தர், ஜயினர், பாரசீகர், சீக்கியர், கிறிஸ்தவர் முதலிய பலவாறான மதத்தினர் இத் தேசத்திலே நிரம்பி யிருக்கின்றனர். முஸ்லிம்களாகிய நம்மவரும் ஏராளமாக வசிக்கின்றனர். அவர்களின் மதநிலையும் வளர்ச்சியும், சரிதமும் வேறு; நம்மவரின் மார்க்க நிலையும் வளர்ச்சியும் சரிதமுமோ வேறாம். அன்னவரின் மார்க்கத்தைவிட நமது இஸ்லாம் மார்க்கமே ஆதிமுதல் ராஜீயக் கலப்புடன் அதிகமாக ஓங்கி வளர்ந்து வந்ததாகும். அம்மதங்கள் ஆதியிலே அரசாங்க ஆதரவு பெறவில்லை; நாளடைவில்தான் கொஞ்சம் கொஞ்சமாக அரசாங்க ஆதரவை அடையலாயின. ஆரம்பத்திலே அம்மதங்களைத் துறவியரும் சந்நியாசிகளுமே வளர்த்து வந்தனர். பின்னரே அவைகளில் அரசர் கிளம்ப, அம்மதங்கள் அந்தர மளாவ வெற்றிக் கொடி தூக்கலாயின.

இஸ்லாம் மார்க்கமோ அவ்வாறன்று; இஸ்லாத்திலே மார்க்கத்துடன் அரசாங்கமும் தோன்றியது. பள்ளிவாசல்களும் பேரரண்மனைகளும் சேர்ந்து கிளம்பின. இஸ்லாம் மார்க்கத்தின் பிரசங்க மேடையான மின்பரும் சிம்மாசனமும், ஒரே இடத்தில் கிளம்பி, இரண்டு பெயர்களாக அமைந்தன. நம்மதத்தைச் சார்ந்தவர்கள் இரவிலே துறவிகளாகவும் பகலிலே பார்த்திபர்களாகவும் விளங்கினார்கள். இந்த அவனியில் வெளியான தினத்திலேயே இஸ்லாம் மார்க்கம் ராஜ்யாதிபத்தியத்தையும் உடன்கொண்டு கிளம்பியது என்பதைக் கவனிக்கவேண்டும்.

ஹிந்து மக்களின் வேதாரம்பகாலம் சரித்திரத்துக்கும் புலப்படாதது, அவர்களின் மதம் அனாதியானது என்று சிலர் சொல்லுவர். ஆயினும் அன்னவரின் அரசாட்சி நாளோ சரித்திர வரம்புக்கு உட்பட்டதே என்று சாதிப்பார் இருக்கின்றனர். ஹிந்துக்களிலே மதத்தைக் காத்து வளர்க்க வேதியர்களும், அரசைப் பேணி ஆதரித்துவர க்ஷத்திரியர்களும் உண்டு. யூதர்களின் மதமோ ஹஜ்ரத் மூஸா (அலைஹி) அவர்களின் காலத்திலேயே தோன்றியதாகும். மேலும், ஹஜ்ரத் தாவூத் (அலைஹி) அவர்கள் பிறந்தபின்பு தான் யூதருக்கு அரசுரிமை கிட்டலாயிற்று. பாரசீகரின் மதஸ்தாபகரான ஸோராஷ்டிரர் என்பார் வெறும் மதஸ்தாபகராக இருந்தாரே யன்றி, அரசை நிறுவியவராக இருக்கவில்லை; அரசைக்காண அவர் முனையவுமில்லை. எருசலேம் கிறிஸ்தவர்கள் நானூறு ஆண்டுகளுக்குப் பின்னரே கான்ஸ்தாந்திநோபிளின் கடற்கரையருகே அரசுரிமை அடையும் பாக்கியம் பெற்றார்கள். கடலாடையுடுத்த இக்காசினியில் உள்ள ஏனைய மதங்களின் நிலையும் வளர்ச்சியும் ஏறக்குறைய அத்தன்மையனவேயாம். ஆதலின் ஏனைய மதங்களுக்கும் இஸ்லாம் மார்க்கத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அனைவரும் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

இஸ்லாம் மார்க்கம் தோன்றியது முதல் அரசுரிமை பெற்றதன் ஏற்றம் யாது? இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்குப் பின்னே அதிகார தோரணை யெனும் அரிய சக்தி துணைபுரிந்து நின்றதாகும். அன்றியும், இஸ்லாம் மதம் வெறும் கொள்கை மட்டும் கொண்டிராமல், நடைமுறையில் மக்களுக்குப் பல வகையினும் நன்மை பயப்பதாகவும் இருப்பது ஒரு விசேஷமாகும். இஸ்லாத்தின் திட்டங்கள் வெறும் போதனைகளாக இல்லாமல், உரிமையும் உயர்வும் தேடித் தருவனவாம். இதர மதங்கள் எடுத்தியம்ப மறந்து விட்ட, அல்லது அனாவசியமென உதறித் தள்ளிவிட்ட, வாழ்க்கைக்கு மிகவும் தேவையான பல முக்கியமான விஷயங்கள் இஸ்லாம் மார்க்கத்தில் பர்லாகவும் வாஜிபாகவும் வகுக்கப் பட்டிருப்பதைப் பார்க்கவேண்டும்.

விவாஹ விவரம், விவாக விலக்கு, மக்களின் வாரிசுரிமை, தம்பதிகளைப் பிரித்து வைத்தல், விவாக ரத்து, விவாக மறுப்பு, மத உரிமைகள் முதலியவற்றை வகுத்தும் தொகுத்தும் விளக்கும் சட்ட திட்டங்கள் இதர மதங்களில் இல்லை என்றே இயம்பலாம். ஒரு சமயம் இருப்பினும், அவை அம்மதங்களில் அவ்வளவாக விளக்கிஉரைக்கப்படவில்லை என்று கூறமுடியும். இஸ்லாம் மார்க்க சட்ட திட்டங்களுக்குப் பக்க பலமாக அதிகார தோரணையான சக்தி இருந்ததுபோல், புற சமயங்களுக்கு இல்லை யாதலின், அம்மதங்களின் சட்டதிட்டங்கள் விசேஷம் பெற முடியவில்லை; வெறும் வைதிக சம்பந்தத்துடனேயே நின்றுவிட நேர்ந்தன. இஸ்லாம் மார்க்கத்திலோ, மார்க்க சட்ட திட்டங்களும், அதிகார தோரணையும் இணைந்து நின்றமையால், மகிமையும் பெருமையும் பெற இலகுவாயிற்று. இஸ்லாத்திலே வேந்தர் அம்மதத்தின் இமாம் ஆவார்; அதிகாரியே காஜியாகத் துலங்குவர்; சிப்பாய்களோ முஜாஹிதாக விளங்குவர். ஆதலின் உலகிலே எந்த மூலை முடுக்கிலும் இஸ்லாம் சென்ற போதிலும், மார்க்கமும் அரசும் சேர்ந்தே செல்லும். இதர மதங்களின் நிலையோ இதற்கு நேர் மாறாகும். அம்மதங்கள் ஆட்சித் திறமின்றி, அரசியல் திட்டமின்றி இருந்து வந்துள. அத்தகைய நிலைமை விசேஷம் ஆகுமோ?

தோன்றிய காலந்தொட்டு, அறுநூறு ஆண்டுகள் வரையில் இஸ்லாம் மார்க்கம் உலகிலே அதிகார தோரணைகொண்டு, ஆட்சி செலுத்திவந்தது. அந்நாளிலே இஸ்லாத்தின் வைதிக சட்ட திட்டங்களின் படியே இம்மியும் தவறாமல் அனைவரும் நடந்துவந்தனர். நபிகள் நாயக மவர்கள் நபித்துவம் பெற்ற காலமுதல் ஹிஜ்ரி ஆறுவது நூற்றாண்டு வரையில், அப்பாஸிய்யா வமிசத்தினர் கலீபாவாக இருந்தனர். அக்காலம் முழுவதிலும் இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கு ஏற்ற வைதிக வாழ்க்கை உலகில் செவ்வனே நடைபெற்று நிலையாக விளங்கிற்று. பின்னர் தாத்தாரிகள் படைகொண்டு கிளம்பினர்; கிளம்பவே, இராக், ஈரான், துருக்கிஸ்தான் ஆகிய தேசங்களில் மதம் எனும் மகிமையான மாளிகை தகர்க்கப்பட்டது; இஸ்லாமிய கிராமங்கள் பாழ்படுத்தப்பட்டன. அங்ஙனம் சின்னாள் இஸ்லாத்துக்கு இன்னல் நேர்ந்தாலும், அப்பாலோ அதி விரைவிலே அரசியல் அதிகாரங்களும் நிர்வாக சக்திகளும் முஸ்லிம்களின் கைக்குள் அடங்கலாயின. அதனால் மஸ்ஜிதுகள் மீண்டும் மகிமையுடன் நிருமிக்கப்பெற்றன; காஜீகள் கண்ணியமுடன் நியமனம் பெற்றனர்; இமாம்கள் எடுப்பாக ஏற்பட்டனர்; வக்பு சொத்துகள் விமரிசையாக பரிபாலிக்கப் பெற்றன; எங்கும் அறபி மத்ரஸாக்கள் திறக்கப்பட்டன; இவ்வாறெல்லாம் மீண்டும் இஸ்லாம் மார்க்கம் எங்கும் சீரும் சிறப்பும் பெறலாயிற்று. முஸ்லிம்களும் மொய்ம்புடன் விளங்கத் தலைப்பட்டனர்.

பின்னர் துருக்கர், மொகலாயர், பட்டாணியர், முதலியோர் தோன்றத் தலைப்பட்டனர். எனினும் அம்மரபில் வழிமுறையாக வந்த மன்னவரிடம் மார்க்க சம்பந்தமான தூய்மையும் பரிசுத்தமும் கௌரவமும் மதிப்பும் அவ்வளவாகக் காணப்படவில்லை. ஆதலால் அன்னவரின் ஆட்சியிலே "ஷெய்குல் இஸ்லாம்" எனும் புதிய பதவி ஏற்படலாயிற்று. அரசின் இலௌகிக காரியங்களை அமைச்சரும், வைதிக கருமங்களை ஷெய்கும் கவனித்துச் செம்மையாக நடத்தி வந்தனர்.

இந்தியாவில் ஏற்பட்ட இஸ்லாமிய அரசுகளிலும் அவ்விதமே இலௌகிக, வைதிக கருமங்கள் கவனிக்கப்பட்டு வந்தன. இந்திய முஸ்லிம் அரசாங்கத்திலே, மார்க்க விஷயங்களைக் கவனிக்க "ஸத்ரு ஜஹான்" என்னும் ஓர்

உத்தியோகம் காணப்பட்டது. அப்பதவியை வகித்த அதிகாரியே மார்க்க சம்பந்தமான எல்லாக் காரியங்களையும் சட்ட திட்டங்களையும் மேற்பார்த்து, மதத்திற்கு யாதொரு பங்கமும் நேராமல் பார்த்துவந்தார். மார்க்க சம்பந்தமான வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு அளித்து வந்தார் காஜீ எனும் அதிகாரி. இந்தியாவிலே இஸ்லாமியரின் ஆட்சி ஒய்ந்து, ஆங்கிலேயரின் ஆதிக்கம் தோன்றிய காலத்தும், அந்த உத்தியோகப் பதவிகள் எல்லாம் அங்ஙனமே இருந்து வர, மார்க்கம் மகிமை பெற்று வந்தது. அரசாங்க தஸ்தாவேஜ்கள் நாம் மேலே சொல்லிய விஷயங்கள் உண்மையெனத் தெற்றெனப் புலப்படுத்தும்.

உதாரணமாக, அத் தஸ்தாவேஜ்களிலே மேற்கண்ட அதிகாரிகளின் கைச்சாத்து இருக்கும். 1857 ஆம் ஆண்டில் கிளம்பிய சிப்பாய்க் கலகத்திற்குப் பின்னர், நாளடைவிலே சிறிது சிறிதாக அப்பதவிகள் மறையலாயின; முடிவிலே அப்பதவிகள் ஒழிந்துவிட்டன. தற்சமயம் வங்காள மாகாணத்திலே காஜீ என்பார் நிக்காஹுவைக் கவனித்து வருகிறார். விவாக சம்பந்தமான பதிவு புத்தகம் வைத்திருப்பதைத் தவிர, அவருக்கு வேறு அதிகாரம் கிடையாது. அதற்காக அவர் திங்கள்தோறும் பெறுவது பத்து அல்லது பதினைந்து ரூபா தான். நம் சென்னையிலும் காஜீ என ஒருவரை அரசாங்கம் நியமிக்கின்றது. வாலாஜாஹ் நவாப் அவர்களால் முன்னம் விடப்பட்ட மானியநிலங்கள் அக் காஜீக்குக் கொடுக்கப்பட்டுள. அரசாங்கத்திலே அக்காஜீக்கு எவ்வளவு அதிகாரம் உண்டு என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. தமிழக முஸ்லிம்களுக்கு அவ்விஷயம் நன்கு தெரியும்.

பிரான்ஸ், இத்தாலி, ஆஸ்டிரியா, ருஷியா, ஹாலண்டு, பால்கன் பிரதேசங்கள், அமெரிக்கா, ஆகிய தேசங்களுக்கு உட்பட்ட இஸ்லாமியப் பிரதேசங்களிலோ, நமது மார்க்க விஷயங்களை நன்கு கவனித்துவர முஸ்லிம் மத இலாக்கா இருந்துவருகின்றது. ஷெய்குல் இஸ்லாம் எனும் பதவி வகிக்கும் அதிகாரி அந்த இலாக்காவின் தலைவராக இருந்து, அனைத்தையும் கண்காணித்து வருகிறார். அந்நாடுகளில் கிறிஸ்தவ அரசாங்கங்களே இருப்பினும், அன்று ஏற்பட்ட உடன்படிக்கையின் வண்ணம், அந்த அரசுகள் நமது மார்க்க விஷயத்தில் நடந்து வருகின்றன. மேலும் முஸ்லிம்களின் வைதிகக் காரியங்கள் நன்கு நடைபெறவேண்டி, ஐரோப்பிய அரசுகளில் சில, தங்களது மேற்பார்வையில் ஷெய்குல் இஸ்லாம் எனும் அதிகாரியை நியமித்துள. ருஷியா, அல்ஜீரியா, டுனிஸ், திரிபோலி, பல்கேரியா, பொஸ்னியா, ஹெர்ஸி கோவினியா, பிலிப்பைன் தீவுகள் முதலிய பல தேசங்களிலே இஸ்லாம் மார்க்கப் பாதுகாப்புக்கு விசேஷமான ஏற்பாடுகள் உண்டு.

நம் இந்தியா தேசத்தில் உள்ள இஸ்லாமிய சமஸ்தானங்களிலும், ஹிந்து சமஸ்தானங்களிலே சில வற்றிலும், முஸ்லிம்களின் வைதிக கருமங்கள் சரிவர நடைபெறுகின்றனவா என்று பார்த்துவர அதிகாரிகள் இருக்கிறார்கள். நிஜாம் ராஜ்யத்திலே நமது மார்க்கத்தைப் பாதுகாக்க வேண்டி, பிரத்தியேகமான இலாக்கா ஒன்றுண்டு. போபால் சமஸ்தானத்திலே காஜீ என்றும், முப்தீ என்றும், தனித்தனியே அதிகாரிகள் இருக்கிறார்கள். மேலும், உலமாக்களின் சபையென, மஜ்லிசுல் உலமா சபையும் இருந்து வருகின்றது. பரோடா ஓர் இந்து சமஸ்தானமாயினும், அங்கே நெடுங்காலமாக காஜீ எனும் அதிகாரி இருந்து வருகிறார். குவாலியர் சமஸ்தானத்திலும் முப்தீ என ஓர் அதிகாரி நியமனமாகி முஸ்லிம்களின் நலத்தை நோக்கி வருகிறார்.

பிரிட்டிஷ் இந்தியாவிலோ முஸ்லிம்களின் வைதிக நிலையும் சமூக நிலையும் மிக மிகச் சீர்கேடாக இருக்கின்றன. மார்க்க விவகாரங்கள் ஒழுங்கற்ற நிலைமையில் உள. மஸ்ஜிதுகளிலே பெரும்பாலானவற்றில் தொழுகையாளிகள் காணப்படுவது இல்லை ; சரியான மேற்பார்வை இல்லை. அதனுல் அம்மஸ்ஜிதுகள் பாழ்போல் தோன்றுகின்றன. பேஷ் இமாம்கள், முஅத்தின்கள் முதலியவர்களின் நிலைமையோ கேவலமாகும். அன்னவரின் நிலையை உடனே சீர்திருத்தவேண்டும். மத்ரஸாக்களோ கவனிப்பார் இல்லாமல் கிடக்கின்றன. மதப்பள்ளிக் கூடங்களோ பரஸ்பரம் தொடர்பின்றி மேன்மை பெறுமலுள. வக்பு சொத்துக்களின் நிலையைக் காணின் அனைவருக்கும் துக்கம் நெஞ்சை யடைக்கும். அச்சொத்துக்களைச் சிற்சிலர் தமது கைவசமாக்கிக்கொண்டு கண்டபடி செலவு செய்து வருகின்றனர்.

நம்மவரின் மத ஆரம்பப் படிப்புக்கோ தக்க ஏற்பாடு எதுவும் கிடையாது. தேசத்திலே பலர் இஸ்லாத்தை அறியாமல், விபரீதமாக நடக்கின்றனர். அதனுல் நம்மார்க்கத்துக்கும் அரசாங்கத்துக்கும் அபாயம் உண்டாகக் கூடும். விவாக விலக்கு, விவாகப் பிரிவு முதலியன அன்றாடம் ஆயிரக்கணக்கில் நிகழ்கின்றன. மார்க்கச் சட்டப்படி விவாகஞ் செய்துகொள்ளக்கூடாத முறையுள்ள பெண்களை மணமுடித்துக் கொள்வதும் மணஞ் செய்விப்பதும் ஆரம்பமாகிவிட்டன. ஆயினும் அவைகளை நன்கு கவனிக்க இந்தியாவிலே எங்கும் ஏற்பாடெதுவும் இலது. ஆதலால் அரசாங்க நீதிஸ்தலங்களிலே அவ்விவாக சம்பந்தமாகப் பல வழக்குகள் தொடரப்படுகின்றன. அந்த ஸ்தலங்களிலே தீர்ப்பளிக்கும் அதிகாரம் வாய்ந்தோருக்கு இஸ்லாமிய சட்டதிட்டங்கள் தெரியவரா. ஆதலால் தீர்ப்பிலே பெருந்தவறுகள் நேர்தல் வியப்பாமோ ? மேலும் முஸ்லிம்களின் வைதிக காரியங்களில் முஸ்லிம் அல்லாதார் தலையிட்டுத் தீர்ப்பு அளிப்பதால், நம்மவருக்குள்ளே வெறுப்பும் அதிருப்தியும் வெகுவாக உண்டாகின்றன.

நமது இந்தியா தேசத்தில் மதத் தன்ஸீம் இல்லை. எனவே முஸ்லிம் மகா ஜனங்களில் நடுத்தர வகுப்பினர், கீழ்த்தர வகுப்பினர் ஆகிய இருதிறத்தினரும் மிகுந்த கஷ்டமடைய நேருகின்றது. இவ்விதம் நம்மவரின் நிலைமையுளது என்று உணர விரும்புவோர், முஸ்லிம் பத்திரிகைகளில் பிரசுரமாகும் மார்க்க சம்பந்தமான வினக்களிலிருந்தே நன்கு கண்டு கொள்ளலாம். மார்க்கத்தையும் மஸ்ஜிதையும் பற்றிய வழக்குகள் புறமதத்தினரால் தீர்ப்பு அளிக்கப்பட்டு வருகின்றன. விவாக விலக்கு, விவாகப் பிரிவு, ஹறுமான நிக்காஹு, முறையற்ற பெண்ணை மணத்தல், ஆகிய இவை சம்பந்தமான வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவோர் யார்? முஸ்லிம்களா? புறமதத்தினர் அல்லவா? முஸ்லிம் மக்கள் இவற்றையெல்லாம் கவனித்து வருகிறுர்களா ? கவனித்துவரின், அத்தீமைகளைப் போக்க என்ன ஏற்பாடு செய்துளர் ?

இவை யனைத்தும் ஒருபுற மிருக்க, வக்பு சொத்துக்களின் நிலைமை என்ன? நம் தேசத்திலே அச்சொத்துக்களின் விலை மதிப்பு பல கோடியாகும். அவை எவ்விதம் பரிபாலிக்கப்படுகின்றன? அவற்றை ஈந்த புண்ணிய புருஷர்களின் கருத்துக்கு இசைய அவை நிர்வகிக்கப் படுகின்றனவா ? அவற்றிலே பெரும்பாகம் முத்தவல்லிகளின் சொந்த சொத்துப்போல் உளவா ? தர்ம சொத்துப் போல் உளவா? அவற்றை மேற்பார்வை பார்க்கும் முத்தவல்லிகள் கையாடியதும், கையாடுவதும் எவ்வளவு? என்ற விஷயங்களை முஸ்லிம்கள் எண்ணிப்பாராமல் வாளா விருத்தல் தகுமோ?

சுருங்கச் சொல்லின், இந்திய முஸ்லிம்களின் நிலைமை மிகவும் கேவலமாகும். வேறு எத்தேசத்திலும் முஸ்லிம் மக்கள் இவ்வளவு கேவலமான நிலைமையில் இருக்கவில்லை. எனவே, முஸ்லிம் மகா ஜனங்களும் மக்களைக் காக்க நிற்கும் அரசாங்கமும் அந்நிலையை உடனே கவனித்து, தக்க பரிகாரமும் சீர்திருத்தமும் செய்யவேண்டும். அரசாங்கத்தின் உயர்தர அதிகாரிகளும் நமது மார்க்கத் தலைவர்களும், ராஜீய சிரேஷ்டர்களும் உலமாக்களும், ஒரு கணமும் சும்மாவிராமல் ஒன்று கூடி யோசிக்கவேண்டும்.

அவைகளுக்கெல்லாம் பரிகாரந்தேட முன்னம் இருந்ததுபோல் அரசாங்க ஆதரவிலே மத இலாக்கா ஒன்றை உடனே ஏற்படுத்தவேண்டும். அந்த இலாக்காவின் தலைவரை ஷெய்குல் இஸ்லாம் என்றோ, அமீருஷ் ஷரீ அத் என்றோ, சத்றே ஜஹான்என்றோ, அல்லது வேறு எவ்விதமாகவோ அழைக்கலாம். அந்த அதிகாரியின் கௌரவத்தையும் அதிகாரத்தையும் அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும். அவரை முஸ்லிம் மகா ஜனங்களே தேர்ந்தெடுக்க வேண்டும். அவருடைய அதிகாரத்தின்கீழ் மாகாணங்களிலும், மாகாண உத்தியோகஸ்தர்களின்கீழ் நகரங்களிலும், அப்புறம் கிராமங்களிலும், படிப்படியாக உத்தியோகஸ்தர்கள் இருக்க வேண்டும். ஷரஈ மஸ்அலாக்களை அமல் நடத்துதல், மத சம்பந்தமாக முஸ்லிம்களுக்குள் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்தல், வக்புச் சொத்துக்கள், மஸ்ஜிதுகள், மத்ரசாக்கள் சரிவர நடைபெறுகின்றனவா என்று மேல் விசாரணை செய்தல், பத்வாக் கொடுக்கும் ஸ்தாபன மேற்படுத்தல் ஆகியவைகளை அந்த உத்தியோகஸ்தர்கள் கவனிக்கவேண்டும். அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுவோர், சட்ட ஞானம் வாய்ந்து, அறிவு விசாலங்கொண்டு, மதக்கலைகளில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். அந்த உத்தியோகத்திற்கென்று பிரத்தியேகமான போதனை முறைத் திட்டம் இருப்பதும் நல்லது. இவ்வாறில்லாமல், கண்டபடி எல்லோரையும் நியமித்து விடுவதென்றால், அது முஸ்லிம்களுக்கு மற்றோர் ஆபத்தாகத்தான் முடியும்.

இவ் வேண்டுகோளை முதன்முதலாக நமது முஸ்லிம் மகாஜனங்கள் ஆலோசிக்கவேண்டும்; அரசாங்கமும் தாமதமின்றி ஆராயவேண்டும். முஸ்லிம்கள் இந்த யோசனையை முழுமனதுடன் அங்கீகரிக்கக்கூடும். ஆனால் அரசாங்கத்தினர் என்ன செய்வார்களோ? யாமறியோம். அரசாங்கத்தின் ஆதரவு இல்லாதவரையில் இது நடைபெறுதல் எளிதன்று. ஆதலால் முஸ்லிம்களுக்கு இந்த உரிமை அளிப்பது நியாயமாகுமென்பதை மாத்திரம் அரசாங்கத்திற்கு ஞாபக மூட்டுகின்றோம். மேலும் இத்தகைய ஏற்பாடு இருந்தால், தேசத்தில் ஹிந்து முஸ்லிம் மாச்சரியம் வளராமல் குறையக்கூடும்; தேசமும் சுபிக்ஷமாக வாழவியலும். இத்தகைய ஏற்பாட்டைச் செய்வதாயின், மிகுந்த பணச் செலவு ஏற்படும் என்று கருதி, அரசாங்கம் அலட்சியமாக இருக்கக்கூடாது மனம் உண்டானால் இடமுண்டு என்பது பழமொழி. தேச அரசியலில் புதிய சீர்திருத்தங்களை ஏற்படுத்த சர்வ கக்ஷி மகா நாடு சீக்கிரத்தில் கூட்டப்படும் அல்லவா? இச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் யாவரும் மேற்சொல்லிய ஏற்பாடு தேவையென அரசாங்கத்தினருக்கு வற்புறுத்திக் கூறவேண்டும். சர்வ கக்ஷி மகாநாட்டில் கலந்துகொள்ளக்கூடிய முஸ்லிம் தலைவர்கள் மேற்சொல்லியவைகளிலும் கவனஞ் செலுத்தின், மிக்க நலமாயிருக்கும்.

ஷுரூயித்துஸ் ஸலாத்

தொழத் தொடங்குமுன், ஏழு காரியங்களைப் பேண வேண்டும். இன்றேல் தொழுகை நிறைவேறாது. அந்த ஏழுக்கும் ஷுரூயித்து ஸ்ஸலாத், அதாவது தொழுகையின் ஷரத்துகள், என்று பெயர். அவைகளாவன:— (1) உடல் சுத்தி, (2) உடை சுத்தி, (3) இட சுத்தி, (4) சரீரத்தில் மறைக்கவேண்டிய இடங்களை மறைத்து வைத்தல், (5) தொழுகை நேரம் (6) கிப்லாவின் திசையை முன் நோக்குதல் (7) தொழுவதாக நிர்ணயம் (நிய்யத்துச்) செய்தல்.

சரீர சுத்தி என்றால் உடலில் எந்த விதமான அசுத்தமும் இருத்தலாகாது என்பதாம். தொழுவதற்குமுன் தன் தேகத்தினுள்ள சகலவிதமான அசுத்தங்களையும் அகற்றுவது தொழுகையாளியின் முதன்மையான கடமை. ஆகவே பொதுவாக சுத்தத்தைப் பற்றி முதலில் கவனிப்போம். பின்னர் அவைகளின் வகைகளை ஆராய்வோம்.

சுத்தம்.

இஸ்லாம் மதத்தில் ஏகதெய்வக் கொள்கை மிகவும் முக்கியம். அங்ஙனமே முஸ்லிம்கள் செய்யும் வழிபாடுகளாகிய அமல்களில் சுத்தமும் முக்கியமாகும். அல்லாஹு தஆலாவுக்காகச் செய்யாத எந்த அமலும் பலனுள்ளது என்று ஒப்புக் கொள்ளப்படமாட்டாது. அதுபோலவே சுத்தமில்லாது போயின், எந்த வணக்கமும் ஒப்புக்கொள்ளப்படுவதில்லை. ஏக தெய்வக் கொள்கையை மதக் கொள்கைகளுக்கு மூலாதாரமாக நாம் கருதி இருப்பது போலவே, நம்முடைய வணக்கங்களுக்கு, சுத்தத்தையே மூலாதாரமாகக் கருதி இருக்கிறோம். இதனால்தான் "ஈமானில் பகுதி சுத்தம்" என நபிகள் நாயகமவர்கள் திருவாய்மலர்ந்தருளி இருக்கின்றார்கள்.

சுத்தம் என்றால் என்ன? இது சம்பந்தமாக இஸ்லாம் என்ன விதித்திருக்கிறது? என்பதை யாரும் கவனிக்கவேண்டும். சுத்தம் என்பது அகச்சுத்தம், புறச்சுத்தம் என இருவகைப்படும். நற்குணம், நன் நம்பிக்கை ஆகியவைகள் பெரும்பாலும் இருதயத்தையே சார்ந்தன.

"இஸ்லாம் மதமும் ஏனைய மதங்களைப் போல் அகச் சுத்தத்தைப் பற்றி மாத்திரம் கூறலாம். புறச் சுத்தத்தைப்பற்றிக் கூற வேண்டிய அவசியமே இல்லை. அகச்சுத்தமே மதத்திற்குப் பிரதானம். உதாரணமாக, "நிச்சயமாக அல்லாஹ் உங்களுடைய இருதயங்களைக் கவனிக்கிறானே அல்லாது உங்களுடைய (வெளி) உருவங்களையல்ல" என்று திருமறை கூறுகிறது. ஆகவே மனத்தகத்து அழுக்கு இல்லாதிருக்க வேண்டும்; வெளித் தோற்றத்தில் பகட்டான உடையும், பரிசுத்தமும் பகட்டும்கொண்டிருத்தல் மாத்திரம் பயனில்லை. அழுக்கான ஆடையும் மாசு படிந்த மேனியும் கொண்டு அகத் தூய்மை வாய்ந்த ஒருவனது முன்னிலையில், பரிசுத்த உடையும் உடலும் தாங்கிய வஞ்ச நெஞ்சத்தான் ஒரு பொருட்டாக மதிக்கப்படான். இஸ்லாம் மதம் அகத் தூய்மையை வலியுறுத்துவதுடன், உடல், உடை, இடம் ஆகிய புறத்தூய்மையையும் வற்புறுத்தும். புறத் தூய்மையையே இஸ்லாம் பெரிதும் வற்புறுத்துகிறது. அகத்தூய்மையை அவ்வளவாக வற்புறுத்தவில்லை.", என்று இஸ்லாம் மார்க்க விதிகளை யுணராத புறநோக்காளர் புகலுவர்.

அது சரியன்று. இஸ்லாம் மதத்தில் அகத் தூய்மையைக் காட்டிலும் அருமையான தொன்றுமில்லை. அகத் தூய்மை யின்றேல், எந்தக் கருமமும் ஈடேற்றம் தராது. அகத் தூய்மையுடன் புறத்தூய்மையையும் வணக்கத்தின் விதியாக இஸ்லாம் மார்க்கம் இயம்புகின்றது. புறச் சுத்தத்தை இஸ்லாம் மதம் வற்புறுத்தி இருப்பதற்குக் காரணம் யாது? மக்களின் சுகாதார வாழ்வை விரும்புவதேயாம். பலவகைப் பிணிகளுக்கும் மூலகாரணம் புழு பூச்சிகளே. அப் புழு பூச்சிகள் அசுத்தமான இடத்தில் உற்பத்தி யாகின்றன. இது விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியின் முடிவாகும்.

திரேகத்திலுள்ள மயிர்க்கால்கள் எப்பொழுதும் சுத்தமாக இருக்கவேண்டும். ஏனெனில் அழுக்கு தூசு முதலியவைகளால் சரீரத்தின் மயிர்க்கண்கள் அடைபட்டு விட்டால், திரேகத்தின் உள்ளேயிருக்கும் அசுத்தமான விஷநீர் வெளியில் வராமல் தடைபடும். இதனால் பலப்பல வியாதிகள் உண்டாகும். எனவே சுத்தம் சுகவாழ்வுக்கு அடிப்படை. சித்தமும் சிந்தையும் பரிசுத்தமாக இருக்கவேண்டுமாயின், சரீர சுகமும் சுத்தமும் அவசியமாகும். இன்றேல் சிந்தை திரியும், சித்தம் மாறுபடும். இதனால் தான் இக் காலத்து டாக்டர்கள் யாவரும் தங்கள் வைத்தியமுறையில் சுத்தத்தை முதன்மையாகக் கொண்டிருக்கின்றனர்.

இருதய சுத்திக்கு இன்றியமையாத யாவற்றையும் இஸ்லாம் தன்னுடைய வணக்கங்களுக்குள் ஏற்படுத்தி யுளது. ஆயினும் புறத்தூய்மை யில்லாமல், அகத்தூய்மை யில்லை என்பதை, இஸ்லாம் ஆரம்பமுதலே நன்கறிந்து கொண்டிருப்பதை அனைவரும் கவனிக்க வேண்டும்.

உலுவின் விவரம்

தொழுகைக்கு முன் உலுச் செய்தல் இஸ்லாத்தில் பர்லாகும்; அதாவது கடமையாகும். இதர மதங்களிலும் ஸ்நானம் முதலிய விதிகள் உள; என்றாலும், உலுச் செய்தல் வேண்டும் என்பது இஸ்லாத்தில் தவிர வேறெந்த மதத்திலு மில்லை; அன்றியும் சுத்தத்திற்கு வேண்டிய எல்லா முறைகளும் இந்த உலுவில் ஏற்படுத்தப்பட்டுள. உடல் சம்பந்தமான சுகாதாரத்திற்கு வைத்திய நிபுணர்கள், எந்தெந்தக் காரியங்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டுமெனக் கூறி இருக்கின்றனரோ, அந்தந்தக் காரியங்களெல்லாம் இந்த உலுவில் அமைக்கப்பட் டிருக்கின்றன. கடந்த பதின்மூன்று நூற்றாண்டுகளாக இஸ்லாம் மதம் எந்த விஷயங்களைப் போதித்து வருகிறதோ, அதன் நன்மைகளையும் பிரயோஜனங்களையுமே இப்பொழுது விஞ்ஞான சாஸ்திரிகள் உணர்ந்து ஒப்புக்கொள்கின்றனர்.

உலுச்செய்வதில் கை, முகம் கழுவுவதுமல்லாமல், நல்லவிதமாக வாய் கொப்பளிக்க வேண்டும்; பற்கள் துலக்கவேண்டும்; நாசித் துவாரங்களை நன்றாகக் கழுவ வேண்டும்; முழங்கை உள்படக் கை கழுவவேண்டும். தலையிலும் ஈரக்கை கொண்டு துடைக்கவேண்டும். காதுகள் ஈரக் கைவிரல்களால் துடைக்கப்படும். காலிரண்டும் கரண்டைவரை கண்டிப்பாகக் கழுவப்படும். இவ்விதம் கழுவுவதால் உடலத்தில் சாதாரணமாக மூடப்படாமலிருக்கிற அவயவங்க ளனைத்தும் சுத்தஞ் செய்யப்படுகின்றன. இந்த அவயவங்களில் தூசு தும்பு முதலியன படிந்திருக்கலாம். ஆதலால் அவை எல்லாம் நீங்க ஒவ்வோர் உறுப்பும் மூன்று முறை கழுவப்படவேண்டும். இவ்வாறு சுத்தி செய்யும் ஒவ்வொரு காரியமும் வயித்திய முறைக்கு ஒத்ததாகும். பெரும்பாலான சமயங்களில் மூடப்பட்டிருக்கும் உறுப்பு வாய் தான். பற்களுக் கிடையில் பதார்த்தங்கள் சிக்கிக்கொண் டிருக்கலாம். இதனால் துர்நாற்றம் உண்டாகும்; பற்களுங்கூடக் கெட்டுப் போகின்றன. பற்கள் கெட்டுப்போயின் அதனாலேற்படும் கெடுதல் குடலைத் தாக்கி ஜீரணக் கருவிகளைக் கெடுத்து விடுகிறது. இவ்விதமான தீங்குகளெல்லாம் ஏற்படாமல் காப்பதற்காகவே மிஸ்வாக்குச் செய்தல் அதாவது பற்குச்சியால் பல் தீட்டுதல் சுன்னத்து என ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இறைவன் கட்டளை

பொதுவாக விரல்களிலும், சிறப்பாக கால் விரல்களுக்கு இடையிலும், வியர்வை, அழுக்கு தூசு முதலியனவை படிந்து ஒன்று சேருவதால், பலவித பிணிகளேற்படக் காரணமாகின்றது. இதனால்தான் விரல்களை நன்றாகக் கோதிவிட்டு இடைகளிலிருக்கிற அழுக்கு முதலியவைகளை நீக்குவது உலுவின் சுன்னத்துகளி லொன்றாக இருக்கிறது. தொழுகை போன்ற வணக்கங்களுக்கு முதற்படியாக உள்ளது உலு. இந்த உலுவில் புறத்தூய்மை உண்டாகின்றது. அஃதுடன் அகத்தூய்மையும் ஏற்படவே, "தௌபா" "இஸ்திஃபார்" களையும் உலுச்செய்யும் போதே ஓதவேண்டும். அதாவது "நாயனே! பாபங்களைவிட்டு விலகித் தௌபாச்செய்தவர்களில் என்னையும் ஆக்குவாயாக. மேலும் மிகவும் சுத்தத்தைக் கொண்டவர்களில் என்னையும் ஆக்கி அருள்க," என்ற கருத்துள்ள "துஆ" வை ஓதவும் கட்டளை உண்டு.

மேலும் இறைவன் தனது திருமறையின் கண், "மேலும் அல்லாஹ் தௌபாச்செய்தவர்களை நேசிக்கின்றான். இன்னும் நல்லவிதமா

கச் சுத்தஞ் செய்து கொள்பவர்களையும் நேசிக்கின்றான்" என்று சிறப்பாகக் கூறி இருக்கிறான். ஒவ்வொரு முஸ்லிமும் தினசரி ஐந்து முறை உடல் சுத்தி செய்ய நேரிடும். அவ்வாறு ஐந்துமுறை செய்யாவிடினும், குறைந்தது மூன்று முறையேனும் செய்யவேண்டும். ஆனால் ஒவ்வொரு நேரத்துத் தொழுகையிலும் புதிதாக உலுச்செய்து கொள்வதே ஏற்றமாகும்.

ஜனங்கள் தங்கள் சரீர சுகத்தைப் பெரிதும் போற்றுகின்றனர். இதற்காக நாளுக்கு நாள் வயித்திய சாஸ்திரத்தில் கூறப்படும் சுகாதார முறைகள் மதிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறிருந்தும் வயித்திய ஆலோசனை எத்தனை பேரை இத்தகைய தூய்மையாளராக ஆக்கியுளது? எத்தனைபேர் இதனை அனுஷ்டித்து வருகின்றனர்? அன்னவரின் தொகை கொஞ்சமே. இஸ்லாம் மதமோ தன்னுடைய ஒரு சிறு கட்டளையினால் சுகாதார வழியில் மக்களை நெடுந்தூரம் செலுத்துகின்றது என்பதை அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தினசரி சுத்தஞ் செய்யவேண்டிய இந்த முறையைத் தவிர, ஜனபத்துக்காக ஸ்நானஞ் செய்வது பர்லாகும். குறைந்த பக்ஷம் வாரம் ஒரு முறையேனும் வெள்ளிக்கிழமை யன்று நீராடி சுத்தமான உடை யணிந்து, அத்தர் முதலிய வாசனைத் திரவியங்கள் பூசிக் கொள்வது சுன்னத்தாகும். நீராடுவதென்றால் தொட்டிக்குள் உட்கார்ந்து குளிக்கலாகாது; அவ்வாறு செய்வதால், திரேகத்தி லிருந்து பிரிந்த அழுக்குகள் மறுபடியும் மயிர்க்கண்களுக்குள் சேர்ந்து விடும். ஆதலால் மக்களின் சுகவழியைக் கருதியே, நீராடல், உலுச்செய்தல் முதலியவற்றை இஸ்லாம் மார்க்கம் கட்டளையாக ஆக்கியுளது.

நீராடல்.

நான்கு காரணங்களால் ஸ்னானஞ்செய்வது கடமையாகும். (பர்லு)

காம இச்சையுடன் இந்திரியம் ஸ்கலிதமாதல். நித்திரை செய்யும் வேளையில் சொர்ப்பன ஸ்கலிதமானாலும் சரி, பெண்களுடன் அல்லது வேறு பிராணியுடன் சம்பந்தப் பட்டு ஸ்கலித மானாலும் சரி, எல்லா விதத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆண் குறியின் முனையானது மர்மஸ்தானத்திற்குள் மறைதல். மாத விடாய் வந்து நிற்றல்; பிரசவத்திற்குப் பின் வெளியாகும் தீட்டுத் தொடக்கு நிற்றல். ஆகவே இந்த நான்கு நிலைமைகளில் ஏதேனு மொன்று ஏற்பட்டாலும் உடனே நீராடுவது கடமையாகும்.

ஜும்ஆத் தொழுகைக் காகவும், ஈதுப் பெருநாள்களின் தொழுகைகளுக் காகவும் ஹஜ்ஜுக்குச் செல்வோர் இஹ்ரும் கட்டுவதற் காகவும் குளிப்பது சுன்னத்து. ஹஜ்ஜுச் செய்பவர்கள் அறபாத் மைதானம், முஸ்தலிபா ஆகிய இடங்களில் தங்குவதற்காகவும், ஹறம் ஷரீபிற்குச் செல்லுவதற்காகவும், நபிகள் நாயகமவர்களின் மாண்புமிக்க றௌலா ஷரீபைத் தரிசிப்பதற்காகவும், பறுஅத் இரவு, கத்றுடைய இரவு, அறபாத் நாளின் (அதாவது துல்ஹஜ்ஜு மாதத்திய 9ந்தேதி) இரவு, ஆகிய இரவுகளில் இறைவனை வணங்குவதற்காகவும், ஜனாஸாவைக்குழிப்பாட்டிய பின்பும், பயித்தியக் காரனுக்குப் பயித்தியம் நீங்கிய உடனும், சித்தம் மயங்கித் தெளிவு பெற்ற பின்னும், போதை மாறிய பின்பும், பாபங்களுக்காக தௌபா செய்த பின்பும், புதிய உடை தரிப்பதற்காகவும் ஸ்னானஞ் செய்வது முஸ்தஹப்பு; ஸ்னானஞ் செய்வதை விதியாக்கக் கூடிய பல காரணங்கள் நேர்ந்தாலும் ஒரு தரம் ஸ்னானஞ் செய்தால் போதும். எவ்வாறெனில், ஒருஸ்திரி தன் கணவனுடன் வீடு கூடி இருக்கிறாள் என்று வைத்துக் கொள்வோம். இதற்காக ஸ்னானஞ் செய்வது அவ்விருவருக்கும் கடமையாகும். இக்கடமையை நிவர்த்திக்கு முன்பே அந்த ஸ்திரீக்கு மாத விடாய் வந்து விட்டது. ஆகவே அவள் மாத விடாய் நிற்கும் வரையில் ஸ்னானஞ் செய்யாதிருந்து பின்பு ஸ்னானஞ் செய்வாளாயின், அவ்விரண்டு காரணத்திற்காக ஏற்பட்ட கடமைகள் யாவும் நிவர்த்தியாகி விடும். இத்தன்மை போலவே அவளுடைய கணவன் ஸ்னானஞ் செய்யாது நித்திரை செய்து சொற்பன ஸ்கலிதமாகுமாயின், இவ்விரண்டிற்கும் சேர்த்து ஒருதரம் ஸ்னானஞ் செய்வது போதுமானதாகும்.

புத்தியானது தப்பிலியா?

மௌலானா ஸாஹிதுல் காதிரி எழுதியது:—

நீங்கள் புத்திசாலிகள், அறிவாளிகள், முற்போக்கான எண்ண முள்ளவர்கள், முதல்தரமான தத்துவநிபுணர்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்வேன். ஆனால், உங்களது புத்தியில் தப்பும் தவறும் ஏற்படா என நான் ஒப்புக்கொள்ளேன். எக்காலத்திலும் புத்தி தடுமாற்றம் அடைவதில்லை என்பதை எந்த அறிவாளியும் ஏற்றுக்கொள்ள ஒரு நாளும் இயலாது.

சதா இலங்கிக்கொண்டிருக்கும் நட்சத்திரம் போன்றது புத்தி. தனது அடியாருக்கு இறைவன் அளித்த பாக்கியங்களில் பெரிதும் சிறப்புடையது புத்தியே.. நன்மை இன்னது தீமை இன்னது என்றும், இலாபம் எது நஷ்டம் எது என்றும், புத்திகொண்டே மனிதன் பகுத்தறிகின்றான். ஆயினும் "புத்தியானது தப்பிலி'' என நான் கூற மாட்டேன். ஒருவன் எத்துணை சிறந்த அறிவாளியாயினும், அவன் தவறாமல் இருக்க முடியாது. தாங்க முடியா மானக்கேடு உண்டாகக்கூடிய அவ்வளவு பெரிய தவறும் மனிதன் இழைப்பதுண்டு. ஆதலின், தனது புத்தி தப்பிலி என்றும், தான் எக்காலத்தும் தவறியதில்லை என்றும், இன்றுவரை எந்த மனிதனும் துணிந்து கூறியதில்லை. எனவே, "எங்களுடைய புத்தி எப்பொழுதும் தப்பியதில்லை'' என நீங்கள் கூற முடியுமா?

நாத்திக நிலை

"மதம் என்பது மதிக்கத்தக்க ஒன்றன்று. மதம் என்பது மனித இயற்கைக்கு ஒருவழி காட்டியாகவே இருக்கிறது. அது மனிதனை பந்தப்படுத்தி வைத்திருக்கிறது. இஃதே மதத்தின் தன்மை. நான் எனது இனத்திருக்கும் மனித இயற்கைக்கும் மாறாக எக்காரியமும் செய்யேன். எனவே, நான் ஏன் மதத்தைப் பின்பற்றவேண்டும்? அதற்கு அவசியமே இல்லை. மதத்தைப் பேணி நடப்போரிலே பெரும்பாலார் மதியிலிகள்; அன்னவர் அறிவிலிகளாகவும் இருக்கின்றனர். ஆண்டவன் ஒருவன் உளன் என்பது அவர்களின் எண்ணம். ஆயினும், மெய்யாகவே ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான் என அவர்கள் நம்பி நடப்பதில்லை. ஆண்டவன் என் கண்ணினுக்குப் புலப்படவில்லை, அவனது வடிவத்தை யானறியேன். ஆதலின் ஆண்டவன் ஒருவன் உளான் என நான் ஏற்றுக்கொள்ளேன். பழங்காலத்து ஆஸ்திகத்தை நான் ஒருகண நேரமும் அங்கீகரியேன்''. இவை உங்களது புத்திசாலித்தனமான சொல்பொழிவாகும். அது குறித்து அடியேனும் ஒன்று சொல்ல உத்தரவு உண்டா? நல்லது.

உங்களது கூரிய மதி மதிக்கத்தக்கதே. ஆயினும், மனிதனிடம் ஆன்மா என்றும் உடலம் என்றும் இரண்டு பொருள்கள் உள. ஆன்மாவும் சடலமும் சேர்ந்த பின்பே, மனிதன் உண்டாகின்றான். மனிதனது மெய்யைக் காக்க எத்துணையோ சட்டதிட்டங்கள் செய்யப்பட்டுள. வணங்காமுடி மன்னவனது நாடாயினும் சரி, யதேச்சாதிகார இறைவனது தேசமாயினும் சரி, ஜனநாயக தத்துவம் ததும்பும் குடியரசுள்ள பூமியாயினும் சரி, அங்கெல்லாம் மனித யாக்கையைக் காக்கக் கருதி, கிரிமினல் லா என்றும், சிவில் லா என்றும், வித விதமான சட்டங்கள் உள. அச்சட்டங்களின் கருத்து யாது? நாகரிகம் என்று சொல்லிக்கொண்டு, மனிதத் தன்மைக்குப் புறம்பாக ஒருவன் நடத்தலாகாது; தனது ஐம்பொறிகளில் எதுவும் பிறருக்குக் கேடான கருமம் புரியக் கூடாது; இதுவே அச்சட்டத்தின் முக்கிய கருத்தாம்.

அச் சட்ட விதிகளில் ஒன்றை மீறி நடப்பினும், கடுமையான தண்டனை கண்டிப்பாகக் கிடைக்கும். இதனை அனைவரும் அறிவர்,

இனி மானிடன் நோய் கொண்டால், அல்லது காயமுண்டால், ஏற்ற சிகிச்சை புரிய உடனே ஏற்பாடு நடக்கும்; வைத்தியர் வரவழைக்கப்படுவர்; மேலான மருந்துகள் கொடுக்கப்படும். இவை எல்லாம் ஏன் ? உடலைக் காக்கவும், அதனைச் சீர்திருத்தவுமேயாம். அங்ஙனமே ஆன்மாவைச் சீர்திருத்தவும் ஏதேனும் உபாயம் தேடவேண்டியது அவசியம் அன்றோ? கண்ணுக்குப் புலப்படும் வெளியுலகில், கால வேறுபாடுகள் உண்டு; காற்று கனமாக வீசிக் கிளம்பும்; கடல் பொங்கி யெழும்; இடி முழக்கம் உண்டாகும், மின்னல்கள் தோன்றும்; அங்ஙனமே அகஉலகாம் ஆன்ம உலகிலும் மாறுபாடுகள் நிகழா நிற்கும்; அஞ்ஞானம் எனும் இருள் சூழ்ந்து கொள்ளும்; அகவிருளை அகற்ற அறிவெனும் ஜோதி அவசியம்; அக உலகிலும் காற்று கிளம்பும்; பருவகாலங்கள் மாறிவரும், சுருங்கச் சொல்லின், புறஉலகில் உள்ளன வெல்லாம் அக உலகிலும் நிகழாநிற்கும்.

இருவகை உலகங்களின் நிகழ்ச்சிகளால் உடலத்திற்கு ஊறு நேருகின்றது. அக உலக நிகழ்ச்சிகளால் இதய உலகிலே அந்தகாரம் பரவி நிற்கும். அதனால் பலவகை அபாயங்கள் உண்டாகும். ஆதலின், உடல் நலத்தைப் பேண எங்ஙனம் சட்டதிட்டங்கள் அவசியமோ, அங்ஙனமே ஆத்ம நலத்தைக் காக்கவும் சட்டதிட்டங்கள் அவசியமாம். எனவே, உடல் உயிர் ஆகிய இரண்டினுக்கும் இடர் ஏற்படா வண்ணம் காப்பது மதம் என்பதேயாம். அம்மதமே மனிதருக்குப் பல வகையிலும் சஞ்சீவி போன்றது.

மதமே வழிகாட்டி

உடலையும் உயிரையும் நன்கு பேண, எந்த அரசாங்கத்தின் சட்டமும் போதாது: பூரணமான பலனும் தராது. மதம் ஒன்று தான் மனித இயற்கையை நன்கு போதிக்கும் வழிகாட்டியாகும்; சீர்திருத்தும் சஞ்சீவியுமாம். இதனை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? இல்லையேல் ஒரு கேள்வி. குற்றமிலா ஒருவனை ஓர் அநியாயக்காரன் கொலைபுரிந்து விடுகிறான்; தன் சுயநலத்தையும் பெருமையையும் நாடி, நிரபராதியை மானபங்கம் செய்கிறான்; எளியாரை வலியார் வாட்டுகின்றனர்; கள்வர் பிறருடைய காசைக் கவருகின்றனர். அத்தகைய மாபாவிகள் அரசாங்கத்தினால் சிட்சை பெறாமல் தப்பிவிடின், அன்னவரைத் தண்டிக்கும் வல்லமை கொண்டது எது? மதத்தைத் தவிர ஒன்றுளதோ? மதத்துக்கு உள்ள சக்தி மலையினும் பெரியது; கடலினும் பரந்தது; மக்களைச் சீர்திருத்தி ஒழுங்குபடுத்துவதும் மதத்தின் மகிமையான சக்தியேயாம். இந்த உண்மையை எண்ணிப் பாருங்கள்.

மதச்சட்டம் இன்றேல், அதன்செல்வாக்கும் இன்றேல், உலகம் என்னாகும், உயிர்த் தொகைகளின் கதி யாதாகும்? பூவுலகிலே அமைதி, சாந்தம், கட்டுப்பாடு, ஒழுக்கம், ஆசாரம், நாகரிகம், பெருந்தன்மை, பரோபகாரம் முதலியன இருக்குமோ? பேரளவும் இல்லாமல் அவை மறைந்து போய்விடுமே. அரசாங்கம் என்பதும் சமூகம் என்பதும் நிலைக்குமோ?

மதத்தைக் குலைக்கச் சிலர் கிளம்பியுளர். எனவே மார்க்கத்துக்கு விரோதமான போர் மூண்டுளது; இதனை நான் அறியாமலில்லை. அதற்குக் காரணம் யாது? மதம் மதம் என்று சொல்வோரிலே சில பலர் வாயளவில் நிற்கின்றனர்; மதப்போதனைகளின்படி நடப்பதில்லை; மதத்தின் தத்துவத்தை ஒரு சிறிதும் உணராமல் இருக்கின்றனர். மதத்தைத்தழுவியுள்ள குழுவினருடன் நெருங்கிப் பழகின், அன்னவரிடம் படபடப்பு, பொறாமை முதலிய தீக்குணங்கள் இருப்பதைப் பார்க்கலாம். மதம் என்பது வீண் பேச்சோ? அன்று! மதத்தை நன்கு தெரிந்து, அதன்பால் திடமான நம்பிக்கை, பற்று, ஆர்வம்கொள்ளல் வேண்டும். மெய்யாகவே மதம் மதிக்கத் தக்கதாகும்; அதன் ஏற்றத்தை, அதன்பெருமையை, நாம் ஒரளவுபடுத்தி உரைக்க இயலாது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ளின், மதத்தின் இரகசியத்தை, அற்புதத்தை, அரிய தத்துவத்தை அறிந்து கொள்ளுதல் உங்கள் கடமையாகும். உங்களுக்குத் திருப்தியும் சாந்தியும் ஆனந்தமும் உண்டாகும் வரையில், மதத்தை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். சம்பிரதாயத்திற்காக ஒரு மதத்தை ஏற்றுக்கொள்ளுதல் மனச்சாட்சியை விட்டுக் கொடுப்பதாகும்; அன்றியும் கத்திகொண்டு கண்ணைக்குத்திக் கொள்வதற்கும் நிகராம்.

மதத்தின் கடமை

குறிப்பிட்ட ஒரு வகை உடை தரிப்பதும், ஒரு விதமான நாகரிகம் கொள்வதும், ஒரு வகையான ஆசாரம் அனுஷ்டிப்பதுமாகிய இவைமட்டும் மதம் எனப்படா. அல்லாஹு தஆலாவிட மிருந்து நமக்குப் போதிக்கப் பட்டுள்ள மெய்யான-நேரான-சத்தியமான-பாரமார்த்திகப் பாதைக்குத்தான் மதம் என்று பெயர். அப்பாதையிலே ஒழுக்க உயர்வு, மனத்தூய்மை, அகத்துறவு, ஆன்ம சுத்தி, முதலியவற்றிற்குரிய நேர்வழிகளும் விளக்கப்பட்டுள. மானிடன் தனது எஜ மானனுகிய அல்லாஹ்வுக்கு வழிப்பட்ட வனுக இருக்கவேண்டும்; அவனுடைய கட்ட ளைக்குக் கீழ்ப்படியவேண்டும்; அவனுடைய அருளையடைய முயலவேண்டும். இவையே மதத்தின் முதன்மையான நோக்கங்கள்.

இவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்கையில், இஸ்லாத்தைப் பார்க்கிலும் ஏற்றமுடைய மதம் இவ்வுலகத்தில் எங்கும் இல்லை என்பது புலனுகும். இஸ்லாமே உலகத்தில் ஒப்பற்ற மதமும், உலகம் உள்ளவரையில் நிலைத்திருக் கக் கூடிய மதமுமாம். உண்மையிலேயே இறைவன் என ஒருவன் இருக்கிறுனு? இருந் தால் அவன் ஏன் நம் கண்ணினுக்குத் தென் படுவதில்லை? என்று சிலர் கேட்கலாம். அல் லாஹு தஆலா என ஒருவன் இருக்கிறுன். மனிதனது கண்ணுக்கு ஏன் அவன் புலப்பட வில்லை எனில், மனிதனது கட்புலன் மிகப் பலவீனமானது. அது எதனையும் பார்க்கக் கூடிய ஆற்றல் கொண்டிருக்கவில்லை; எல்லா வற்றையும் பார்க்கும் சக்தி அதற்கு இருக்கு மாகில், காற்று, ஆன்மா இவைகளை அக்கட் புலன் காண முடிகிறதா? இரண்டையும் கண் ணுல் கண்ட மனிதன் ஒருவனும் இல்லை. எனவே புன்கண்ணுக்குப் போதிய சக்தி இல்லை என்பது பிரசித்தம்.

இறைவனது உண்மையை உண்மையி லேயே உணர்ந்துகொள்ள உங்களுக்கு ஆவல் இருப்பின், ஒரு விஷயத்தை ஆராய்ந்து பாருங்கள். ஒவ்வொரு பொருளையும் உண் டாக்கினவன் ஒருவன் உண்டு; அங்ஙனமே ஒவ்வொரு சிருஷ்டிக்கும் கர்த்தா ஒருவன இருக்கவேண்டும். எனவே உலகின் பல பொருள்களை நாம் பார்க்கையில், அவற்றைப் படைத்தவன் ஒருவன் இருக்கிறுன் என் பதை ஒப்புக்கொள்ளவேண்டும். இயற்கைப் பொருள்களைப் பார்க்கையிலும் அவைகளைச் சிருஷ்டித்த அல்லாஹு தஆலாவை ஒப்புக் கொண்டு அவனிடம் விண்ணப்பம் செய்தல் அவசியம்.

மாதர் பகுதி

ஒரு முஸ்லிம் மாது எழுதியது

நீடாழி யுலகத்துள்ள சிருஷ்டிகள் யாவும் ஒரே விதமாக இல்லை. பற்பல விதங்க ளாகவும், பலப்பல வகைகளாகவும், நானுவித பிரிவுகளாகவும் அவைகள் வேறுபட்டுள. இவ்வாறு இறைவன் தன் சிருஷ்டிகளில் பல்வேறு பிரிவு செய்திருப்பது போலவே அவ்வவைகளுக்குத் தக்க வேலைகளையும் கட மைகளையும் நிர்ணயித்து, அவற்றிற்கு ஏற்ற வாறு உடலங்களையும் அமைத்திருக்கிறுன்.

உயிர்களின் கடமைகள் பலவிதமாக இருப் பது போலவே அவற்றின் வாழ்வுக்கு அவசிய மானவைகளும் பலவிதமாகும். ஆகவே, ஒவ் வொரு வகைக்கும் அதனதன் தேவைக்குத் தகுந்த அவயவங்கள் பரம்பொருளாகிய அல்லாஹ்த ஆலாவால் அளிக்கப்பட்டுள. பொதுவாக ஜீவவர்க்கங்களை எடுத்துக்கொள் வோம். ஒட்டகத்தின் உணவோ காட்டிலுள்ள முட்களும் முறட்டுப் புற்களுமாம். அதற்குத் தகுந்தவாறே ஒட்டையின் நாவும் பற்களும் அமைந்திருக்கின்றன. புலியோ மாம்ச பக்ஷ ணி. ஆதலின் காட்டிலிருக்கும் மிருகங்களை அடித்துத்தின்பதற்கேற்றவாறு, அதன் முன் னங்கால் உறுதியாயுள்ளன; புலியின் நகங்கள் ஈட்டியினும் அதிகக்கூர்மை வாய்ந்தவை. இவ்

விதமான ஏற்பாடே உலக இயல்பு எனப் படும. ஆகவே ஒவ்வொரு வர்க்கமும் தனது இயற்கையிலேயே ஏற்படுத்தப்பட்ட நியதிகளை விட்டு வழுவுமாகில், உலக இயல்பு அல்லது உலக அமைப்பின் அஸ்திவாரம் ஆட்டமெடுத்துவிடும். இதையேதான், "எவன் ஒவ்வோரு வஸ்துவுக்கும் அதனதன் (பரிபூர்ணமான) வடிவத்தைக்கொடுத்து (அவைகளுக்குள்ள தோண்டை நிறைவேற்ற) நேரான வழியைக் காட்டினனே அவனே எங்களுடைய றப்பாக இருககிறான்' என்றும், "நிச்சயமாக நாம் ஒவ்வோரு வஸ்துவையும் ஒரு திட்டத்துடன் படைத்திருக்கிறேம்' என்று திருமறையில் கூறுகிற்கும்.

மனிதனுக்கு சுயேச்சையே பிறப்புரிமை என்பதில் சந்தேகமில்லை. இந்த சுயேச்சை உணர்ச்சி அவனுடைய ஒவ்வொரு செயலிலும் வெளியாகிறது. பிறப்பிலுள்ள சுயேச்சையுரிமையை நாம் ஒப்புக்கொள்ளு மிடத்து, மனிதனுக்கு இறைவனல் இயற்கையிலேயே ஒப்புவிக்கப்பட்ட கடமைகளை அவன் நிறைவேற்றுவது உலக அமைப்பு அல்லது உலக திட்டத்தின் ஓர் அம்சம் என்பதை யாவரும் மறக்கலாகாது

மனிதனிடத்தில் பலவிதமான சக்திகள் அமைந்துள. நல்ல காரியங்களைச் செய்வதற்கு அவனை ஒரு சக்தி ஒரு சமயம் தூண்டினல், தீய காரியங்களைச் செய்யவும் ஒரு சக்தி வேறொரு சமயம் அவனைத் தூண்டும். அவனுக்கு எண்ணற்ற எண்ணங்களும் உணர்ச்சிகளு முண்டாகும். அவ்வுணர்ச்சிசிகள் தலைமிஞ்சி விடும்போழ்து, மனிதன் தன் அறிவையும் உணர்வையுங்கூட இழந்து விடுவான். கல்வியறிவினலும் பிறருடைய சேர்க்கையாலும் ஏற்படக்கூடிய பிற உணர்ச்சிகள் சில சமயங்களில் மேற்கண்ட உணர்ச்சிகளுக்குப் பக்கபலமாக இருந்து அவனை ஆட்டிவைப்பதுண்டு. அச்சமயம் மனிதன் தன் சுய அறிவை யிழந்து, எடுப்பார் கைப்பொம்மைபோல் இருக்க நேரும். தவிர, தன் கடமைகளையும் அவன் மறந்துவிடுவான். மேலும் மற்றவர்களின் கடமைகளையும் அவன் லக்ஷியம் செய்யான். இத்தகைய நிலையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள அவனது கல்வி கேள்விகள் கைகொடுப்பதில்லை. அவன் கற்ற தத்துவ சாஸ்திரங்களும் யுக்தி சாஸ்திரங்களும் உதவிபுரியாமற்போம்.

ஆதலால், சமூக நலத்தைக் கருதியும் உலக ஒழுங்கை உன்னியும், மனிதனது பிறப்புரிமையை மார்க்கபோதனைகளும்,நாகரிக விதிகளும் ஓரளவுக்கு உட்படுத்தி வைத்துள. மேலும் ஒவ்வொரு வர்க்கத்தினரின் இயற்கைக் கடன்கள் யாவை என்பதையும் அவைகள் வகுத்து வைத்திருக்கின்றன. அந்த வரம்புக்கு உட்பட்டு அவன் எவ்வளவு சுதந்திரத்தை அனுபவிக்க விரும்புகிறனே அவ்வளவையும் அனுபவிக்க அவனுக்கு உரிமை யுண்டு. மேற்கண்டவாறு வகுக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்ய முடியாமல் தடை செய்யும் எதுவும் குற்றமென மார்க்கமும் நாகரிகமும் குறிப்பிடாமலில்லை.

இனி நாம் நமது பெண்மணிகளைப்பற்றிப் பேசுவோம். அவர்களின் கடமைகள் என்னென்ன? அவர்களுக்கு எத்தகைய சுதந்திரம் ஏற்றது? எம்மாதிரியான சுதந்திரம் அவர்களது கடமைகளைச் செய்யவிடாது தடுக்கும்? என்ற விஷயங்களை ஆராய்தல் அவசியமாகும்.

உலக நலத்தை மதித்து, மானிட உற்பத்தியைப் பெருக்கவும், அவனைப் பரிபாலிக்கவும் அவனுக்கு உற்ற துணை புரியவுமே மங்கையரை இறைவன் படைத்துளான். இந்நோக்கம் சித்தியாவதற்குத் தக்க கடமைகளிலேயே மங்கையர் எப்பொழுதும் முயலவேண்டும். இக்கடமைகளை இனிது நிறைவேற்றுவதற்கு ஏற்றவாறு அணங்கனருக்கு அங்கங்களையும், அவ்விறைவன் அளித்திருக்கிறன். இயற்கையான கடமைகளை மங்கைமார் நிறைவேற்றுகையில், மனிதன் அதில் கலந்துகொள்ள இயலாது. அங்ஙனமே தங்களது இயற்கைக் கடமைகளை ஆடவர் ஈடேற்றுகையில், அதில் மாதர் கூடிக்கொள்வதும் ஆகாத காரியமாம்.

பிரஜாபிவிருத்திக்கும் அதன் பராமரிப்புக்குமாக பெண்களின் வாழுட்களில் நான்கு பருவ காலங்களைஇறைவன் வகுத்திருக்கிறன். கருக் கொள்ளுதல், கரு வுயிர்த்தல், குழந்தைக்கு அமுதூட்டல், அதனைப் பரிபாலித்தல், ஆகிய இந் நான்கு பருவகாலங்கள் ஒவ்வொரு மங்கையருக்கும் மிகவும் முக்கியமான காலங்கள்; அன்றியும் அவை கஷ்டமும் பொருந்திய காலங்களாம். ஆகவே அவர்களை நன்கு காப்பாற்றவும், நல்ல சுகாதாரத்

தில் இருத்தவும் தக்க ஏற்பாடுகளை தவறாமல் செய்ய வேண்டும். இதில் ஏதேனும் குறை நேரின், அல்லது அசிரத்தை காட்டின், பல ஆபத்துகள் நிகழும்.

பெண்களுக்குரிய அந்நான்கு பருவ காலங்களில், சிறப்பாக முதல் மூன்று பருவங்களில் அன்னவர் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாக நேருகிறது. இந்த உண்மையை அனைவரும் அறிவர். அந்நான்கு பருவகாலங்களிலே மாதருக்கு வேண்டியன இன்னின்ன, அவர்கள் எங்ஙனம் நடந்துகொள்ள வேண்டும், சுகாதார விதிகள் யாவை, முதலிய பலவற்றையும் வயித்தியநூல் விரித்துக் கூறும். பழுத்த அனுபவமுள்ள மருத்துவர் தமது வாணாள் அனைத்தையும் செலவிட்டு, தமது அனுபவத்தில் கண்ட கஷ்டங்களையும் அவற்றின் பரிகாரங்களையும் குறித்து அரிய பெரிய நூல்கள் இயற்றியுளர். அந்நூல்களிலும் மேற்கண்ட நான்கு பருவகாலங்களைப் பற்றிப் பெரிதும் பேசப்பட்டுளது எனவே அந்நான்கு பருவங்கள் எவ்வளவு முக்கியம் என்பதை யாரும் கவனிக்கலாம்.

கருக் கொள்ளுதல்

பெண்கள் கர்ப்பவதியாக இருக்கும் காலம் 9 மாதமே. பத்தாம் மாதத்தில் குழந்தை பிறந்துவிடும் ஆதலின் தாயின் கருப்பையில் சிசு தங்கியிருப்பது பூரணமாக 9 மாத காலந்தான். இந்தக் காலத்தில் கருப்பவதிகள் வீட்டுக் காரியத்தையும் நோட்டமிடத் தகுதியானவர்கள் ஆகார். மிக இலேசான வேலையும் அவர்களைப் பாதிக்கும். இம்மட்டோ? அந்த ஸ்திரீயிடம் உள்ள அதி நுட்பமான சிசுவும் பாதிக்கப்படும். அந்த ஒன்பது மாத காலம் சிசுவுக்குப் பல விதமான பக்குவ காலமாகும். உதாரணமாக அச் சிசுவுக்குச் சிறிது சிறிதாக உணர்வும், சக்தியும் அடையாளங்களும் ஏற்படுகின்றன. ஆகவே அந்தக் காலத்தில் தாய்மாருக்கு விசேஷ பாது காவலும் பேணுதலும் மிக அவசியம். கருவிலுள்ள சிசு உயிருடன் இருத்தலும், மரித்தலும், அல்லது நன்கு வளர்தலும், பலவீனமடைதலும் தாய்மாரின் நிலையைச் சார்ந்துள. கர்ப்பஸ்திரீகள் தங்கள் எண்ணங்களையும் செய்கைகளையும் மிகவும் அதிகமாகப் பேணுதல் வேண்டும். ஏனெனில், தாயின் மன நிலைக்கும் செயலுக்கும் ஏற்றவாறு சிசுவின் தேகநிலை மாறுபடும். இது வைத்திய நிபுணர்களின் கருத்து. பல பிள்ளைகளின் நடை யுடை பாவனை திரேகக் கட்டு, முதலியன கருவிலேயே அமைகின்றன. பிரான்சு தேசத்திலே மிக அழகானவர்களெனக் கருதப் பட்ட பெற்றோர்களுக்கு ஆபிரிக்காவிலுள்ள நீக்ரோ ஜாதியானைப் போன்ற கருத்த மேனியும் தடித்த உதடுமுள்ள பிள்ளை பிறந்ததாம் இதைக் கண்டு டாக்டர்களும் பிரமித்து விட்டனர். இதற்குக் காரணம் என்னவென ஆராய்ந்து பார்த்தனர். தாயின் இருப்பிடத்திற்கு எதிரிலே நீக்ரோ ஜாதியைச் சேர்ந்த ஒருவரின் உருவச் சிலை மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்தது. அவ்வுருவத்தை அந்த ஸ்திரீ தினசரி பார்க்கப் பார்க்க, அதன் வடிவமே தாயின் கண்களின் வழியாக மூளைக்குச் செல்ல, அதனால் பிள்ளைக்கு அந்நிறமே உண்டாயிற்று என்று தெரிய வந்தது.

கருவுயிர்த்தல்

பிரசவ சமயம் கர்ப்ப காலத்தைப் பார்க்கிலும் கஷ்டமும் அபாயமு முள்ளது. பிரசவ காலத்தில் சில பெண்களின் நிலை மரணத்திற்கு ஒப்பாகவே இருக்கும். கருவுயிர்த்ததும் அன்னையர் மிகவும் பலவீன மடைவர்; சில சமயம் வியாதிக்கும் ஆளாக நேரும். பிரசவ காலத்தில் நேரும் நலிவு தாய்மார்களுக்கு நெடுநாள் வரை நீங்காது. நோய் வாய்ப்பட்டுச் சுகம் பெற்றபின், அவர்களின் வாழ்க்கை மறுபடியும் புதிதாகவே ஆரம்பமாகும். எல்லாம் இறைவனின் செயலால் நடந்தபோதிலும் பிரசவகாலத்தில் பெரிதும் கவனிக்க வேண்டிய போஷணைகளைப் பேணுக்குறையாலும், வைத்திய முறைக்கு மாறாக அறியாத்தனமாக நடந்துகொள்வதாலும், எத்தனையோ ஸ்திரீகள் உயிரிழக்க நேர்ந்திருக்கிறது. இவைகளை யெல்லாம் கவனிக்கும்போது பெண்களுக்குப் பிரசவகாலம் மிகவும் ஆபத்தான காலம் என்பதை யாரே மறுப்பர்?

அமுதூட்டும் காலம்

பிள்ளைகளுக்கு அமுதூட்டுங் காலம் தாய்மார்களுக்கு மூன்றாவது பருவ காலமாகும். இதற்கு முந்திய இரண்டு காலத்தில் தாய்க்கு எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் உண்டோ அவ்வளவு இதிலில்லை. ஆயினும், குழந்

தைக்கோ அக்காலம் மிகவும் அபாயகரமானது; ஆகவே விசேஷ கவனம் செலுத்தி, குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும். அந்தக் காலத்தில் தாய் தன்னையும் பிள்ளையையும் காப்பாற்றுவதற்கு உரிய விதிமுறைகள் பலவாம். அம்முறைகளிலிருந்து பிறழின், பிள்ளைக்குப் பிராண சங்கடம் வந்து சேரும்; அல்லது தீரா நோய் உண்டாகும். அமுதூட்டுங் காலத்தில் வயித்திய முறைப்படியே அன்னை நடந்து கொள்ள வேண்டியவள். ஆகவே எந்தவிதமான உணவை உட்கொள்ளுகிருளோ அந்த விதமான குணபாடு அவள் பிள்ளைக்கு உண்டாகும். வியாதியை உற்பத்தி செய்யக்கூடிய வஸ்துக்களைத் தவருகத் தாய்மார் உபயோகித்தால், பிள்ளைகள் பயங்கரமான வியாதியிலாழ்ந்துவிடும். அப்பொருள்களின் நன்மையான அல்லது தீமையான குணபாடுகள் தாயின் பாலினிலிருந்து பிள்ளைகளுக்குச் சேரும். அதன் பலனைப் பிள்ளைகளுக்குப் பலவித சௌக்கிய அசௌக்கியங்கள் நேருமென்பது வெளிப்படை.

பரிபாலனம்

பிள்ளைகளைப் பரிபாலனஞ் செய்தல் மாதாக்களின் நான்காவது பருவகாலமாம். இந்தக் காலம் மங்கையருக்குக் கஷ்டங்களை விளைவிக்காத காலமாக இருந்தாலும், அவர்களின் கவனத்தைப் பிள்ளைகள்பால் அதிகமாக இழுக்கும் காலமாகும். ஆடவர்கள் எச்சமயத்திலும் வீட்டிலிருக்க முடியாது. காலக்ஷேபத்திற் கேற்ற காசைத் தேடிக்கொண்டு வர, ஆடவர் வெளியில் செல்லக் கடமைப்பட்டவர். ஆதலின் வீட்டரசிகளாகிய மாதரசிகள்தாம், தங்கள் மக்களை ஆதரித்துப் போற்றி, பரிபாலிக்கக் கடமைப்பட்டவர்களாவர். குழந்தைகள் இவ்வுலக யாத்திரைக்குப் புதிதாக வந்த பிரயாணிகளாவர். இவ்வுலகத்திலுள்ள நன்மை தீமைகளை அவர்கள் அறிய மாட்டார்கள். அவர்களின் இருதயங்கள் களங்கமற் றிருக்கும். அத்தகைய மனத்தில் ஊட்டப்படும் கொள்கைகளும் எண்ணங்களும் தன்மைகளும் பலமாகப் பதிந்துவிடும். எனவே குழந்தைகளின் இருதயங்களில் நன்மையோ தீமையோ தோன்றிவளரும் பொறுப்பை அன்னையே ஏற்றுக்கொண்டிருக்கிருள். ஆகவே, தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கமும், நன்னடத்தையும், நற்குணமும் புகட்டுவதற்கு இதுதான் ஏற்றகாலமாகும். இக்காலத்தில் அவர்கள் கண்ணுங் கருத்துமாக இருத்தல்வேண்டும் என்பது வெளிப்படை.

இத்தகைய அபாரமான பொறுப்பையும் கஷ்ட நஷ்டத்தையும் வகிக்கும் பெண்மக்கள் ஏனைய உலக காரியங்களில் ஆடவர்களுடன் சமமாகக் கலந்து சரிபங் கெடுத்துக் கொள்ள முடியுமா? அவர்கள் அவ்வாறு கலந்துகொண்டால், இறைவனல் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இயற்கைக் கடன்களை அவர்கள் சரிவரச் செய்யமுடியுமா? ஒரு பெண், கல்வி கேள்விகளில் சிறந்து சட்ட சபையில் அங்கம்பெற்று விட்டதாக வைத்துக்கொள்வோம், அல்லது ராஜீயக்கட்சியிலே ஒன்றில் பொறுப்பான அந்தஸ்தை வகிப்பதாக வைத்துக்கொள்வோம், அல்லது நீதிபரிபாலன இலாக்காவில் சேர்ந்து ஜட்ஜ் பதவியை ஏற்பதாக நினைத்துக்கொள்வோம். அப்பதவிகளை ஏற்றுக்கொண்டிருக்கிருக்கும் பெண்கள் தங்களுக்கு இயற்கையான கருக்கொண்டுவிட்டால் யாதுசெய்வர்? கர்ப்பத்தைக் கலைத்து உயிரைக் கொல்லுவார்களா? அல்லது அதைக் கலைக்காமல் இருந்து, தாங்கள் ஏற்றுக்கொண்ட பொறுப்பைச் சரிவர நடத்துவார்களா? இவர்கள் ராஜீய வியவகாரங்களில் ஈடுபட்டு அல்லது சட்டசபையில் விவாதத்திற்கு வந்திருக்கும் சிக்கலான பிரசினையில் தலையிட்டு, அல்லது பெரிய வழக்கை விசாரிப்பதில் முனைந்து நின்று, தங்கள் கருவிலிருக்கும் சிசுவின் விஷயத்திலும் தங்களுக்கு வேண்டிய சுகாதார விஷயத்திலும் கவனம் செலுத்தாதிருந்தால், அவர்கள் எத்தகைய தீங்குகளுக்கு உட்பட நேரிடும் என்பதை நேயர்களே யோசித்துப் பாருங்கள். தங்களுடைய கர்ப்பத்தைக் கவனித்து, சிசுவின் சுகத்திற்கு வேண்டியவைகளைப் பெரிதும் கவனிக்க முற்படுவார்களாயின், தாங்கள் ஏற்றுக்கொண்ட பொறுப்பான பதவியை அவர்கள் நன்கு நிர்வகிக்க முடியுமா?

இயற்கை கெடுமே!

பிரசவகாலம் வந்துவிட்டால் அவர்கள் ஏற்றுக்கொண்ட எல்லாப் பதவிகளையும் சிறிது நாளைக்கு ஒதுக்கி வைக்கவேண்டும் என்பதில் ஐயமில்லை. அவசரமான பிரச்னைகள் இருக்

கும்போது, பிரசவ வேதனை வந்துவிடின், அப்பிரச்னையின் கதி என்னுகும்? குழந்தைகளுக்கு அமுதூட்டுங் காலத்திலே தாய்மார்கள் என்செய்வர்? பிள்ளைகளுக்குப் பாலூட்டி, அவர்களின் நலபலங்களைக் கவனிப்பதா? அல்லது பஜாரிலுள்ள புட்டிப் பால்களை வாங்கி செவிலித் தாய்களிடம் குழந்தைகளை ஒப்புவித்துவிட்டு, சட்டங்களைப் புரட்டிக் கொண்டும், சபைகளில் பிரசங்கித்துக் கொண்டும் இருப்பதா? பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த அருமைக் குழந்தைகளை அலட்சியம் செய்து, பொது வேலைகளில் ஈடுபட எந்தத் தாய் விரும்புவாள்? தேசீய ராஜீய விஷயங்களிலும் இதர விஷயங்களிலும் ஈடுபடுவதால் தாய்மார்களுக்கு கவலையும் வருத்தமும் மேலிடும். அப்போது அவர்களின் மனநிலை மாறுபடும். மனநிலையில் மாறுதல் ஏற்படும் பொழுது அவர்களின் அமுதை அருந்தும் குழந்தைகள் என்னநிலை அடையும்?

இறைவன் வகுத்தவண்ணம் தங்களது இயற்கைக் கடமைகளை மாதர் செய்வதும் அவ்வாறே தங்கள் கடமைகளை ஆடவர் ஆற்றுவதுமே முறையாம். ஒருவரது கடமையில் மற்றவர் பிரவேசித்தால், பிரபஞ்சத்தின் இயற்கை விபரீதமாக முடியும். ஆதலின், வியாபாரம், தொழில், அரசியல் முதலிய துறைகளில் பெண்கள் தலையிடாதிருப்பதே நல்லது. இதனுல் பெண்கள் கல்வி பயிலவோ, சம உரிமை கொண்டாடவோ, கூடாதென நான் கூறுவதாக யாரும் நினைக்கக்கூடாது. தங்களது இயற்கைக் கடன்களை மாதர் இனிது நிறைவேற்ற அவர்களுக்கு எம்மாத்திரம் அறிவும் ஞானமும் கல்வியும் அவசியம் என்பதை அனைவரும் அறிவர். ஆடவர்களுடன் கூடிக்கொண்டு அன்னவர் தமது இயற்கைக் கடன்களை மறந்துவிடுதல் கூடாது என்பதே எனது கருத்தாம்.

பயானுல் குர் ஆன்

லாகூர் காதியானி மௌலவீ முஹம்மது அலீ சாகிப் M. A. L. L. B. அவர்களால் எழுதப்பெற்ற உருது தப்ஸீராகிய பயானுல் குர்ஆனிலுள்ள தாருமாறுன விஷயங்களிற் சிலவற்றைப் புதிதாகப் பார்த்த மௌலவீ அப்துல் அஜீஸ் ஸாகிப் மிக ஆத்திரமடைந்து அடியிற்கண்ட கடிதத்தைத் தமது நண்பர்களுக்கு விடுத்திருக்கிறுர். அது வருமாறு:—

"லாகூர் காதியானி மிர்ஜாயீ ஜமாஅத்துக்குத் தலைவராகவுள்ள மௌலவீ முஹம்மது அலீ சாகிப், ஒரு தப்ஸீர் எழுதியுள்ளார். அது குர்ஆன் ஷரீபையே புரட்டுவதாக இருக்கிறது. அவர் தமது சுய அபிப்பிராயத்தைக் கொண்டு குர்ஆன் ஷரீபின் பொருளைத் தலை கீழாகத் திரித்துக் கூறுகிறுர்; திரு குர்ஆனிலுள்ள பதங்களைப் புரட்டுதல் அவரால் முடியாத காரியம்; தௌராத் வேதத்தைப் புரட்டிய யூதர்கள் இந்தக் காலத்தில் உயிருடனிருந்தால், அவர்கள் முஹம்மது அலீயிடம் தீட்சைபெற்று, வேதத்தைப் புரட்டும் பணியில் அவருக்கு ஐக்கியப்பட்டுவிடுவர் என்று கூறுவது மிகையாது. அவரின் குருவான மிர்ஜா குலாம் அஹ்மது காதியானி இவ்வித புரட்டு வேலையில் நிகரற்றவராதலால், அவரிடமிருந்த இந்த பாக்கியம் அவரின் சிஷ்யரான முஹம்மது அலீக்கும் கிடைத்திருக்கிறது.

இந்த தப்ஸீர் நாட்டில் பரவுவதால் மக்கள் வழி கெட்டுப்போக இடமுண்டு, ஆதலின் அதை மறுத்து தப்ஸீர் எழுத, உங்கள் கூட்டத்திலுள்ள ஒரு மௌலவீயை நியமியுங்கள். அதை அச்சியற்றும் செலவை உங்கள் ஜமாஅத்து ஏற்றுக்கொள்ளட்டும். இவ்வித ஏற்பாடு செய்வீர்களாகில், இன்ஷா அல்லாஹ் அந்த தப்ஸீரின் அச்சுவேலைக்காக நான் நூறு ரூபாய் அனுப்புகிறேன். இது போலவே இதர சகோதரர்களிடமிருந்

தும் நன்கொடை பெறலாம்; சந்தாவும் சேர்க்கலாம். இந்த தப்ஸீரை எழுதும் பொறுப்பை மௌலவீ முஹம்மது அபுல் காஸிம் பஹ்ரவி யேனும், அல்லது மௌலவீ முஹம்மது இப்ராஹீம் ஸியால் கோட்டியேனும், ஏற்றுக்கொள்ளட்டும். இவர்களைத் தவிர வேறு எவர் ஏற்றுக்கொண்டாலும் சரியே, சீக்கிரமாக வேலை முடியவேண்டும். "இதர நற்குணங்களுடன் மிகைப்படுத்திக் கூறுவோர்களின் புரட்டுகளை நீக்கும் தன்மையுமுள்ள கூட்டத்தினர்களும் என்னுடைய உம்மத்துகளில் இருப்பர்" என நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆதலால் அத்தகைய புரட்டுகளைப் போக்குவது நமது பொறுப்பாகும். காதியானி மிர்ஜாயிகளில் முஹம்மது அலீ சாகிப் புத்தியுள்ளவராக இருப்பார் என நான் நினைத்திருந்தேன். இப்பொழுது பார்க்கும்போது மிர்ஜாயியத்துக்கும் அறிவுக்கும் வெகுதூரம் எனத் தெரிகிறது.

மிர்ஜா குலாம் அஹ்மது காதியானி மனதில் எதை நினைக்கிறாரோ அதை குர்ஆன் ஹதீது ஆகியவைகளுக்குப் புரட்டு வியாக்யானம் செய்வது மூலமாக ருஜுப்படுத்துவது வழக்கம். உதாரணமாக:—அவர் தன்னை துல்கர்னைன் எனக் கூறிக்கொள்ள விரும்பியபோது, அவர் "இரண்டு நூற்றாண்டுகளை அதாவது ஹிஜ்ரீ 13-வது நூற்றாண்டின் இறுதியையும் 14-வது நூற்றாண்டின் ஆரம்பத்தையும் நான் அடைந்திருக்கிறேன். ஆதலால், நான்தான் துல்கர்னைன்" என எழுதிவைத்தார். இவர் கூறிய இந்த அருத்தத்தின் பிரகாரம் அநேகம் முஸ்லிம்களும், ஹிந்துக்களும், சீக்கியர்களும் மற்றவர்களும் துல்கர்னைன் என அழைக்கப்படத் தகுந்தவராவர் என்பதையும், குர்ஆன் ஷரீபில் கூறப்பெற்ற துல்கர்னைன் என்ற பதம் குறிப்பிட்ட ஒரு நபரைக் குறிக்காமல் பொதுவான ஒரு அர்த்தத்தைக் குறிப்பிடுவதாகும் என்பதையும், இந்த அர்த்தப்படி மிர்ஜா குலாம் அஹ்மது காதியானியுள்பட இதரர்களையும் குறிக்கும் என்பதையும் உணர்ந்தாரில்லை. இவர்கூறிய தாத்பரியத்தைச் சரியென வைத்துக்கொண்டால் குர்ஆனில் கூறப்பட்ட சரித்திர சம்பவம் யாரைக்குறித்துச் சொல்லப்பட்டது என்பது விளங்கவில்லை.

ஆங்கிலேயரும் ரஷ்யரும்தான் யாஜூஜு மாஜூஜு கூட்டத்தினர் என மிர்ஜா சாகிப் பொருள் கூறினார். அவர் அவ்வாறு கூறியதால் அவருடைய மஸீஹிய்யத்துக்கு பாதகம் வந்துவிட்டது என்பதை அவர் உணரவில்லை. ஏனெனில் "நான் சில கூட்டத்தினரைத் தோற்றுவிக்கப்போகிறேன். அவர்களை எதிர்க்க உமக்குச் சக்திபோதாது. ஆதலால், நீர் முஸ்லிம்களை அழைத்துக்கொண்டு, தூர் மலைக்குச் செல்க" என மர்யமுடைய மகனார் ஈஸா (அலை) வுக்கு வஹீ அறிவிக்கப்படும் என ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. இந்த ஹதீதின்படி ஈஸப்னுமர்யம் முந்தியும் யாஜூஜு மாஜூஜு பிந்தியும் வரவேண்டியவர்களாகின்றனர். மிர்ஜா குலாம் அஹ்மது தாவாச்செய்வதன்படிபார்த்தால் யாஜூஜு மாஜூஜுகளாகிய ஆங்கிலேயரும் ரஷ்யரும் "மஸீஹா"கிய குலாம் அஹ்மதுக்கு முன்னாலிருந்தே இருக்கின்றனர். ஸஹீஹு முஸ்லிமில் கூறப்பட்ட மேற்கண்ட ஹதீதைச் சரியென ஒப்புக்கொள்ளுவதா? அல்லது மிர்ஜாவின் கூற்றாகிய மஸீஹிய்யத்தை ஒப்புக்கொள்வதா? என்பதை நீங்களே கூறுங்கள்."

இந்தச் சமாச்சாரம் அமிர்த சரஸில் பிரசுரமாகும் அஹ்லஹதீது என்ற பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது. ஷை பயானுல் குர்ஆனின் தமிழ் மொழிபெயர்ப்பாகிய காதியானி ஜவாஹிருல் புர்ஆனை நாம் என்செய்வது என்பதை தமிழ்நாட்டு முஸ்லிம்களே முடிவுசெய்யவேண்டும். இந்த தப்ஸீர் பூரணமாக இன்னும் மொழிபெயர்க்கப் படாததால், இப்பொழுதிருந்தே இதை பகிஷ்கரிக்கத் தொடங்கினால் இந்தப்புரட்டுத் தீமை நம் நாட்டில் பரவாது என்பதை அறிவித்துக்கொள்கிறேன்.

—ஒரு முஸ்லிம்

ஆராய்ச்சி மேடை

மௌலவீ A. A. அப்துல் கரீம் பாக்கவீ எழுதியது

மலிக்கா? மாலிக்கா?

தாருல் இஸ்லாம் என்ற தமிழ்வாரப் பத்திரிகையின் இரண்டாவ தாசிரியரான நறையூர் பா. தாவூத்ஷா, பி. ஏ. என்பவரால் இயற்றப்பெற்றதும், சென்னை குர்ஆன் பிரசுராலயத்தாரால் வெளியிடப்பட்டதுமான "ஜவாஹிருல் புர்கான்" என்ற நூலின் 17 ம் பக்கத்தில் 8-வது நம்பர் குறிப்பில் சில தவறுகள் காணப்படுகின்றன. அவைகளை நம் நாட்டு முஸ்லிம் பொதுஜனங்களுக்கு எடுத்தறிவிப்பது அவசியமாக இருப்பதால், இக்கட்டுரையை எழுதத் துணிந்தனன்.

திரு குர்ஆனிலுள்ள முதல் அத்தியாயத்தின் மூன்ருவது வசனத்தில் காணப்படும் "மாலிகி யௌமித்தீன்" என்ற அறபி வசனத்திற்குச் சரியான மொழிபெயர்ப்பு எதுவென்பதை விளக்குவதே அக்குறிப்பின் முக்கிய நோக்கம்போற் காணப்படுகிறது. ஆனல், அவரது நோக்கத்திற்குத் தகுந்த வாதம் இல்லை என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். எவ்வாறெனின், "மாலிக் என்னும் அரபுவார்த்தைக்கு அரசன் என்று சிலர் தவருகப் பொருள் செய்கின்றனர். இப்பதத்திற்கு அரசன் என்பது சரியான மொழிபெயர்ப்பாகமாட்டாது என ஷெ குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அறபிப் பாஷையை நன்குணர்ந்த எவரும் 'மாலிக்' என்ற பதத்திற்கு அரசன் என மொழிபெயர்க்கமாட்டார்கள் என்பது திண்ணம். அவ்வாறு எவரேனும் மொழிபெயர்ப்பாராயின்,அவர் அறபிப் பாஷையைக் கூடியவரை தெரிந்து கொண்டவராகமாட்டார். எனக்குத் தெரிந்தவரை தமிழ்நாட்டிலுள்ள எந்த ஆலிமும் மாலிக் என்ற பதத்திற்கு அரசன் என மொழிபெயர்ப்பதாகத் தெரியவில்லை.

பின்னர், ஷெ குறிப்பில் மேற்கண்ட வாதத்தை ருஜுப்படுத்துவதற்காக அவர் "அரசன் என்பதற்குரிய அரபு வார்த்தையானது மலிக் என்பதாகும். மாலிக் என்பதும் மலிக் என்பதும் ஒரே தாதுவிலிருந்து பிறந்த இரண்டு தனித்தனியான பதங்களாகும். இவற்றுள் மாலிக் என்பது சொந்தக்காரனுகிய எஜமானையும், மலிக் என்பது ஆளக்கூடிய அரசனையும் குறிக்கும். அரபுப் பாஷையிலுள்ள இலக்கண முறைப்படி மாலிக்கிலுள்ள அலிப் என்பதைப் போன்ற ஒரெழுத்து ஒரு பதத்துடன் சேர்ந்துவிடுமாயின் அந்த எழுத்தானது அப்பதத்தின் பொருளை விசேஷித்துக் காட்டும். (பஹ்றுல் முஹீத்)" என எழுதி இருக்கிருர்.

மாலிக், மலிக் என்ற இருபதங்களும் ஒரே தாதுவிலிருந்து பிறந்த இரு தனித்தனிப் பதங்களாகும் என ஜனப் தாவூத்ஷா சாகிப் குறிப்பிட்டிருக்கிருர். இது முற்றிலும் தவருகும். ஏனெனில், மாலிக் என்ற பதமானது மில்கு என்ற தாதுவிலிருந்தும், மலிக் என்ற பதம் முல்குஎன்ற தாதுவிலிருந்தும் பிறந்தனவாகும். எனவே மில்கு என்ற பதத்தின் பொருளும் கருத்தும், முல்கு என்ற பதத்தின் பொருளும் கருத்தும் வெவ்வேறு என்பதை அறபு பாஷா ஞானிகள் விளக்கி இருக்கிருர்கள். தனித்தனியாகவுள்ள இவ்விரு தாதுக்களிலிருந்து இவ்விரு பதங்களும் பிறந்திருப்பதால்தான் அவைகளின் அர்த்தங்களும் கருத்துக்களும் வெவ்வேருக இருக்கின்றன. ஆனல் மில்கு என்ற பதத்திற்கும் முல்கு என்ற பதத்திற்கும் மீம், லாம், காப் என்ற மூன்று அக்ஷரங்கள் இருக்கின்றன என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஜனப் தாவூத்ஷா அவர்கள், மலிக் என்னும் பதமும் மாலிக் என்னும் பதமும் இம்மூன்று அக்ஷரங்களிலிருந்தே உண்டாகி இருக்கின்றன என்று கூறி இருந்தால், இதை எவரும் மறுக்கமாட்டார். அதுபோழ்து இதுசம்பந்தமான வாதம் வேறுவிதமாக இருக்கும்.

"அறபு பாஷையிலுள்ள இலக்கணமுறைப்படி மாலிக்கிலுள்ள அலிப் என்பதைப் போன்ற ஒரெழுத்து ஒருபதத்துடன் சேர்ந்துவிடுமாயின், அந்த எழுத்தானது அப்பதத்தின் பொருளை விசேஷித்துக் காட்டும் (பஹ்றுல் முஹீத்)'' அறபிப் பாஷையின் இலக்கணத்திலுள்ள இந்த விதியை ஜனுப் தாவூத்ஷா தவருக இங்கு எடுத்து எழுதி இருக்கிருர். மலிக் என்ற பதத்தில் ஒரு அலிப் அதிகமாகி விட்டதால் அது மாலிக் என மாறி அதன் பொருளும் விசேஷித்தது எனக் கூறியிருக்கிருர். இது சுத்தத் தவறு. ஏனெனில், ஒரு பதத்துடன் ஓர் எழுத்துச் சேர்ந்தால் அப்பதத்தின் பொருளின் கருத்தை மாற்ருமல் அதனை விசேஷித்துக் காட்டுமே ஒழிய வேறு பொருளாக மாட்டாது. எவ்வாறெனின், நஸல என்ற அறபிப் பதத்திற்கு இறங்கினுன் என்பது பொருளாகும். நஸல என்ற இந்தப் பதத்திற்குமுன் ஒரு அலிபுசேர்ந்துஅன்ஸல என்று ஆகுமாயின், இறக்கிவைத்தான் என்று பொருள்படும். எனவே இந்தப்பதத்தில் ஒரு அலிபு விசேஷமாகச் சேர்ந்ததால் அதன் பொருளும் விசேஷமாயிற்று. இறங்கினுன் என்பது செயப்படுபொருள் குன்றிய வினை என்பதும், இறக்கிவைத்தான் என்பது செயப்படுபொருள் குன்ருவினை என்பதும் தமிழருக்குத் தெரியாத விஷயமன்று. இத்தன்மைபோலவே நஸல என்ற அறபிப்பதம் லாஜிம் என்பதையும், அன்ஸல என்ற அறபிப்பதம் முத்த அத்தீ என்பதையும், அறபி இலக்கண மறிந்தோர் அறிவர். நான் மேலே காட்டிய இந்த வித்தியாசமானது வினைச்சொல்லைப் பற்றியதாகும். இஃதேபோல் பெயர்ச்சொல்லிலும் கருத்துக்கு முரண்படாத விதமாக பொருள் விசேஷித்துவரும் என்பதை அறிக.

நண்பர் தாவூத் ஷா அவர்கள் அறபி பாஷையையும், அறபி இலக்கண விதியையும் அறியாதவராதலால் அறபி இலக்கணச் சட்டத்தை எடுத்தெழுதுகையில் தவறிவிட்டார் என்றே நினைக்கின்றேன். ஷெயார் தம்முடைய குருவின் ஆங்கில மொழிபெயர்ப்புத் தப்ஸீரிலிருந்து இதை எடுத்தெழுதுகையில், தம்முடைய கைவரிசையையும் கொஞ்சம் காட்டி இருப்பதாகத் தோன்றுகிறது. ஷெ ஆங்கிலத் தப்ஸீரின் 6-ம் பக்கத்தில் 7-வது குறிப்பில் இதைப்பற்றிப் பின்வருமாறு அவர் எழுதியிருக்கிருர்.

"According to the rule of forming derivations in Arabic, an additional letter (as the alif in malik) gives the meaning a greater intensity'' ஆங்கிலத் தப்ஸீரை எழுதிய மௌலவீ முஹம்மது அலீசாகிப் அறபி இலக்கணச் சட்டத்தை உள்ளபடி எழுதியிருக்கிருர். ஆனல், அதற்கு தம்சார்பாக உதாரணங்காட்டும்போது ஞாபகப் பிசகாகத் தவறு செய்து விட்டார். ஆனல், ஷெமுஹம்மது அலீ சாகிப் அறபிப் பாஷையைக் கொஞ்சமேனும் அறிந்திருந்தால், தமது சார்பாகக் காட்டிய உதாரணத்தை பிராக்கட்டுக்குள் போட்டு அதை பிரித்துக் காட்டிவிட்டார். ஆதலால், அவர் கூறிய சட்டவிதியை யாரும் மறுக்கமாட்டார். ஆனல், அவர் காட்டிய உதாரணத்தை மாத்திரமே மறுப்பர். என்ருலும், நம் தாவூத்ஷா அவைக ளிரண்டையும் ஒன்ருகக் குழப்பிவிட்டு, அதற்கு "பஹ்றுல் முஹீத்'' என்ற கித்தாபின் பெயரையும் குறிப்பிட்டு விட்டதால் அறபி இலக்கணச் சட்டமே முற்றிலும் மாறுபா டடைந்ததாகிவிட்டது. என் செய்வார்? பாவம்! அறபி தெரிந்தாலன்ருே அந்தப் பாகுபாட்டை அறிவார்?

நிற்க, ஜனுப் தாவூத்ஷா அவர்கள் அரசனைப் பார்க்கிலும் எஜமானனே மேம்பட்டவன் என வாதிக்கிருர். தமிழ்ப் பாஷையைப் பொருத்தவரை இவ்விருபதங்களிலும் எது மேல்? எது கீழ்? என்பதைத் தமிழறிஞர்கள் தக்க காரணத்துடன் பதில் கூறுவர். ஆதலின் அதனைப்பற்றி அதிகம் கூருமல் மாலிக், மலிக் என்ற பதங்களைப்பற்றி மாத்திரம் ஆராய்வன்.

குர் ஆன் மஜீதை நல்லவிதமாக ஓதும் வகைகளைத் தெரிந்த எழுகாரிகளில் இருவர் மாலிகி என்றும், ஏனைய ஐவர் மலிகி என்றும் ஓதி இருக்கிருர்கள். மேலும், நபிகள் நாயகமவர்களும், ஹஜ்றத் அபூ பக்கர் ஸித்தீக் (றலி), உமர் பாறூக் (றலி) ஆகியவர்களும் கூட மலிகி யௌமித்தீன் என்றும் மாலிகி யௌமித்தீன் என்றும் இரண்டு விதமாகவு ஓதி இருக்கிருர்கள்.

தவிரவும், அல்லாஹு ஸுப்ஹான ஹு வ தஆலா இம்மை மறுமை ஆகிய

இரு லோகத்திற்கும் மலிக்காகவும், மாலிக்காகவும், இருக்கிறான் என்பதைப்பற்றித் திரு குர் ஆனில் பல இடங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. ஆதலின், மாலிகி யௌமித்தீன் என்றோ மலிகி யௌமித்தீன் என்றோ ஓதுவது குற்றமுமாகாது. அது தப்பு ல்ல. எனினும், நமது முன்னோர்களிற் சிலர் சிற்சில காரணத்தை யுத்தேசித்து மலிக்கி யௌமித்தீன் என்று ஓதிவந்திருக்கின்றனர். மற்றுஞ் சிலர் மாலிகி யௌமித்தீன் என்று ஓதி வந்திருக்கின்றனர். இன்னும் இரண்டொருவர் தொழுகையில், ஒரு ரக்க அத்தில் மலிகி யௌமித்தீன் என்றும் மற்றொரு ரக்க அத்தில் மாலிகி யௌமித்தீன் என்றும் ஓதி இருக்கிறார்கள். ஆகவே, தாவூத்ஷா தலைகால் தெரியாமல் தடுமாறி தனது கைக்கு வந்தவாறெல்லாம் எழுதி விடுவதால் தான், இவ்வித மறுப்புகளெல்லாம் எழுத வேண்டியதிருக்கிறது.

இம்மாதிரி இவர்கள் இதை விவாதித்து எழுதியதன் உட்கருத்து யாதெனச் சிந்தித்துப் பார்ப்போமாயின், நரகத்துக்கு முடிவுண்டு என்ற காதியானிக் கொள்கைக்கு இங்கிருந்தே அணைகட்டிவருவது நன்கு புலப்படும். "எஜமானனா யிருப்பவனுக்கு சட்ட விரோதமாய் நியாய பங்கம் செய்தானென்னும் அபவாதத்துக்கு இடமில்லாமலே தன்னுடைய அடியார்களை மன்னிக்க முழு அதிகாரமுண்டு" என ஜனாப் தாவூத்ஷா எழுதி தமது பழைய கொள்கையை பாடுகிறார். ஆனால், அல்லாஹு—த ஆலா தன்னைப்பற்றித் திருகுர் ஆனில் கூறி இருப்பதை ஓர்ந்து பார்த்தால், இவரின் நரக முடிவுக் கூற்றின் தவறு நன்கு வெளியாகும். "நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்க மாட்டான். ஆனால், அது வல்லாத பாவங்களை தான் நாடியவர்களுக்கு மன்னிப்பான்" எனக் கூறி இருக்கிறான். இணைவைப்போர் இறைவனிடம் மன்னிப்புக் கேட்காதவரை எப்பொழுதும் மன்னிக்கப் பெறார் என்பது இதனால் நிதரிசனமாகின்றது. அவ்வாறாக மன்னிப்புக் கேட்பதானது இவ்வுலகத்திலே உயிருடனிருந்தபோது முழுமனதுடன் தன் தவறை யுணர்ந்து வருந்திக் கேட்கவேண்டும் என்ற விபரம் குர் ஆனின் திருவசனங்களிலிருந்தும், ஹதீதுகளிலிருந்தும் தெரிந்து கொண்டிருக்கிறோம். இவ்வுலகில் செய்த நன்மை தீமையின் பலா பலனை மறுமையில் அடைவோமே அன்றி, அங்குபோய் யாரும், நன்மை தீமைசெய்யவோ தௌபா இஸ்திஃபார் செய்யவோ முடியாது. மரணத்துடன் மனிதனின் செய்யும் காரியங்கள் யாவும் முற்றுப் பெறுகிறது. ஆதலின், முஸ்லிம் சகோதரர்கள், ஜனாப் தாவூத்ஷா சாகிப் எழுதிய இந்தக் குறிப்பை நம்பி மோசம் போகாதிருக்குமாறு எச்சரிக்கை செய்வது முஸ்லிம்களின் கடமையாகும். வஸ்ஸலாம்.

சிறப்புரை

இஸ்லாம் மித்திரன் எழுதுவது

ஹிபாஜத்துல் இஸ்லாம் எனும் பெயருடைய புதியபத்திரிகையின் றமலான் மாத இதழ் வரப்பெற்றோம். இச்சஞ்சிகையில் அரிய விசேஷசங்கதிகள் பல அடங்கியிருக்கின்றன; வாசிக்க அவை சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியன. இப் பத்திரிகைக்கு ஒவ்வொரு முஸ்லிமும் கையொப்பக்காரராகச் சேர்ந்து, ஆதரித்து வந்தால், இஸ்லாம் மார்க்கத்திற்குப் பேருதவியாகுமெனச் சொல்வோம். எங்களுக்கு அப்பத்திரிகைப் பிரதி அனுப்பியதற்கு, அதன் சொந்தக் காரருக்குத் துதி செலுத்தி, எங்கள் பத்திரிகையையும் உபகாரமாக அனுப்பி வருகிறோம்.

பிழைதிருத்தம்

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" பத்திரிகையின் 2-வது இதழின் 56 வது பக்கத்தில், 2 வது காலத்தில், இரண்டாவது பாராவில் 6 வது வரியில் "சிருஷ்டிக்கப்பட்டது" என்றிருப்பதை "அருளப்பட்டது" என்று திருத்திக் கொள்ளவும்.

ஷை பத்திரிகை முதலாவது இதழ் 19வது பக்கம் முதற்காலம் இரண்டாவது பாராவில் 26, 27 வது வரிகளில் "தான் நோன்பிருக்கிற ஞாபகம் இல்லாமல் காமநுகர்ச்சிகொண்டாலும்" என்றிருப்பதை எடுத்துவிடவும். ஏனெனில் நோன்பிருக்கிற ஞாபகமில்லாமல் காம நுகர்ச்சி கொண்டால் நோன்பு முறியாது.

ஜஹாங்கீரும் நூர்ஜஹானும்

தற்காலம் கடைத்தெருவில் இந்திய சரித்திரம் என்று எத்துணையோ நூல்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அவற்றில் பலவும் உண்மையை உணர்த்தாப் புரட்டு நூல்களாம். அந்த நூல்களைப் படிப்போருக்கு இந்தியாவில் அரசாட்சி செய்த முஸ்லிம் அரசர்கள் பெரும்பாலும் மதுபானிகள்; மாதர்மீது மோகங்கொண்டவர்கள்; உண்டு றங்கிக் கிடந்த சோம்பேறிகள்; பிறமதத்தினரிடம் துவேஷமுள்ளவர்கள்; இம்மியளவும் இராஜ தந்திர மற்றவர்கள் என்றே தோன்றும். அக்கூற்றுக்களுக்கு ஆதாரங்கள் உண்டா? பழிசுமத்தலா சரித்திர நூல்களின் இலட்சணம்? இந்தியாவிலே பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்பட்டு இற்றைக்கு சற்றேறக்குறைய நூற்றைம்பது ஆண்டுகள் ஆகின்றன. இதற்குள் தேசமெங்கும் சுதந்திர உணர்ச்சி தோன்றியுளது; அரசாங்கம் பல கொடுமைகள் செய்வதாகப் பலரும் பலவாறு பேசுகின்றனர். நூற்றைம்பது வருஷங்களுக்குள்ளாகவே, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு இவ்வளவு திண்டாட்டம் நேர்ந்துளது. முஸ்லிம்களோ சுமார் எழுநூறு வருஷகாலம் இந்தியாவை ஆண்டுவந்தனர். அக்காலத்திலே அவர்களது ஆட்சி பெரிதும் பெருமையாகவே இருந்தது. இதுவே மெய்ச் சரிதம். சமயம் நேர்ந்துழி அந்த உண்மையினைத் தக்க மேற் கோள்களினால் விளக்கப்பெறும்.

இந்தியாவின் அரசாட்சி அந்நியர் கையிலிருப்பதால், முஸ்லிம்களைப்பற்றி இதரார் இலேசாக எழுதிப் பேசுகின்றனர். அது அவ்வப்போது கண்டிக்கப்படுவதில்லை. இதனாலேயே இந்தியாவில் முஸ்லிம்களுக்கும் இதர சமூகத்தினருக்கும் வேற்றுமை பெரிதும் வளர்கின்றது. அவ்வேற்றுமைகளைக் குறைக்க இந்தியராகவுள்ள ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய அருங்கடமையுளது. அது யாதெனில், சுயநலமிகள் எழுதிவைத்த பொய்ச்சரிதங்களைப் புறக்கணிக்க வேண்டும். இந்தியாவின் உண்மையான சரித்திரத்தை எழுதவேண்டும்; அதனை இளைஞர்களுக்குப் போதிக்க வேண்டும். அங்ஙனம் செய்யின் இளைஞரின் இதயங்களில் உண்மை உறையும்; உறையவே, நமது பின் சந்ததியாரிடம் துவேஷமும் வேற்றுமையும் ஏற்படாது; ஆனால் பரஸ்பரம் அன்பும், நட்பும் உண்டாகும். மொஹலாய மன்னவரில், மிகவும் காமவெறி கொண்டவர் என்றும், மனையாளிடம் அதிகாரத்தை ஒப்படைத்து ஓர் அடிமையைப் போல் பணிந்து நடந்தவர் என்றும் அபாரமான பெயர் வாங்கியுள்ள ஜஹாங்கீர் சக்கரவர்த்தியைப்பற்றி ஓர் உண்மையை இங்கு எடுத்துக் கூறுவோம்.

"வங்க தேசத்தைச் சேர்ந்த பர்துவான் மாகாணத்தில் ஷேர் அப்கன் என்பவர் பிரதம அதிபராக இருந்துவந்தார். குடி மக்களை அவர் நீதியாக நடத்தாமல் பலவித கொடுமைகள் புரிந்துவந்தார். அம்மாகாணத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் அவருடைய அக்கிரமங்களைப்பற்றிய கூக்குரலே நிறைந்திருந்தது. இச்செய்தி சக்கரவர்த்தி அவர்களுக்கு எட்டவே, இதை விசாரித்து உண்மையை அறிவிக்குமாறு அக்காலத்தில் வங்காள கவர்னராக இருந்த குத்துபுத்தீன் கானுக்கு ஆணை பிறந்தது. உடனே குத்துபுத்தீன் பர்துவானுக்குச் சென்றார் விசாரணை புரிய.

ஷேர் அப்கனுக்கோ அவரது வருகை அடிவயிற்றில் அடித்தது போலாயிற்று. "அக்கிரமச் செயல்கள் யாவற்றையும் குத்துபுத்தீன்கானிடம் பொதுஜனங்கள் மறைக்காமல் கூறிவிடுவார்களே; உடனே நமக்குத் தண்டனை நேருமே" என்று ஷேர் அப்கன் கலங்கினான். முடிவில் ஓர் உபாயஞ் செய்ய அவன் தீர்மானித்தனன். அதன் பயனாக, குத்துபுத்தீன்கானை அவன் மிகவும் வைபவமாக வரவேற்றான்; அவருடன் பேசிக் கொண்டே அவரைத் தனிமையில் அழைத்து

வரச் சொன்னான். குத்துபுத்தீன்கான் களங்கமற்ற மனத்தினையுடைய வராதலால், தாம் வந்த காரியத்தையும் அவனிடம் கூறினார். பின்பு, அவன் சமயம் பார்த்து அவரைத் தாக்கினான்; இதனால் அவர் உயிர் துறக்க நேர்ந்தது.

அவரது நண்பரான பீர்கான் என்பார் அக்கொலை நிகழ்வைத் தூரத்திலிருந்து பார்த்தார். மிகவிரைவாக ஓடிவந்து ஷேர் அப்கனைத் தாக்கினார். இதனால், அவன் காய மடைந்தானாயினும், பீர்கானையும் குத்திக்கொன்று போட்டான். இதற்குள் குத்துபுத்தீனது சிப்பாய்கள் ஷேர் அப்கனைச் சூழ்ந்து தாக்கிப் பழிவாங்கினர். பின்பு அவனுடைய குடும்பத்தினர் யாவரும் கைதுசெய்யப்பட்டு சக்கரவர்த்தியின் இருப்பிடத்திற்கு அனுப்பப்பட்டனர். அங்ஙனம் கைதியானவர்களில் ஷேர் அப்கன்கானின் மனைவியாகிய மஹ்ருன்னிஸா என்ற ஒரு பெண்மணியும் இருந்தனள்.

குத்துபுத்தீன்கான் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கேட்டு ஜஹாங்கீருக்கு அளவிலா வருத்தம் ஏற்பட்டது. இதனை அச்சக்கரவர்த்தி தமது ஞாபகக் குறிப்பில் தெளிவாக எழுதியிருக்கிறார். ஷேர் அப்கனது குடும்பத்தினர் உயர்ந்த குடும்பத்தைச்சேர்ந்தவர்கள்; அன்றியும், பெரிய உத்தியோகஸ்தனின் பந்துக்களும் ஆவார்கள். ஆதலால், அவர்கள் மொகலாய அரண்மனைக்குள் மிகவும் கண்ணியமாகவே நடத்தப்பட்டார்கள். மேலும் ஜஹாங்கீர் சக்கரவர்த்தியின் மாற்றான் தாயோ அக் குடும்பத்தாரிடம் மிகவும் அனுதாபம்காட்டிவந்தனள். மஹ்ருன்னிஸா என்ற அப் பெண்மணி சிறு குழந்தையாக இருந்தகாலத்தில் அரண்மனையிலேயே வளர்ந்தவளாதலால் அப்பெண்ணின் அரும்பெருங் குணங்களும் நன்மைகளும் அவ் வம்மைக்கு நன்றாகத் தெரியும். அப் பெண்மணிக்கு எவ்வித கஷ்டமும் ஏற்படாமல் அந்த அம்மையார் கவனித்து வந்தார்.

இவ்விதம் நான்கு வருஷம் சென்றபின் மஹ்ருன்னிஸா தான் நிரபராதி என்பதையும் கைதி என்ற முறையில் தனக்கேற்பட்டிருக்கும் துயரத்தையும் பற்றி நீண்ட விண்ணப்பம் எழுதிச் சக்கரவர்த்திக்கு அனுப்பினர். இவ் விண்ணப்பத்தைப் பார்த்ததும் சக்கிரவர்த்தியின் மனம் உருகிற்று. விண்ணப்பத்தைக் கையில் எடுத்துக்கொண்டே, மஹ்ருன்னிஸா காவலில் வைக்கப்பட்டிருக்கும் அறைக்கு அவர் நேராகச்சென்று அப்பெண்மணியிடம் பேசினார். பின்னர் அம்மாதரசியின் அழகையும், அரிய குணங்களையும் வியந்து, அப் பெண்ணை மணந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்து, தான் பட்டத்துக்கு வந்த ஆறும் வருஷத்தில் 38 வது பிராயத்தில் விவாகஞ் செய்துகொண்டார். மஹ்ருன்னிஸா என்ற அப்பெண், பின்பு நூர்ஜஹான் என்னும் சிறப்புப்பெயர் பெற்று மொகலாய சக்கரவர்த்தியின் பட்ட மகிஷி ஆயினள்.

இதுதான் உண்மையானசரித்திரம்; வயிற்றுப் பிழைப்புக்காகச் சரித்திரம் எழுதுவோர் இந்த உண்மையைத் திரித்து பலவிதமாக எழுதி இருக்கின்றனர்.

நூர்ஜஹானும் அவளுடைய தாயாரும் அரண்மனைக்கு முதன் முதலாக வந்தபோதே ஜஹாங்கீர் அவளுடைய அழகைக்கண்டு அவளை மணம் முடித்துக்கொள்ள விரும்பியதாகவும், தன்தாயாரிடம் இதைத்தெரிவித்ததாகவும், சொல்லப்பட்டிருக்கிறது. நூர்ஜஹான் முதன் முதலாக அரண்மனைக்குத் தன் தாயாருடன் வந்தபோது அவளுக்கு ஏறக்குறைய நான்கு அல்லது ஐந்து வயது இருக்கலாம். அப்பொழுது ஜஹாங்கீருக்கு வயது எட்டு இருக்கும். எட்டுவயதுப் பாலகன் அப்பெண்ணின்மீது காதல்கொள்ளஇடமேது? அன்றியும், அவளை மணக்கவேண்டுமென்று தன் தாயினிடம் அவர் சொன்னர் என்பது எங்ஙனம் பொருந்தும்? வெட்கம் வந்து குறுக்கிட்டிராதா? அவ்விதம் அவர் ஒரு சமயம் சொல்லியிருந்தபோதிலும் அப் பெண்மணி கீழ்தரகுலத்தைச் சேர்ந்தவளல்லள். ஆதலால், அதை மறுக்க ஜஹாங்கீருடைய பெற்றோருக்கு நியாயமில்லை.

மேலும், ஹிந்து முஸ்லிம் யாவராலும் கொண்டாடப்படுபவரும், ஹிந்து குடும்பங்களிலிருந்து பெண் எடுக்கும் பான்மை யுள்ளவருமான அக்பர் சக்கரவர்த்தி தன் அருமைப் புதல்வரின் அன்பைக் கவர்ந்த ஒரு பெண்ணை வேறு ஒருவருக்கு மனைவியாக்கி இருப்பாரா? இளவரசராக இருந்தபோதே காதல்கொண்டிருந்த ஒருவர், தாம் பட்டத்துக்கு வந்து 6 வருஷகாலம் வரையில் தம்

காதலியை அடையாமலிருந்ததேனோ தெரியவில்லை. மேலும், ஜஹாங்கீர் பட்டத்துக்கு வந்ததும், மஹ்ருன்னிஸாவின் புருஷனை அலிகுலிகான் என்பவருக்கு அப்பன் என்ற பட்டம் கொடுத்ததாகச் சரித்திரம் கூறுகிறது. தன்னுடைய மனத்தையே முற்றுங் கவர்ந்த ஒரு அழகிய பெண்ணை மனைவியாகக் கொண்ட ஒருவனுக்குப் பட்டங்கொடுக்க எவர்தான் துணிவார்? அரசாங்க அதிகாரமும், சேனைபலமும் தன்கைக்கு வந்த அன்றையதினமே, தன் காதலியை எவ்விதத்திலும் அடையவே அவர் முயன்றிராரோ? இவற்றை எல்லாம் கவனிக்கும்போது, நம் காலத்திய சரித்திரக்காரரின் கூற்று மெய்யா பொய்யா என்பதை நேயர்கள் யூகித்துக் கொள்ளலாம்.

ஆண்டு விழாவில் அரிய சொற்பொழிவு

நாமக்கல் நகரில் "அஞ்சுமனே குத்தாமுல் இஸ்லாம்" எனும் சங்கம் உளது. அதன் இரண்டாம் ஆண்டுவிழா மார்ச்சு, 14, 15 தேதிகளில் நடைபெற்றது. நாமக்கல் யூனியன் போர்டின் தலைவர் ஜனாப் பி. முகம்மது உஸ்மான்சாகிப் அவர்கள் அவ்விழாவின் வரவேற்புக்கழகத்தலைவராக இருந்தார். சென்னை "ஸைபுல் இஸ்லாம்" பத்திரிகையின் ஆசிரியரான ஆலீ ஜனாப் மௌலானா மௌலவீ அஹ்மது ஸயீது ஸாஹிப் அவர்கள் அக்கிராசனராக இருந்து அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். மகாநாட்டுத் தலைவர் அவர்கள் நாமக்கல்லுக்குச் செல்லுகையில் வழியிலே இராசிபுரம் அஞ்சுமனே இஸ்லாம் சங்கத்தினர் இராசிபுரத்தில் அவரை நிறுத்தி, வரவேற்பு பத்திரமொன்று வாசித்துக் கொடுத்தனர். மகாநாட்டின் தலைவர் மௌலானா அவர்கள் செய்த பிரசங்கத்தின் முக்கியசாரம் வருமாறு—

நெருக்கடியான நிலை.

"தற்கால முஸ்லிம் சமூகத்திற்கு நெருக்கடியான நிலைதோன்றியுளது. நமது உடல், பொருள், ஆவி, ஆகிய இம்மூன்றையும் விட அதிக அருமையான பரிசுத்த இஸ்லாம்மார்க்கம் இதர மதவாதிகளால் ஆபத்தமாகத் தாக்கப்படுகிறது. பிரசுரங்கள், பத்திரிகைகள், புத்தகங்கள், பிரசங்கங்கள் இவை மூலமாகப்பிறர் நமது மார்க்கத்திற்குப் பங்கமிழைக்கப்பார்க்கின்றனர். அரசியல் விஷயங்களிலோ ஹிந்து அரசியல் வாதிகளில் பலர் நமது சமூகத்தைத் தலைதூக்கா வண்ணம் அமிழ்த்திவிட முயலுகின்றனர். அதற்காகப் பல சூழ்ச்சிகளும் செய்யத் தவறவில்லை. இதற்கு நேரு அரசியல் திட்டமே போதிய சான்றாகும். லாகூர் காங்கிரஸில் சுயேச்சைத் தீர்மானம் நிறைவேறிவிட்டதால், நேருதிட்டம் அடிபட்டுப் போகிறது. எனினும் இந்துக்களின் மனப்பான்மைக்கு அத்திட்டத்தை நாம் சொல்லாமலிருக்க முடியவில்லை. ஹிந்துக்கள் சகல துறைகளிலும் உச்சஸ்தானத்தை அடைந்துள்ளர். அதுபற்றி நமது அரசாங்கமும் அவர்களையே பிரதானமாகக் கருதுகின்றது; முஸ்லிம் சமூகத்திற்குரிய உரிமைகளையும் நலங்களையும் அவ்வளவாகக் கவனிப்பதில்லை. உதாரணமாக, சென்னை ஹைகோர்ட்டில் ஜட்ஜு ஸ்தானம் வகித்துவந்த ஸர் அப்துர் ரஹீம் அவர்களுக்குப்பின் அந்தஸ்தானத்தில் முஸ்லிம் ஜட்ஜு ஒருவரை இன்றளவும் நியமிக்கவில்லை. ஸ்ரீ ஹரிவிலாஸ் சாரதா என்பவர் கொண்டுவந்த பால்ய விவாகத்தடை மசோதா நமது மார்க்க உரிமையில் தலையிடுவதாகும். இதனை அரசாங்கம் மதிக்காமல் முஸ்லிம்களையும் அதில் சேர்த்து சட்டமாக்கி இருக்கிறது. வருகிற ஏப்ரல்மீ முதல் அச்சட்டம் அமலுக்குவரும். சமீபகாலத்தில் காலியாகும் சென்னை அரசாங்க ஹோம்மெம்பர் ஸ்தானத்தில் ஒரு முஸ்லிமை நியமிக்கவேண்டுமென்று நம்சமூகம் வேண்டிக்கொண்டும் என்ன பலன்? அந்தஸ்தானத்தில் ஒரு ஹிந்துவை நியமிக்கப் போவதாகப் பிரஸ்தாபம் இருந்துவருகிறது. இதுபோல், அநேக உயர்

தர உத்தியோகப்பதவிகளுக்கு அருகதையான முஸ்லிம்கள் பலர் இருக்க அவர்களை அரசாங்கம் மறந்துவிட்டதுபோலும். இதற்கு முக்கியகாரணம் நம் சமூகத்தில் முன்பிருந்தததுபோல் ஒற்றுமை, ஊக்கம், பரஸ்பர நம்பிக்கை, சகிப்புத்தன்மை முதலிய அரும்பெருங்குணங்கள் குறைந்து, நாம் சிதறுண்டிருப்பதேயாகும். எனவே, நாம் இந்தியாவில் கண்ணியமாக வாழ விரும்பின், நமது முற்கால நிலையையும் தற்காலக் கேவல நிலையையும் சீர்தூக்கிப்பார்த்து, நமது வீழ்ச்சிக்குக் காரணத்தை யுணர்ந்து முனைந்து முயலவேண்டும்

நம்மவரின் நேர்மை

இந்திய முஸ்லிம்களின் நேர்மை எங்ஙனம் என்று பார்ப்போம். இந்தியாவுக்கு வெளியில் முஸ்லிம்கள் முன்னம் செல்வாக்குடன் இருந்து வந்தனர். அப்போது மதப்பிரசார நிமித்தம் இந்தியாவுக்கு முஸ்லிம்கள் வந்தனர். அவர்களுக்கு இந்தியாவிலுள்ளவர்கள் இடைஞ்சல் செய்ததால் முஸ்லிம் அரசர்கள் படையெடுத்துவர நேர்ந்தது. அதன் பலனாக இந்தியாவில் இமயம்முதல் குமரிவரை முஸ்லிம் ஆட்சி ஏற்பட்டது. முஸ்லிம்களுக்கு விரோதமாக ஹிந்துக்கள் இருந்தும், முஸ்லிம் மன்னர்கள் இந்தியாவைத் தங்கள் தாய் நாடாக்கிக்கொண்டு இந்தியாவிலேயே ஸ்திரமாக இருந்து இந்தியாவின் செல்வத்தை வெளிநாட்டிற்கு அனுப்பாமல், ஹிந்து பிரஜைகளேயும் முஸ்லிம்களேயும் சமமாகவே நடத்தி வந்தனர். ஹிந்துக்களுக்கு அரசாங்க உத்தியோகங்களில் அரிய பெரிய பதவிகளை அளித்தனர். இவ்வாறு ஹிந்துக்களை முஸ்லிம் அரசர்கள் நடத்தியதற்கு பதிலாகச் சிலதுவேஷமுள்ள ஹிந்துக்கள் துரோகஞ்செய்து இஸ்லாமிய ஆட்சியைஒழித்தனர். இது சரித்திர விஷயம். முஸ்லிம் ஆட்சி ஒழிந்ததால், முன்னர் அரசாளுபவர்களாக இருந்த முஸ்லிம்கள் தற்சமயம், கல்வி, கைத்தொழில், வர்த்தகம், விவசாயம் முதலிய பல துறைகளில் ஒங்க முடியவில்லை. நம்மில் பலர் பிச்சையெடுக்கும் நிலைமை அடைந்திருக்கின்றனர். இந்த நிலை இன்னுஞ் சிறிதுகாலம் நீடித்திருக்குமாயின், முஸ்லிம்களின் கதி அதோகதியாகிவிடும்.

காங்கிரசும் முஸ்லிம்களும்

காங்கிரஸ் மகா சபையில் முஸ்லிம்கள் முன்னம் முன்னணியில் நின்று உழைத்தனர். ஒத்துழையாமை இயக்ககாலத்தில் காங்கிரஸின் கட்டளைக்கு முஸ்லிம்கள் கட்டுப்பட்டு, தங்கள் உடல், பொருள், ஆவியை அற்பணஞ்செய்ய முன்வந்தனர். தேசவிடுதலைக்காகத் தியாகஞ்செய்தனர். அதன் பலனாக காங்கிரசுக்கு மிக்க செல்வாக்கு ஏற்பட்டது. தற்போதுள்ள காங்கிரஸ் ஹிந்துக்களோ முஸ்லிம் சமூகத்தை முற்றிலும் புறக்கணிக்கின்றனர். நேரு அரசியல் திட்டத்தை ஒப்புக்கொண்டு, இஸ்லாம் மதத்தையும் முஸ்லிம் சமூகத்தையும் நசுக்கிவிட வேண்டுமென்று ஹிந்துமகாசபை சூழ்ச்சி புரிகின்றது. காங்கிரஸ் ஹிந்துக்கள் அதற்கு உட்பட்டிருக்கின்றனர். நமக்கு எத்தகைய அரசியல் உரிமை வேண்டுமென்பதை டில்லி முஸ்லிம் சர்வ கக்ஷி மகாநாடு ஒரு திட்டமாக வரைந்து வைத்துளது. அதனையே முஸ்லிம்கள் பின்பற்றி ஆதரிக்கவேண்டும், காங்கிரஸ் செய்யும் எந்தக் காரியத்திலும் முஸ்லிம்கள் ஈடுபடாமல் ஒதுங்கி நிற்க வேண்டும்; காந்திஜீ ஆரம்பித்திருக்கும் சட்ட மறுப்பில் முஸ்லிம்கள் சம்பந்தப்படக்கூடாது.

சட்டசபையும் சீர்திருத்தமும்.

சட்ட சபைகளுக்குச் செல்லும் முஸ்லிம்கள் எந்தக் கட்சியுடனும் சேராமல் ஒதுங்கி நின்று, தங்களுக்கெனத் தனியாக ஒரு கக்ஷியை அமைத்துக்கொண்டு, இஸ்லாத்திற்கும், சமூகத்திற்குமுள்ள உரிமைகளை அடைய ஒற்றுமையுடன் முயற்சி செய்யவேண்டும். சட்டசபைகளுக்குத் தெரிந்தெடுக்கப்படுபவர்கள், மார்க்காபிமானம், சமூகாபிமானம், தேசீய ராஜீயஞானம், பொதுநல நோக்கம் முதலியவைகள் ஒருங்கே அமையப்பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். மார்க்கத்தை அறியாத முஸ்லிம் பிரதிநிதிகளாலேயே சாரதாசட்டத்தில் முஸ்லிம்களை அரசாங்கம் கட்டுப்படுத்தி வைத்துளது. ஆதலால் முகஸ்துதிக்காகவும், சுயநலத்துக்காகவும் வாக்காளர்கள் தங்கள் ஓட்டுரிமையைக் கொடுத்து வீணாக்கலாகாது; மதத்திற்கும், தேசத்திற்கும், சமூகத்திற்கும் நன்மைசெய்யக் கூடியவர்களையே தெரிந்தெடுக்கவேண்டும்.

மாண்ட்போர்டு சீர்திருத்தம் அமலில்வந்து பத்துவருஷம் தீர்ந்துவிட்டது. இனிமேல் இந்தியாவுக்கு எத்தகைய சுதந்தரம் கொடுக்கலாம் என்பதைப்பற்றி யோசிக்க லண்ட

னில் சர்வகக்ஷிமகாநாடு கூடப்போகிறது. ஆதலின் முஸ்லிம் சகோதரர்கள் தங்களுக்குள்ள பிளவுகளையும், சுயநல வேற்றுமைகளையும் விட்டொழித்து, சமூக நலத்திற்காக ஒரு முகமாய் உழைக்க முயலவேண்டும். க்ஷி மகாநாட்டிற்கு நாம் தக்கப் பிரதிநிதிகளை அனுப்பி நமது கோரிக்கைகளை வற்புறுத்த வேண்டும். முஸ்லிம் சபைகளும் தலைவர்களும் ஒன்றுபடவேண்டிய காலம் இதுவாகும்.

ஹிந்துமுஸ்லிம் ஒற்றுமை.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை மிகவும் அவசியமே. இந்தியாவின் விடுதலைக்கு மாத்திரமன்றி, இந்தியாவின் க்ஷேமமான வாழ்க்கைக்கும், வியாபாரம், கைத்தொழில்,விவசாயம், முதலிய தொழில்கள் விருத்தியாவதற்கும், ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை மிகவும்இன்றியமையாதது. ஆனால் இவ்வொற்றுமைக்காக முஸ்லிம்கள் தங்கள் மதசுதந்தரத்தை இழக்க முடியாது. முஸ்லிம் மதஉரிமையைப்பாதிக்காதவழியில்ஹிந்துமுஸ்லிம் ஒற்றுமைக்குச்சாத்தியமான எல்லா வழிகளிலும் நாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்; இந்தியாவில் ஸ்திரமான ஒற்றுமையை நிலைநிறுத்துவது ஹிந்து சமூகத்தையே பொறுத்திருக்கிறது. முஸ்லிம் சமூக விஷயமாக ஹிந்து சமூகம்தற்போது கொண்டுள்ள குரோத மனப்பான்மை மாறவேண்டும். நியாயமான வழியில் முஸ்லிம்களின் கூட்டுறவை ஹிந்துக்கள் நாடின் அவர்களுடன் ஒத்துழைக்க முஸ்லிம்கள் தயாராக இருக்கிறார்கள் என்பது திண்ணம்.

வெற்றிபெறும் மார்க்கம்

சங்கம் என்பது முஸ்லிம்களுக்குப் புதிய விஷயமன்று. நபிகள் நாயகமவர்கள் பிறப்பதற்கு முன்னதாகவே, அறபிநாட்டில் சங்கம் இருந்தது. நபிகள் நாயகமவர்களும் தங்கள் வாலிபப்பருவத்தில் சங்கத்தில் சேர்ந்து ஒழுங்கான முறையில் சங்கத்தை நடத்திவந்தார்கள். பின்னர் நபிபட்டம் வரவே அச்சங்கத்தினர்கள் நாயகமவர்களைப் பகைத்து விலகிக்கொண்டனர். ஆயினும் நாயகமவர்கள் சங்கத்தின் தோரணையிலேயே இஸ்லாம் மதப்பிரசாரத்தை நடத்திவந்திருக்கிறார்கள். கலீபாக்களாக வந்தவர்கள் அச்சங்கவழியையே பின்பற்றி நடந்துளர். உதாரணமாக, சாதாரண ஸஹாபிகள் அங்கத்தினர் என்ற முறையில் இருந்தனர். மஸ்ஜிதுகளே இச்சங்கத்தின் காரியாலயமாக இருந்தன. இவ்விஷயத்தை ஊன்றி கவனிப்பின் உண்மை புலப்படும். அவர்களுக்குள் ஒற்றுமையும் சகிப்புத்தன்மையும், குன்றா ஊக்கமும், விடாமுயற்சியுமிருந்ததால், அவர்கள் எடுத்த மதப்பிரசாரத்தில் வெற்றிபெற்றனர். அம்மாதிரி இச்சமயம் நாமும் வேலைசெய்யின் வெற்றி பெறுவது நிச்சயம் இம்மாதிரி சங்கங்கள் வடநாட்டில் இருக்கின்றன. நமது தென்னாட்டில் இல்லாதிருப்பது வருந்தத்தக்கது. நம் தென்னாட்டிலும் பல சங்கங்கள் இருந்தாலும், அவைகள் தங்கள் நோக்கத்தில் சித்தியடையாததற்குக் காரணம் குறுகிய நோக்கமும் பதவி மோகமுமேயாம் "தன்கையே தனக்குதவி" என்ற முதுமொழிக் கேற்ப நமது காரியத்தை நாமே செய்து முடித்தல் அவசியமும் அவசரமுமாகும். வஸ்ஸலாம்."

தலைவரின் பிரசங்கம் முடிந்ததும், பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மறுநாள் சங்க மத்ரஸாகட்டிடத்திற்கு ஜனுப் தலைவர் அவர்கள் அஸ்திவாரக்கல் நாட்டினர். அப்பால் மகாநாடு இனிது முடிவுபெற்றது.

நிருப சாரம்

[நமது மார்க்க அன்பரில் பலர் மனமுவந்து பல நிருபங்கள் வரைந்தனுப்பியுளர். மாத சஞ்சிகையில் அந்நிருபங்கள் முழுதையும் பிரசுரிக்க இயலாதாயினும், அவற்றின் முக்கிய சாரத்தை மட்டும் வெளியிடுகிறோம். ப-ர்]

நாஸ்திகர் நல்வழிப்படல்:—பா. தாவூத்ஷா என்பார் தமது 'தாருல் இஸ்லாம்' பத்திரிகையின் மூலம் தென்னாட்டிலே மார்க்கப் புரட்டான பிரசாரம் புரிந்து வருகிறார். அதற்கு இஸ்லாமிய சுயமரியாதை என்று பெயராம். அதன் விளைவாக திண்டுக்கல்லைச் சார்ந்த

நாகில் நகர் முஸ்லிம் யுவர்களில் கா. அப்துல் ஹமீது என்பாரும், அவரைச் சார்ந்த சிலரும் சென்னையில் பிரசுரமாகும் "திராவிடன்" பத்திரிகையில் இஸ்லாம் மதத்தையும், குர்ஆனையும், நபிமார்களையும் ஏசியும் பேசியும் எழுதி, நாத்திகப் பிரசாரம் புரிவதில் ஈடுபடலாயினர். இதை யறிந்த இந்நகர முஸ்லிம்களுக்கு ஆத்திரம் உண்டாயிற்று. மேலும் அவ்வாலிபரின் நெருங்கிய உறவினர் வாசஞ் செய்யும் இலங்காகுறிச்சி, வேல்வார்க்கோட்டை, சித்துவார்பட்டி, கோவிலூர், ராஜக்காபட்டி ஆகிய ஊர்களிலுள்ள முஸ்லிம்களும் அவ்விளைஞரை வெறுக்கவும் கண்டிக்கவும் தொடங்கினர். இந்நிலையில் இக்குமரரைத் தீய கொள்கைகளிலிருந்து திருப்ப வேண்டுமென்று மார்க்காபிமானிகள் தீர்மானித்தார்கள். சென்னை இஸ்லாஹுல் அகாயித் சங்கப் பிரசாரகரான ஜனாப் மௌலவீ எம். முகம்மதுமியான் சாகிப்(பாக்கவீ)அவர்களையும், ஜனாப் அப்பாஸ் அலீ, ஜனாப்யாகூப் அலீ முதலியவர்களையும் கொண்டு இதற்காக இப்பகுதிகளில் மார்க்கப் பிரசாரம் புரிய அப்பெரியார்கள் ஏற்பாடு செய்தனர்.

சென்ற 7-3-30 வெள்ளிக்கிழமையன்று மார்க்கப் பிரசாரகர்கள் வேல்வார்கோட்டைக்குச் சென்று ஜும்ஆத்தொழுகைக்குப் பின் மஸ்ஜிதில் பிரசங்கம் செய்தார்கள். அதில் பா. தாவூத்ஷா என்பார் செய்து வரும் நாஸ்திகப் பிரசாரத்தின் மோசமான போக்கையும், அவரது பிரசாரத்தின் பயனாக முஸ்லிம் பால்யர்களில் சிலர் மடமையால் ஈடுபடுவதையும், அத்தீமையை முளையிலேயே கிள்ளிவிட வேண்டிய அவசியத்தையும் மிகவிபரமாகக் கூறப்பட்டது.

அதன் பலனாக, ஷெ யூவர்களைச் சேர்ந்த முகம்மது காசிம் என்பார் தமது குற்றத்தையுணர்ந்து அதனைப் போக்கிக்கொள்வதாகத் தெரிவித்துக் கொண்டார். நாகில் நகர் ஜனாப் இ. சக்கரை ராவுத்தர் அவர்களின் முயற்சியால்சென்ற 13-3-30 தேதி காலை ஜனாப் த. செ. அப்துல் வஹ்ஹாப் சாஹிப் அவர்களது மாளிகையின் மேல்மாடியில் முஸ்லிம்களின் பொதுக்கூட்டம் ஒன்று கூடிற்று. நகரத்திலுள்ள பிரபல உலமாக்களும், வியாபாரிகளும், முனிசிபாலிடியி லுள்ள முஸ்லிம் கௌன்சிலர்களும் விஜயம் செய்தனர்.

தற்சமயம் நாஸ்திகப் பிரசாரம் நடைபெறும் தோரணையையும் ஜனாப் முகம்மது காசிம் என்ற யுவர் அதில் ஈடுபட்டு பேசிய பேச்சுக்களையும் பற்றி ஜனாப் யாகூப் அலீ தெளிவாக எடுத்துரைத்தார். பின்பு இஸ்லாஹுல் அகாயித் சங்கப் பிரசாரகரான மௌலவீ முகம்மதுமியான் சாகிப் (பாக்கவீ) அவர்கள் சபையினரின் மனதிற்படும்படி உருக்கமாகப் பிரசங்கம் செய்தார். அப்பால் ஷெ முகம்மது காசிம் என்ற யுவர் "நான் மனப்பூர்வமாக நாத்திகப் பிரசாரத்தில் ஈடுபடவில்லை; எப்படியோ அத்திய பிரசாரத்தில் ஈடுபட்டேன்; அதற்காக மிகவும் வருந்துகிறேன். ஆதலால் சபையினர் என்னை மன்னிக்கவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார். மேலும் இனிமேல் இவ்விதம் பிரசாரத்திலோ, இவ்விதப் பிரசாரம் செய்பவர்களுடனோ தாம் சேருவதில்லை என்றும் அவர் பகிரங்கமாக வாக்குறுதிகொடுத்தார். பின்பு, ஆலீ ஜனாப் த. ம. கா. முஹம்மது இப்ருஹீம் ஆலிம் சாகிப் அவர்களின் தலைமையில் ஏழு பேரைக்கொண்ட ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தி, இக்கூட்டத்திலேயே மார்க்கச் சட்டப்படி முடிவுகூறவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இப்பஞ்சாயத்தார்களின் தீர்மானப்படி, ஷெ பஞ்சாயத்துத் தலைவர் ஜனாப் முஹம்மது இப்ராஹீம் ஆலிம் சாகிப் அவர்களால் ஷெ முகம்மது காசிம் என்ற யுவருக்கு மார்க்கபோதனை புகட்டி, இதுமுதல் நல்ல வழியில் நடந்துகொள்ள வேண்டுமென அவ்ருக்கு எச்சரிக்கையும் செய்யப்பட்டது. அவருடன் சேர்ந்த இதர வாலிபர்களை இதே விதமாகச் சீர்திருத்தும் பொருட்டு நாகில் நகரின் முக்கியஸ்தர்களான ஜனாப். இ. வெள்ளைய ராவுத்தர், இ. சக்கரை ராவுத்தர், இ. அப்பாவு ராவுத்தர், முகம்மது காசிம் ராவுத்தர் ஆகிய நால்வரும் நியமிக்கப்பட்டனர். முடிவில் தாம்பூலம் வழங்க, கூட்டம் கலைந்தது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஒரு பெரியாரின் மரணம்:—மதுரை ஜில்லா உத்தமபாளையம் பிரபல மிராசுதாரும் ஏழைகளின் நண்பரும் தர்மசீலருமான ஸயீது அஹ்மது என்ற நரியன் சையதுக்கானி ராவுத்தர் அவர்கள் சென்ற 2-3-30-ல் தாருல் பனாவைவிட்டு தாருல் பகாவை அடைந்தார்கள். அவருடைய மரணச்செய்தி வெகு சீக்கிரம் நகரெங்கும் பரவவே முஸ்லிம்களும்

மற்றவரும் கூட்டம் கூட்டமாக வந்து சேர்ந்தனர்; அயல் கிராமங்களிலிருந்தும் ஜனங்கள் வந்து குவிந்தனர். ஷெ யாரால் கட்டுவிக்கப்பட்ட ஜாமியா மஸ்ஜிதில் பெருந்திரளான ஜனங்களால் அன்று இரவு 10-மணிக்கு ஜனாஸாத்தொழுகையை நடத்தினர். பின்பு அங்கே அவருக்கெனத் தயார்செய்து வைத்திருந்த கப்ரில் நல்லடக்கஞ் செய்யப்பட்டது. அவர் சுமார் 40 ஆயிரம் ரூ செலவில் ஆற்றங்கரையோரத்தில் கருங்கற்களால் ஒரு ஜாமிஆமஸ்ஜீது கட்டுவித்தார். ஏழை முஸ்லிம் சிறுவர் சிறுமிகளுக்கு இலவசமாக மார்க்கக் கல்வி கற்பிக்க ஒரு மத்ரஸாவும் ஸ்தாபித்தார். மத்ரஸா என்றென்றும் இருந்து வருவதற்குத் தகுந்தவிதமாக உஸ்தாது முதலியவர்களுக்கு சம்பளம், கட்டிட மராமத்துச் செலவு முதலியவைகளுக்கும், மஸ்ஜிதின் கத்தீபு, முஅத்தின் முதலியவர்களின் சம்பளம், ரமலான் மாதத்தில் நோன்பாளிகளுக்கு இப்தார் வேளையில் கஞ்சி காய்ச்சி வினியோகித்தல், முஸாபிர் முதலியவர்களுக்குத் தர்மம் ஆகிய சகல செலவுகளுக்கும், போதியவருவாயுள்ள நஞ்சை, புஞ்சை நிலங்கள், பேட்டை, கடைகள் முதலியன ஜனாப் மர்ஹூம் அவர்களால் வக்பு செய்யப்பட்டுள. அவரது மரணத்தால் உத்தமபாளையம் வாசிகளுக்குப் பெருத்த நஷ்டமும், துக்கமும் உண்டு என்பதிற் சந்தேகமில்லை. எல்லாம் வல்ல அல்லாஹூ தஆலா மௌத்தாவிற்கு மஃபிரத்துச்செய்து அருள்புரிவானாக என ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஓர் உத்தமியின் வபாத்து:—கமாலிய்யா முஸ்லிம் சங்கத்தின் தலைவரும், கீமந்தான் சோலியா முஸ்லிம் ஜாமி ஆமஸ் ஜிதின் மானேஜிங் டிரஸ்டிகளில் ஒருவரும், இரங்கூன் சோலிய முஸ்லிம் அசோசியேஷனின் நிர்வாகசபை அங்கத்தினருமான ஆலி ஜனாப் ஆ. இ. நாகூர் மீரா சாஹிப் அவர்களின் அருமைத் தாயார் சென்ற 21-2-30 வெள்ளிக்கிழமை தாருல் பனாவைவிட்டு தாருல்பகா அளவிற் சேர்ந்தார்கள். மர்ஹூமா அவர்களுக்காக சென்ற 5-3-30-ல் ரங்கூன் கீமந்தான் சூரத்திபஜார் 6-நெம்பர் வீட்டில் ஜனாப் நாகூர் மீரா சாஹிப் அவர்களால் வெகு சிறப்பாக கத்தம் பாத்திஹா நடத்தப்பட்டது. சுமார் 700 பேர்களுக்கு நல்விருந்தும் செய்யப்பட்டது. இரங்கூன் சோலிய முஸ்லிம் அசோசியேஷன் ஜீவிய தலைவரான V. M. அப்துர் ரஹ்மான் அம்பலம் அவர்களும், நிர்வாகசபை மெம்பர்களும் தஃஸியத்திற்காக விஜயம் செய்தார்கள் என ஜனாப் உ ப. இப்றுஹீம்ஸாஹிப் எழுதுகிறார்.

ஹாஜிகளின் புறப்பாடு:—இராயவேலூர் மத்ரஸயே பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்தின் தலைமை ஆசிரியரும், தென்னாட்டின் முஸ்லிம் கல்விக்கடலுமாகிய அல்லாமா முகம்மது அப்துல் ஜப்பார் ஸாஹிபுல் காதிரி (மத்தஜில்லுஹூ) அவர்களும், கூத்தா நல்லூர் முதலிய இடங்களிலிருந்து வேறு பலரும் ஹஜ்ஜூப் பிரயாணத்தை ஒட்டி இம்மாதம் 15-3-30 சனிக்கிழமை காலை பம்பாய் எக்ஸ்பிரஸில் சென்னைவிட்டுப் பிரயாணமானார்கள். ஹஜ்ரத் கிப்லா அவர்கள் 13-3-30-ல் வேலூரிலிருந்து புறப்பட்டு அன்றிரவு 8·10-மணிக்கு மதராஸ் சென்ட்ரல் ஸ்டேஷன் வந்து சேர்ந்தார்கள். அவர்களை வரவேற்க சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்திலிருந்தும், ஸைபுல் இஸ்லாம், ஹிபாஜத்துல் இஸ்லாம் ஆகிய பத்திரிகாலயங்களிலிருந்தும் கிடங்குத்தெரு பெரியமெட்டு முதலிய இடங்களிலிருந்தும், பல பிரமுகர் ஸ்டேஷனுக்குப் போயிருந்தனர். ஜனாப் ஹஜ்றத் அவர்களுடன் ஷெ மத்ரஸா நாஜிரும் மீர்மஜ்லிஸூமான மௌலானா மௌலவீ ஹாஜீ ஜியாவுத்தீன் முஹம்மது சாகிப் (கான்பகதூர்) அவர்களும், மத்ரஸா உஸ்தாதுமார்களில் பலரும் வேலூரிலிருந்து வந்தார்கள். ஹஜ்றத்அவர்கள் கிடங்குத் தெருவிலுள்ள M. Z. நூருத்தீன் சாகிப் கம்பெனிக்கு மோட்டாரில் அழைத்துச் செல்லப்பட்டார்கள். மறுநாள் பகல்முழுதும் நகரத்திலுள்ள பெருமக்களும், வியாபாரிகளும் மற்றவர்களும் கூட்டங்கூட்டமாகச் சென்று ஹஜ்றத் அவர்களை முலாக்காத்துச் செய்தனர். அன்று மாலை (சனிக்கிழமை இரவு) ஹஜ்றத்அவர்களுக்கு சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம், இஸ்லாஹூல்அகாயித் ஆகிய சங்கங்களின் காரியதரிசியான மௌலவீ S. A. முஹம்மதுஅலீசாகிப் அவர்களால் தம்புசெட்டிதெரு 63 நெம்பர் கிரகத்தில் விருந்தளிக்கப்பட்டது. ஷெவிருந்துக்கு நகரத்திலுள்ள பிரபல உலமாக்களும் தனவந்தர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். மறுநாள் காலை ஹஜ்றத் அவர்களை வழி அனுப்புவதற்காக நகரத்திலுள்ள முஸ்லிம் தலைவர்

கள், தன்வந்தர்கள், உலமாக்கள் முதலியவர்கள் காலை 7 மணியிலிருந்தே சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்துகொண்டே இருந்தனர். ரயிலடியைவிட்டு ஹஜ்றத் அவர்களின் வண்டி புறப்படும்போது கூடியிருந்த நம்மவரின் தொகை ஆயிரமாகும். ஹஜ்றத் அவர்களும் இதர ஹாஜிகளும் விரும்பிச் செல்லும் ஹஜ்ஜுக் கடமையை இனிது நிறைவேற்றி க்ஷேமமாக வந்து சேர எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக என ஒரு நிருபர் எழுதுகிறார்.

சமாச்சாரத் திரட்டு

அகில இந்திய முஸ்லிம் லீக்

அகில இந்திய முஸ்லிம் லீக் கமிட்டி, சென்ற 28-2-30 ல் ஜனுப் முஹம்மது அலீ ஜின்ஞு அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் டில்லியில் கூடிற்று. சென்ற இரண்டு வருஷங்களாகப் பிளவுபட்டிருந்த ஜின்ஞு லீக் கக்ஷியினரும், ஸர். ஷபீ லீக் கக்ஷியினரும் அதன் தலைவர்களும் அக்கூட்டத்தில் ஒன்று கூடினர். இரு கக்ஷித் தலைவர்களான ஜனுப் முஹம்மது அலீ ஜின்ஞுவும் ஸர் முஹம்மது ஷபீயும் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவிக் கொண்டனர். சமூக சம்பந்தமான பிரசினையைத் தீர்த்து வைப்பதற்காகச் சிலர் முயற்சிசெய்து வருவதைப் பாராட்டித் தீர்மானஞ் செய்யப்பட்டது. இதர விஷயங்களைக் கவனிப்பதற்காக 14-3-30 க்கு கூட்டத்தை ஒத்திவைத்தனர். அங்ஙனம், ஒத்திவைக்கப்பட்ட கூட்டம், புது டில்லியில் 14-3-30 ல் ஜனுப் முஹம்மது அலீ ஜின்ஞுவின் தலைமையின்கீழ் நடந்தது. அடுத்த வருஷாந்திர மகாநாடு கூட்டுவதற்கு இடமும் தேதியும் குறிப்பிட, தலைவர் உள்பட எட்டு பேர்களைக் கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அடுத்த மகாநாட்டிற்கு யாரை அக்கிராசனராகத் தெரிந்தெடுப்பது என்ற விஷயம் அடுத்த கூட்டத்தில் முடிவுசெய்யப்படும். அகில இந்திய முஸ்லிம்லீக் கௌன்சில் சபைக்கு 8 புதியமெம்பர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். கௌன்ஸிலில் ஏற்பட்டுள்ள காலிஸ்தானங்களுக்குப் புதிய உத்தியோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்கும் விஷயமும் அடுத்த கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

இந்தியாவின் கடன்தொகை

இந்தியா செல்வம் படைத்த தேசமென எப்பொழுதும் சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் தேசமக்களாகிய 32 கோடி ஜனங்களின் சராசரி தினசரி வரவு ஓரணுவும் ஒன்பது தம்பிடியுமேயாம். இத்தகைய ஏழ்மை நிலையைக்குறித்து பத்திரிகைகளில் அடிக்கடி எழுதப்படுவதைப் பார்க்கலாம். ஆதலால் இந்திய மக்களின் வருவாயைப்பற்றி எழுதாமல், தற்சமயம் இந்தியா அரசாங்கத்தாரின் பொறுப்பில் இருக்கிற கடன்தொகையை மாத்திரம் கீழே குறிப்பிடுவோம். அக்கடன் தொகையையும் அதற்குள்ள வட்டியையும், நமது வரிப்பணத்தைக் கொண்டுதான் ஈடு செய்யவேண்டும். கடன் தொகைக்காக இந்தியா அரசாங்கத்தார் லக்ஷக்கணக்கான ரூபாய்களை வருஷா வருஷம் வட்டியாகச் செலுத்தி வருகின்றனர்.

31-3 29 ம் வருஷம்வரை இந்திய அரசாங்கத்தின் கடன்—இந்தியாவில் 604,11,00,000 ரூபா. (அதாவது 604 கோடியே 11 லட்சம்) இங்கிலாந்தில் 35,25,40.000 பவுன்களாகும். (அதாவது 35 கோடியே 25 லட்சத்து 40 ஆயிரம்) மொத்தம் 10741600000 ரூபாய்களாகும் (அதாவது 1074 கோடியே 160 லட்சம்). இந்தக் கடன் தொகையில் பெரும்பாகம் அந்நியதேசத்து முதலாளிகளுக்கே கொடுக்க வேண்டியதாகும். இந்தக் கடன் வரவரக் குறைவுபடுவதற்குப்பதிலாக வருஷாவருஷம் அதிகரித்துக்கொண்டே வருவது வருந்தத்தக்க விஷயமாகும். ஆகவே சென்ற ஏழு வருஷமாக இந்தியாவின் கடன் எவ்வாறு

அதிகப்பட்டு வந்திருக்கிறதென்பதைக் கவனிக்கவும்.

1923-ஞ 881கோடியே 74-லட்சம் ரூபா.
1924-ல் 919 கோடி ரூபா
1925-ல் 970 கோடியே 2 லட்சம் ரூபா
1926-ல் 996 கோடியே 36 லட்சம் ரூபா
1927-ல் 1006 கோடியே 19 லட்சம் ரூபா
1928-ல் 1026 கோடியே 37 லட்சம் ரூபா
1929-ல் 1074 கோடியே 16 லட்சம் ரூபா

நாளுக்குநாள் நமது தேசக்கடன் வளர்ந்து கொண்டே போகிறது என்பதற்கு மேற்கண்ட புள்ளி விவரங்களே சான்றாகும்.

காலமானார்

ஸ்பெயின் தேசத்தின் சர்வாதிகாரியாக விளங்கிய ஜெனரல் பிரைமாடி ரிவா என்பவர் காலமாகிவிட்டார். சுதந்தரத்திற்காக ஸ்பானியர்களுடன் போர்புரிந்த ரீப் முஸ்லிம்களையும், அவர்களது தலைவரான காஜீ அமீர் அப்துல் கரீம் அவர்களையும் அடக்குவதற்காக இவர் அரும்பாடு பட்டார்; அதற்காக யுத்தங்கள் செய்தார்; இறுதியாக பிரான்சு தேசத்தினரின் உதவியையும் தேடிக்கொண்டார்; ரீப் தேசத்தை அடக்கி அடிமைப்படுத்தினார். அதன்பலனாக ஸ்பெயின் தேசத்தில் அதிகச் செல்வாக்கடைந்து சர்வாதிகாரியாகி விளங்கினார்; சமீபத்தில் அப்பதவியை விட்டு விலக்கப்பெற்றார்; இம்மாதம் 16-ம் தேதி பிரான்சு தேசத்துத் தலைநகராகிய பாரிஸில் திடீரென இவரது ஆவி உடலத்தை விட்டோடியது.

ஜமியத்தே தப்லீஹுல் இஸ்லாம்

பஞ்சாப் மாகாணத்திலுள்ள அம்பாலா நகரில் மேற்கண்ட சங்கம் இருக்கின்றது. சென்ற ஜனவரி மாதத்தில் அச்சங்கம் செய்துள்ள வேலை விவரம்வருமாறு:—சங்கத்தின் பொதுக் காரியதரிசியான ஸெய்யிது குலாம் பிக்கீரங், நம் மார்க்கப் பிரசங்கியான மௌலவீ ஸயீது ஹஸன் உஸ்மானி, ஆகிய இருவரும் மீரட்டு, புலாந்துஷைர், குர்ஜா, அலிகர் ஆகிய இடங்கள் சென்று, சங்கத்தைப் பற்றிப் பிரசாரம் செய்தனர். சங்கத்தின் ஏனைய பிரசாரகர்களோ பஞ்சாப், ஐக்கிய மாகாணம், ஜெயபுரி சமஸ்தானம் முதலிய பகுதிகளில் 172 இடங்களுக்குச் சென்றனர். அதன் பலனாக 24 இடங்களில் மகாநாடுகள் நடைபெற்றன; ஐக்கிய மாகாணத்திலே தப்லீஹுல் இஸ்லாம் என ஒரு சங்கம் புதிதாக நிறுவப்பட்டது. இரண்டு ஹிந்துக்கள் இஸ்லாத்தைத் தழுவினர். மேற்கண்ட சங்கத்தின் ஆதரவில் 77 பள்ளிகள் நடந்துவருகின்றன. அவைகளில் 1,540 பிள்ளைகள் மார்க்கக் கல்வி பயின்று வருகிறார்கள். கோரக்பூர் ஜில்லாவைச் சேர்ந்த ஸெராஸிஎனும் இடத்திலுள்ள தாருல்இஷாஅத் எனும் மத்ரஸாவின் மாணவரிலே ஒன்பதின்மருக்கு தப்லீஹுல் இஸ்லாம் சங்கம் பணவுதவி புரிந்து வருகின்றது. சங்கப் பிரசாரகரில் ஒருவர் முஸ்லிம் அல்லாதாரிடையே பிரசாரம் செய்கிறார். வேறு இருவரோ முர்தத்தானவர்களை மீண்டும் இஸ்லாத்தில் சேர்க்க முயன்று வருகின்றனர்.

ஜனவரி மாதத்தில் அச் சங்கத்தில் 328-பேர் ஜீவிப சந்தாதாரராகச் சேர்ந்துளர்; தப்லீக் நிதிக்குப் பலர் பணவுதவி செய்திருக்கின்றனர். மேலும் பணவுதவி கிடைப்பின், சங்கம் இன்னும் நல்லவேலை செய்யும் என்று பொதுக் காரியதரிசி கூறுகிறார். அவரது விலாசம்:—"பொதுக் காரியதரிசி, சென்டிரல் ஜமியத்துத் தப்லீஹுல் இஸ்லாம், அம்பாலா."

ஸர் அப்ஸறுல் முல்க் மர்ஹூம் :—நிஜாம் ராஜ்யத்தின் பிரதான தளகர்த்தரான ஸர். அப்ஸறுல் முல்க் அவர்கள் ; சென்ற மார்ச்சுமீ 1௳ காலை 6 மணிக்கு மாரடைப்பினால் திடீரென மரணமடைந்தார். (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்). நிஜாம் மன்னர் அவர்களும், அவருடைய பிரதான மந்திரியும் மற்ற பிரபலஸ்தர்களும், மர்ஹூம் அவர்களின் மாளிகைக்குச்சென்று துக்கம் விசாரித்தனர். வேட்டையாடச் சென்றிருந்த மர்ஹூம் அவர்களின் குமாரராகிய நவாப் உஸ்மான் யாருத் தௌலாவும் வந்து சேர்ந்தார். அன்று மாலை ஆயிரக்கணக்கான ஜனங்களால் ஜனாஸாத் தொழுகை நடத்தப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டது.

மர்ஹூம் அவர்கள் 1852-ல் பிறந்தவர். 1867ம் வருஷ முதலிருந்து பல போர்களி

னும் கலந்துகொண்டு மிகுந்த வெற்றி அடைந்தவர். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் மீது அதிக அன்புகொண்டவர். 1888-ல் நடந்த பிரிட்டிஷ் படையெழுச்சியிலும், ஸர். ஆல்பிரட்காஸ்லி என்பவரின் இலாக்காவின் கீழ் சீன படையெடுப்பிலும், அதை முன்னிட்டுச் சேர்ந்து, பிரிட்டிஷ் சேனையிலும் கௌரவ கர்னல் பட்டம் பெற்றவர். 1907-ல் ஸீ. ஐ. ஈ. பட்டம் பெற்றார். 1912-ல் நாட்டுப் படைக்குத் தலைவரானார். இவர் ஐரோப்பிய மகா யுத்தத்திலும் கலந்துகொண்டார். இவர் தேச நன்மைக்காகவும், ஒற்றுமைக்காகவும், சமூகத்திற்காகவும் பற்பல அரிய தொண்டாற்றி இருக்கிறார். அல்லாஹு தஆலா மர்ஹூம் அவர்களின் பிழைகளைப் பொறுத்து அருள்வானாக.

துரோகிகளுக்குத் தண்டனை:—அப்கானிஸ்தான் மாஜீ அமீர் அமானுல்லாகான் முன்னம் ஐரோப்பா யாத்திரை சென்றார் அல்லவா? அக்காலத்தில் ராஜீய பரிபாலனத்தை நடத்தியவர் முஹம்மது வலிகான் என்பவர்; அவர் அமானுல்லாவுக்குத் துரோகம்செய்து, அவரது ஆட்சியை ஒழிக்க பச்சாசக்கோவுக்கு உதவி செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். தற்கால அமீர் அவர்களால் நியமிக்கப்பெற்ற ஸ்பெஷல் கோர்ட்டார் விசாரணைசெய்து அவரைக் குற்றவாளி என்று தீர்மானித்தனர்; அவர், ஷா நாதிர் கான் அவர்களால் தீவாந்திர சிக்ஷை விதிக்கப்பட்டார். பச்சாசக்கோவுடன் சேர்ந்து மாஜி அமீர் அமானுல்லாவுக்கு விரோதமாக யுத்தம் செய்த துருக்கி ஜெனரல் மஹ்மூத்ஸமிக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

பச்சாசக்கோவை மஹ்தீ எனக்கூறி அவன் இறந்த பின்பும் நாட்டில் குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்த கான் முஹம்மதும் அவனுடைய ஸகாக்களும் நாதிர்கான் படையினரால் கைதி செய்யப்பட்டனர். கைதியானவர்கள் விசாரிக்கப்பட்டு அவர்களில் 60 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அப்கானிஸ்தானத்தில் முன்னம் அரசர்களாக இருந்தவர்கள் கொடுத்த ஜாகீர்களை நாதிர்கான் அவர்கள் பரிசீலனை செய்து வருகிறார்; தேசத்துக்கு அரிய தொண்டாற்றியதற்காக ஜாகீர் அளிக்கப்பட்டதை அவர் ஒன்றும் செய்வதில்லை. வெறும் நண்பர்களாக இருந்தனர் என்ற காரணத்திற்காக ஜாகீர் பெற்றவர்களின் ஜாகீர்களை கைப்பற்றி வருகிறார்; காபுல் ஏழைகளின் கஷ்ட நிவாரணத்திற்காக நாதிர்கான் முன்னர் கொடுத்த 60 ஆயிரம் ரூபாய் நன்கொடை போக இன்னும் 10 ஆயிரம் ரூபாய் அளித்திருக்கிறார்.

அல்லாமா இப்னு தைமிய்யாவின் கொள்கைகளும் தாருல் இஸ்லாத்தின் கூற்றும்

ஜனாப் M. சுல்த்தான் எழுதியது

அல்லாமா இப்னு தைமிய்யா என்பவர் இருக் மாகாணத்திலுள்ள ஹர்ரான் என்னும் ஊரைச்சேர்ந்தவர்; அப்துல் ஹலீம் என்பவரின் புதல்வர்; அஹ்மது என்பது அவரது இடுகுறிப் பெயர். இப்னுதைமிய்யா என்பது அவரது வம்மிஸப்பெயர். அவர் ஹம்பலி மத்ஹபைச் சேர்ந்தவர்; அவர் சிறுவயதிலேயே கலாம் ஷரீபை மனனஞ் செய்து ஹாபிஜ் ஆனார். திமிஷ்க் நகரிலுள்ள உலமாக்களிடத்தில் மார்க்கக் கலைகளைப் பயின்றார். அவருக்கு தகுந்த ஞாபக சக்தியும் கூரியமதியும் இருந்தன; ஆதலால், சிறிது காலத்தில் சகல கலா வல்லவராக விளங்கினார்.

அவரிடம் பலர் சென்று மார்க்கக்கலைகள் கற்றுக்கொண்டனர். அவர் அநேக கிரந்தங்களையும் இயற்றினார். அதனால் அக்காலத்திய சுல்தானால் அவருக்கு "ஷைகுல் இஸ்லாம்" என்ற பட்டம் அளிக்கப்பட்டது. முடிவில் அவர் மார்க்க விஷயங்களில் பலவற்றைச்

தமது அபிப்பிராயப்படி குயுக்தியாக வரைய ஆரம்பித்தார்; இஜ்மாஉ என்னும் இமாம்களின் தீர்மானத்திற்கு மாறாகப் பல மஸ்அலாக்களையும் எழுதினர். அதுகண்டு உலமாக்கள் அவற்றை மறுத்தார்கள்.

அவருடைய மூளையில் கோளாறு ஏற்பட்டதால், "இஜ்மாவு"க்கு மாற்றமாய்க் கூறுகிறாரென்று சிலர் கருதினர். அதன் பயனாக முஸ்லிம் பொது ஜனங்களிடையே பெரிய குழப்பம் ஏற்பட்டது. அதனால், அவரைச் சிறையிலிடும்படி சுல்தான் கட்டளை பிறப்பித்தார். திமிஷ்கிலுள்ள கோட்டைச் சிறையில் அவர் வைக்கப்பட்டார். அதுமுதல் ஷெய்குல் இஸ்லாம் என்ற பட்டமும் அவரைவிட்டு நீக்கப்பட்டது.

சிலசமயத்தில் அவர் விடுதலை பெற்றும், மீண்டும் அதே காரணத்திற்காகச் சிறையிலடைபட்டார். அச்சிறையிலேயே அவரது ஆயுள்காலம் முடிவுபெற்றது. ஆரம்பத்திலே சிறையில் அவருக்குக் கடிதம், மை, பேனா இவைகள் கொடுக்கும்படி அனுமதியளிக்கப்பட்டிருந்தது, அதனால் அவர் பலவிதமாக எழுதித் தன்கொள்கையைப் பரப்பிவந்தார். அதன் நிமித்தம் மறுபடியும் குழப்பம் ஏற்பட்டது; எனவே இந்த உரிமைகள் மறுக்கப்பட்டுப் போயின.

அவர் இஜ்மாவுக்கு மாறாக எழுதிய மஸ்அலாக்கள் பல உள. அவைகள் யாவற்றையும் விவரிப்பது அனாவசியம். என்றாலும், அவைகளிற் சிலவற்றை மாத்திரம் இங்கே சுருங்கச் சொல்லவேண்டும்.

அவர் "சிறாத்துல் முஸ்த்தகீம்" என்ற ஒரு கிரந்தம் வரைந்திருக்கிறார். அதில் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் றலி யல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை காபிர் என்று கைகூசாது எழுதியிருக்கிறார். இன்னும் உமர் இப்னு கத்தாப் (றலி) அவர்களைப்பற்றியும், அலீ இப்னு அபூதாலிப் (றலி) அவர்களைப் பற்றியும், தகாத வார்த்தைகளால் இழிவு படுத்தியிருக்கின்றார். அம்மகான்கள் வலுப்பமான சஹாபிகள்; நாயகம் (சல்) அவர்களின் முக்கியமான தோழர்கள் என்பது யாவருமறிந்ததே. அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (றலி) அவர்களுக்கு குர் ஆனின் கலைகளைக் கொடுக்கும்படி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹு தஆலாவிடத்தில் துஆக் கேட்டார்கள். அதனால் அவர்களுக்கு குர்ஆனுடைய சகல கலைகளும் கொடுக்கப்பட்டிருந்தன. இவ்வளவு வலுப்பத்தையுடைய ஒரு மஹத்தான ஸஹாபீ அவர்களைக் காபிரென்று கூறுகிற அவருடைய ஈமான் எத்தன்மையது?

மேலும் அவர் "ஜியாறத்துல்குபூர்" கப்றுகளைத் தெரிசனஞ்செய்யப் பயணம் செல்வதைப் பொதுவாகவும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் "றௌலா" ஷரீபுக்குச் சென்று ஜியாரத்துச் செய்வதைக் குறிப்பாகவும் மறுத்தார். அக்காலத்திய உலமாக்கள் அவருக்குத் தக்க மறுப் பெழுதினர்கள். இன்றையதினம் ஹாஜிகள் "மதீனா முனவ்வரா" சென்று நபிகள் நாயகமவர்களின் றௌலா ஷரீபை ஜியாறத்துச் செய்துவருகின்றார்கள். நாயகம் (சல்) அவர்களும் "என்கப்றை எவர் தரிசிக்கின்றாரோ அவருக்கு என் ஷபாஅத்து வாஜிபாய் விட்டதென்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள். இம்மகத்தான ஜியாறத்தை இப்னு தைமிய்யா என்பார் கூடாதென்கிறார். இவைபோன்ற "இஜ்மாஉக்கு" விரோதமான இன்னும் அநேக மஸ்அலாக்கள் இருக்கின்றன. அவைகளை விவரிக்கின் நந் தமிழ்நாடு நடுங்கிவிடும்.

மேலும், அவர் இமாம் கஜ்ஜாலி றஹ்மத்துல்லாஹி அலைஹி, அல்குத்பு அபுல்ஹஸன் ஷாதுலீ றஹ்மதுல்லாஹி அலைஹி முதலிய பெரியார்களைக் குறைகூறி வரைந்திருக்கின்றார். இக்காரணங்கள் பற்றியே, அல்லாமா இப்னு ஹஜ்றுல் மக்கீ றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் தங்கள் பத்வாவில் "இப்னு தைமிய்யா வழிகேடரும் வழி கெடுப்பவருமாவார்; அவருடைய கண்கள் ஹக்கான விஷயத்தைப் பார்ப்பதைவிட்டுக் குருடாய் விட்டன; அவருடைய காதும் செவிடாய் விட்டது. அவருடைய வார்த்தைக்கு யாதொரு மதிப்பும் கிடையா"தென்று தக்க ஆதாரங்களோடு கூறி யிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட பேர்வழியை "தாருல் இஸ்லாம்" பத்திரிகையின் தலைமை ஆசிரியரான ஹாபிஸ் பாக்கவீ என்பார், "அவர் ஷெய்குல் இஸ்லாம்; அவரைக் கோடரிக் காம்புகளான சிலரே தூஷிப்பார். அவர் மாபெருங் கல்விமான்; அவரை இளக்காரஞ் செய்பவன் அறிவற்றவன்; மடமை குடி

கொண்டவன்; துற்கிருத்தியன், புரக்ஷிக்காரன்'' என்று கூறி அவரின் போதனைகளை சிறுகச்சிறுக, தா இ. வில் வெளியிடப்போவதாயும் 16-3-30 ல் வெளியான இதழில் வரைந்துளார்.

இப்னு தைமிய்யாவின் கல்வித் தேர்ச்சியைப்பற்றி எவரும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் அவர் மார்க்க விஷயத்தில் வழி தவறி முரணாக எழுதியதை மட்டுமே உலமாக்கள் ஆக்ஷேபிக்கின்றார்கள். அவரோ, ஹம்பலீ மத்ஹபைச் சேர்ந்தவர்; அவரின் போதனைகளிற் சில நேரானவையே. ஆயினும் ஹனபீ ஷாபிஈ மத்ஹபைப் பின்பற்றி யிருக்கும் முஸ்லிம்களிடையே அதைப் பரப்புவதன் அவசியந்தா னென்ன?

நம்நாட்டிலுள்ள வஹ்ஹாபிகள், இப்னுதைமிய்யாவின் கூற்றுகளையும் அவரின் சிஷ்யரான இப்னு கைய்யிமின் கூற்றுகளையும் ஆதாரமாக வைத்து நம் சுன்னத்துவல் ஜமாஅத்தாரிடையே முன்னர் பெரும் குழப்பம் செய்துவந்தனர்.

இதுபொழுது பா.தா. வும், அவரின் சஹாபாடியான முகம்மது யூசுப் ஹாபிஸ் பாக்கவீ என்பாரும், அவரின் சாதாரணமான அபிப்பிராயங்களையும் அவரின் சரிதையையும் எழுதிவர ஆரம்பித்திருக்கின்றனர். இதைக் கொண்டு அவர்பேரில் தமிழ் மக்களிடையே நல்லெண்ணம் உண்டாகும்படி செய்து, கடைசியாக அவரின் வழி கேடான கொள்கைகளைப் பரப்புவதற்கு யோசனை செய்திருக்கின்றனர் போலும்!

முன்னொரு சமயம் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானியின் கொள்கைகளையும் அவரைப் பின்பற்றிய லாஹூர் கட்சியாரின் கொள்கைகளையும் நம் தமிழ்நாட்டில் அவ்விருவரும் நுழைய வைத்தனர். அதன் பயனாக அநேகரின் மனம் புண்பட்டது. பற்பல விடங்கள் குழப்பத்திற்கு உள்ளாயின.

இச்சந்தர்ப்பத்தில் இப்னு தைமிய்யாவின் வழி கேட்டைக் கிளப்ப மேற்கண்ட ஆசிரியர் இருவரும் ஆரம்பித்திருக்கிறார்கள். காதியானி மஸ் அலாக்களை நம் தமிழ்தேசத்தில் பரப்ப ஆரம்பித்துக் குழப்பம் செய்தது போதாதா? இப்பொழுது இப்னு தைமிய்யாவின் கூற்றுகளைக்கொண்டு, தமது வழக்கமான வழிகேட்டைப் பரப்பி இன்னும் அநேக இன்னல் செய்யவா நினைத்திருக்கின்றனர்? மேலே கூறப்பட்ட காரணங்களைக்கொண்டே அக்காலத்தில் மார்க்கத் தீர்ப்பு கூறுபவர்கள் இப்னு தைமிய்யாவைச் சிறையிலிடும்படி உத்திரவிட்டார்கள். இக்காலத்திய உலமாக்களும் அவரை மறுக்கின்றார்கள். ஹாபிஸ் பாக்கவீ என்பார் "மனப்புழுக்கத்தால் ஆலிம்கள் இவ்வாறு செய்கின்றன 'ரென்று தூஷிக்கின்றார். என்னே இவர் புத்தியின்போக்கு! இனியேனும் குருட்டு வாதங்களை விட்டு நேரான வழியில் சீராய்ச்செல்லுவார்களாக.

ஹஜ்ஜு கமிட்டியின் ஆலோசனைகள்

நமது முஸ்லிம்களின் மார்க்கக் கடமைகளில் ஹஜ்ஜு செய்வதும் ஒன்று. ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கில் நம்மவர் ஹிஜாஸுக்குச் செல்கின்றனர். அங்ஙனம் செல்லுகையில், ரயில் பிரயாணம், கப்பல் பிரயாணம், பாஸ்போர்டு என்னும் பிரயாண அநுமதிச்சீட்டுப் பெறுதல், அம்மைகுத்திக் கொண்டதற்கு அத்தாட்சிபெறுதல், வயித்தியப் பரீட்சை ஆகிவிட்டதென்று அத்தாட்சிபெறுதல், முதலிய இனங்களில் பிரயாணிகளுக்கு மிக்க கஷ்டமும் நஷ்டமும் உண்டு என்பது பிரசித்தம். மேலும், கப்பல் புறப்படும்துறைமுக நகரங்களிலும், கப்பல் பிரயாண காலத்திலும், இறங்கித் தங்குமிடங்களிலும், தொல்லைகளோ அனந்தம். தவிர, கப்பலிலே நீராடவும், சாப்பிடவும் வயித்தியம் பெறவும் போதுமான வசதிகள் இல்லை.

கமிட்டியின் வேலை

ஆனதுபற்றி அத்தகைய கஷ்ட நஷ்டங்களையும் தொல்லைகளையும், அசௌகரியங்களையும் அகற்றுவதற்கான வழிவகைதேடவேண்டும் என்று முஸ்லிம் மகாஜனங்கள் பன்னாட்களாகக் கிளர்ச்சி செய்து வந்தனர். அதன் பயனாக, 1929-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் இந்தியா கவர்ன்மெண்டார், "ஹஜ்ஜு கமிட்டி" என ஒரு கமிட்டியை நியமித்தனர். கல்கத்தா, பம்பாய், கராச்சி ஆகிய துறைமுக நகரங்களில் பிரயாணிகளுக்கு உள்ள வசதிகள் எப்படி? இன்னும் அதிக வசதியும் சௌகரியமும் தேடித்தர என்ன செய்யலாம்? அந்நகரங்களில் உள்ள ஹஜ்ஜு கமிட்டியின் கடமையும் அதிகாரமும் எவ்வாறுள? அந்நகரங்களிலே ஹாஜிகளின் பாதுகாப்பைக் கவனிக்க நியமிக்கப் பட்டிருக்கும் அதிகாரியின் கடமையும் அதிகாரமும் எங்ஙனம் இருக்கின்றன? அத்துறைமுக நகரங்களிலே ஹாஜிகள் தங்கியிருப்பதற்கான இடவசதி எப்படியுளது? கப்பலில் கிடைக்கும் இடவசதி எப்படி இருக்கிறது? இம்மாதிரியான விஷயங்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்து, அதிக சௌகரியம் தேடித் தர என்ன செய்யவேண்டும்? என்று சொல்ல வேண்டியதே அக்கமிட்டிக்கு ஏற்பட்ட வேலையாகும்.

கமிட்டியின் அமைப்பு

அக்கமிட்டியிலே மொத்தம் 10 பேர் இந்தியா கவர்ண்மெண்டாரால் நியமிக்கப்பெற்றனர். கனம் எச். வி. கிளேட்டன் என்பார் அதன் தலைவர். கான்பகதூர் முகம்மது இனுமுல்ஹக் அக்கமிட்டியின் காரியதரிசி. இந்தியா சட்டசபையின் மெம்பர்களான (1) கான்பகதூர் ஹாஜீ அப்துல்லாஹ் ஹாஜீ காசிம், (2) சேட் ஹாஜீ அப்துல்லாஹ் ஹாரூன், (3) ஜனப் பஜ்லே இப்ராஹீம் ரஹ்மத்துல்லாஹ் (4) ஹாஜீ சௌத்ரி முகம்மது இஸ்மாயில்கான், (5) மௌல்வீ முகம்மது ஷபிஃ தாவூதி, (6) கான்பகதூர் மக்தூர் செய்யிது ரஜன்பக்ஷ்ஷா (7) மௌல்வீ ஸெய்யிது முர்த்தஜா சாஹிப் பகதூர் ஆகிய இவர்களும் ராஜாங்கசபை மெம்பரான (8) கனம் ஸர் இப்ராஹீம் ஹாரூன்ஜாபர் என்பாரும்(9)ஜனப் ஹஸனலீ பி இப்ராஹீம் என்பவரும் அக்கமிட்டியின் அங்கத்தினர்கள்.

அக் கமிட்டியார் பம்பாய், சென்னை, கல்கத்தா, பாட்னு, லக்னௌ, கராச்சி, டாக்கா, டில்லி, லாகூர், குவெட்டா முதலிய பல இடங்களுக்குப் போயினர். ஆங்காங்குள்ள முஸ்லிம் தலைவர்களையும் முஸ்லிம்சபைகளின் பிரதிநிதிகளையும் விசாரணைசெய்தனர். அத்துடன் ஹாஜிகளின் பிரயாண சம்பந்தமாகப் பல கேள்விகளைத் தயாரித்து, அவைகளைப் பலருக்கும் அனுப்பி, விடைதருமாறு கேட்டனர். நமது சென்னை மாகாணத்திலே 20-பெயர் அவ்வினுக்களுக்குப் பதில் அனுப்பினர். சென்னையிலே நம்மவரில் எண்மர் நேரில் சென்று, கமிட்டியின் முன்பு சாட்சியம் கொடுத்தனர். கமிட்டி மெம்பர்களில் சிலர் நேரில் சென்று, அரபஸ்தான், சுல்தானிய்யா ஆகிய கப்பல்களில் பம்பாயிலிருந்து கராச்சிவரையில் மூன்றுவது வகுப்பில் பிரயாணஞ் செய்து, நிலைமையைக் கண்ணாரக் கண்டறிந்தனர். இவ்விதம் பரிசிலனை செய்ததன்பலனாக அக்கமிட்டியார் நீண்டதொரு யாதாஸ்து தயார்செய்து, பல சிபார்சுகள் சொல்லி, இந்தியாகவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருக்கின்றனர். அவர்களின் சிபார்சுகள் இருநூறுக்கு மேல் உள. அவற்றில் முக்கியமான சிலவற்றைமட்டும் இங்கே சுருக்கமாக வரைகிறோம்.

சிபார்சுகளின் சாரம்

ஹஜ் பிரயாணிகள் சம்பந்தமாக அமலில் இருக்கும் சட்டங்கள், விதிகள், உபவிதிகள் ஆகிய இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து, ஆங்கிலம் உருது இரண்டு பாஷைகளிலும் அச்சிட்டுப் பிரசுரிக்க வேண்டும்.

ஹாஜிகளுக்கு எவ்வளவு தொகை தேவையாகும் என்பதை ஹஜ்ஜு கமிட்டியார் முன்னதாகவே பொதுஜனங்களுக்கு அறிவித்தல் அவசியம். கப்பல் கட்டணம் நீங்கலாக, ஹஜ்ஜுக்குப் போய்வர ரூ. 450 செலவாகும் என்பது தற்சமயமுள்ள மதிப்பு. அதற்குக் குறைந்த தொகைகொண்டு, ஹஜ்ஜுக்குச் செல்லக் கூடாதென்று மகாஜனங்களுக்கு அறிவிக்க வேண்டும்.

டிபாசிட் தொகை வாங்குதல் எல்லாப் பிரயாணிகளின் விஷயத்திலும் கட்டாயமாக இருத்தல்வேண்டும். அந்நியநாடுகளிலிருந்து வருவோரிடமும் டிபாசிட் வாங்க வேண்டும். வேறு கவர்ன்மேண்டிடம் அவர்கள் டிபாசிட்

கட்டியிருந்தால் இங்கே கட்ட வேண்டிய தில்லை.

துறைமுக நகரங்களிலே ஹாஜிகள் தங்கியிருக்குமிடங்களில் ஏற்படும் திருட்டுப் புரட்டுகளை விசாரிக்க கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளையோ பெஞ்சி மாஜிஸ்டிரேட்டுகளையோ நியமிக்கவேண்டும்.

வயித்தியப் பரீட்சை ஆகிவிட்டதென்று காட்ட ஹாஜிகளின் கையில் முத்திரை போடும் வழக்கம் கராச்சி துறைமுகத்தில் இருந்து வருகிறது. அந்த வழக்கம் கூடாது. அதனை ஒழித்துவிடவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஹாஜீ நண்பன் என்று ஒருவரை நியமித்து, ஹாஜிகளுக்கு வேண்டிய விஷயங்களை எடுத்துச் சொல்லவேண்டும்.

டிபாசிட்டு கட்டல்

பாஸ்போர்ட்டுக்கு மனுச் செய்துகொள்ளும்போதே, ஹாஜிகள் கவர்ன்மெண்டு கஜானாவில் டிபாசிட் தொகையைக் கட்டிவிட வேண்டும். ஹஜ்ஜு கமிட்டி மூலம் கப்பல் டிக்கட் வாங்க ஹாஜிகள் விரும்பினால் டிபாசிட் தொகையிலிருந்து வேண்டிய கட்டணத்தை துறைமுக ஹஜ்ஜு கமிட்டிக்கு அனுப்ப வேண்டும். ஹாஜிகள் தாங்களாகவே நேரில் டிக்கட் வாங்குவதாயின் கப்பல் கம்பெனியிடம் பாஸ்காட்டி, வாங்கிக் கொள்ளலாம்.

ஹாஜிகளுக்கென்று தனியே ரயில்வண்டி விடவோ, அல்லது 50 பேரைச் சேர்த்து அனுப்பவோ கூடுமானால் அங்ஙனம் செய்யும் வண்ணம் ரயில்வே போர்டாரைக் கேட்டுக் கொள்ளலாம். ஹஜ்பிரயாண பாஸ் காட்டுவோருக்கு ரயில்வே கம்பெனியார் ரிட்டன் டிக்கட் கொடுக்வேண்டும். இந்த டிக்கட்டுகள் 8 மாத காலத்திற்குச் செல்லக்கூடியதாக இருக்கவேண்டும். ஹாஜிகள் தங்குவதற்காகப் போடப்பட்டிருக்கும் பெரிய ஷெட்டுகளில் தட்டிகள் போட்டு, குடும்பத்துடன் வருபவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். ஹாஜிகள் தங்கும் கியாம்புகளில் போஸ்டாபீஸ்களை ஏற்படுத்த வேண்டும்.

பம்பாயில் முதல்வகுப்பு இரண்டாம்வகுப்புப் பிரயாணிகளுக்கு வயித்தியப் பரீக்ஷை செய்ய விசேஷ ஏற்பாடுகள் செய்து, அவர்கள் சார்பிலேயே வயித்தியப் பரிசோதனை செய்துகொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். முஸாபர்கானுக்களிலிருந்து கப்பலுக்கு ஹாஜிகளின் சாமான்களைக் கொண்டுபோவதற்கெனத் தனியே பணம்வாங்குவது நியாயமல்ல. பம்பாயில் ஹாஜிகளை வழியனுப்ப துறைமுகம் செல்வோருக்கு 100 க்கு பத்து வீதம் பாஸ் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இவ்விதமான பாஸ்களுக்காக வசூல் செய்யும் தொகையை ஹஜ்ஜு கமிட்டிக்குக் கொடுக்கவேண்டும். டிக்கட்டில்லாமல் செல்லும் ஹாஜிகளை ஜித்தாவில் இறக்கிவிடுவதற்குப் பதிலாக இந்தியாவுக்குத் திருப்பிக்கொண்டுவந்து விடவேண்டும்.

பாஸ்போர்ட்டுகளுடன் ஹாஜிகளின் புகைப்படம் சேர்க்கவேண்டுமென்ற நிபந்தனை கூடாது. அவரவர்களின்இஷ்டத்திற்கு விட்டுவிட வேண்டும்.

புகைப்படம் கொடுக்காத கனவான்கள் ஜில்லாக்களில் வாங்கும்பாஸ்போர்ட்டுகளில் புகைப்படம் ஒட்டும் இடத்தில் கட்டைவிரல் ரேகை அடையாளம் வைக்கலாம். கையெழுதுச் செய்யத் தெரியாதவர்கள் மட்டுமே தான் ரேகை அடையாளம் வைக்க வேண்டும்.

இச் சிபார்சுகளை அமலுக்குக் கொண்டு வருமுன் பொது ஜனங்களுக்கு அவைகளை நன்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

போகவர கப்பல் பிரயாண காலத்தைய சாப்பாட்டு வசதிக்கும் சேர்த்து டிபாசிட் செய்யவேண்டும்.

ஹிஜாஸில் இறந்துபோகும் ஹாஜியின் டிபாசிட் தொகையை அவருடைய பந்துக்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். இரண்டு வருஷத்திற்குள் பந்துக்களில் எவரேனும் வந்து தொகையைக் கேட்கவில்லையானால், அதனை ஹஜ்ஜு கமிட்டிக்குச் சேர்த்துவிட வேண்டும்.

கட்டண ஒழுங்கு

ஹஜ்ஜு பிரயாணிகள் செல்லும் கப்பல்களில் எல்லாம் பிரயாண கட்டணம் ஒரே விதமாக இருக்கும்படி, கப்பல்கள் சட்டத்தைத் திருத்தி யமைக்க வேண்டும்.

மூன்றுவயதிற் குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டணம் வாங்கக் கூடாது; பன்னிரண்டு

வயதிற் குட்பட்ட குழந்தைகளுக்கு அரை கட்டணமே வாங்கவேண்டும்.

ஹஜ்ஜு பிரயாண கப்பல்களுக்குள் ஒன்றுக்கொன்று போட்டி ஏற்படாமல் ஒன்றுக்குப் பின் ஒன்றாகப் புறப்படும்படி தேதிகள் குறிப்பிடவேண்டும். குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னதாக கப்பல்புறப்படும் தேதியை விளம்பரப்படுத்த வேண்டும்.

கப்பலில் மூன்றாவது வகுப்புப் பிரயாணி ஒவ்வொருவருக்கும் குறைந்தது இவ்வளவு இடம் கொடுக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கவேண்டும். டிக்கட் ஒவ்வொன்றையும் நம்பரிட்டு கப்பலிலே இடத்தையும் குறித்து, அந்தந்த நம்பர் டிக்கட்டுள்ளவர்கள் அவர்களுக்கான இடத்தில் உட்காருவது சௌகரியமாக இருக்கும்.

கப்பலில் ஹாஜிகள் சொந்த சமயல் செய்து கொள்வதற்குப் பதிலாக, தயார் செய்யப்பட்ட உணவு சப்ளை செய்ய வேண்டுமென்று சட்டமியற்றவேண்டும். ஒவ்வொரு பிரயாணிக்கும் குறைந்தது இவ்வளவு சாப்பாடு கொடுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் ஹஜ்ஜு கமிட்டியைக் கலந்துகொண்டு நிர்ணயிக்கவேண்டும். பன்னிரண்டு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தினம் ஒன்றுக்கு எட்டணா வீதமும், அதற்கு மேற்பட்டவர்களுக்கு ஒரு ரூபா வீதமும் சாப்பாட்டு கட்டணம் நிர்ணயிக்கலாம்

சாப்பாடு

முதல் வகுப்பு இரண்டாவது வகுப்புப் பிரயாணிகளுக்குக் கூட சொந்த சாப்பாட்டை அனுமதிக்காமல், மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளுக்கு தயார் செய்யப்படும் சாப்பாட்டைவிட உயர்ந்ததாகக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். பிரயாணிகள் சாப்பாட்டு விஷயத்தில் கப்பலிலுள்ள மெடிகல் ஆபீசர் அதிக ஜாக்கிரதையாக இருந்து விசேஷ கவனமும் செலுத்தவேண்டும். கப்பலில் குடிஜலக்குழாய்கள் 250 பிரயாணிகளுக்கு ஒரு குழாய் வீதம் வைக்கவேண்டும்.

பிரயாணிகள் தனியே சமைக்கும் முறை ஒழிக்கப்படுவதால், ஒவ்வொரு பிரயாணிக்கும் தினம் ஒன்றுக்கு $1\frac{1}{2}$ காலன் ஜலம் போதும்; எனினும் இரண்டு காலனாக இருத்தல் நலம். கப்பலில் மெடிக்கல் ஆபீஸர் முஸ்லிமாகவே இருத்தல் வேண்டும். கப்பல் புறப்படும் துறைமுகத்திலுள்ள ஹஜ்ஜு கமிட்டியார் சிபாரிசு செய்யும் ஜாப்தாவிலிருந்து மெடிகல் ஆபீஸர்களை கப்பல் கம்பெனியார் நியமிக்கவேண்டும்.

ஒரு கப்பலில் ஒரு மெடிகல் ஆபீஸருக்கு அதிகமாக இருக்கவேண்டுமானால், யூனானி டிப்ளோமா பெற்றவர்களை நியமிக்கலாம். அவர்களுக்கு மாதம் ரூ. 150 முதல் ரூ. 250 வரை சம்பளம் கொடுக்கவேண்டும். கப்பலில் செல்லும் மெடிகல் ஆபீஸர்கள் தங்கள் சொந்த ஹோதாவில் வயித்திய சிகிச்சை செய்து ஊதியம் பெறக்கூடாது.

கப்பலிலுள்ள வயித்திசாலையைப் பிரதி தினமும் குறிப்பிட்ட நேரத்தில் திறந்து வைக்கவேண்டும். அவசியம் நேர்ந்தால் டாக்டர் எச்சமயத்திலும் சிகிச்சை செய்ய வேண்டும்.

கப்பலில் இறந்துபோகும் பிரயாணிகளை நல்லடக்கம் செய்யவேண்டிய சாமான்களை கப்பலில் விற்பனை செய்ய கப்பல் கம்பெனிகள் ஏற்பாடு செய்யவேண்டும்.

கப்பலில் பிரயாணம் செய்யும்படியான ஹாஜிகளுக்கு தக்க வசதிகள் செய்யப்படுவதற்காகவும் அவர்களுடைய குறைகளுக்கு அப்போதைக்கப்போது பரிகாரஞ்செய்வதற்காகவும் கப்பல் துறைமுகத்திலுள்ள ஹஜ்ஜு கமிட்டியார், ஹாஜிகளில் ஒருவரை அமீறுல் ஹஜ்ஜு என்று நியமனம் செய்யவேண்டும். இது சாத்தியமில்லாவிட்டால் கப்பலில் உள்ள ஹாஜிகளுக்குள் ஹஜ்ஜுகமிட்டி ஒன்றை நியமிக்க ஏற்பாடு செய்யவேண்டும். சம்பளம் கொடுத்து இன்ஸ்பெக்டர்களை கப்பலில் அனுப்புவதென்ற முறை கூடாது. ஆனால், விசேஷ காரணமிருக்கும் பக்ஷத்தில் ஹஜ்ஜு கமிட்டியார் பகிரங்கமாகவோ அல்லது அந்தரங்கமாகவோ ஒருவரை அனுப்பிவைக்கலாம். ஒவ்வொரு கப்பலிலும் சமாதானத்தைக் காப்பதற்காக போலீஸ் சேவகர்களை அனுப்பிவைப்பதென்பது கூடாது. ஹஜ்ஜு பிரயாணிகளுடைய விலையுயர்ந்த பொருள்களையும் சாமான்களையும் கப்பலிலுள்ள கிரானி என்பவன் கப்பல் பிரயாணகாலத்தில் பாதுகாத்துக் கொடுக்கவேண்டும்.

இஸ்லாமும் மேனாட்டு உடையும்

(மௌலானா அப்துஸ் ஸலாம் நதவீ எழுதியது)

இஸ்லாமியநாடுகளிற் சில, சிறிதுகாலமாக நவ நாகரிகத்தைப் பின்பற்றி உடைகளையும் தொப்பிகளையும் மாற்றி, ஐரோப்பியர்களைப் போலாவதை நேயர்கள் அறிவர். நமது தேசத்திலும் ஆங்கிலங்கற்ற நம்மவரிற் சிலர் நவீன நாகரிகத்தி லீடுபட்டு, ஐரோப்பிய உடை அணிந்துவருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். சென்ற சில வருஷங்களாக துருக்கி, ஈரான், அப்கானிஸ்தான் ஆகிய அரசாங்கங்களிலும் இந்த உணர்ச்சி பரவிப் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. அதனால் அத்தேசங்களிலே அரசாங்கத்திற்கு விரோதமான கலகங்களும் சண்டைகளும் நேரவே பல உயிர்களுக்குச் சேதம் உண்டாயிற்று. அப்கானிஸ்தானில் மாஜி அமீரான அமானுல்லாகான் பட்டந் துறந்ததற்கு நேர்ந்த காரணங்களில் உடை விஷயமும் ஒன்றெனக் கூறப்படுகிறது. ஆதலால் இஸ்லாம் மதத்தில் உடையைப் பற்றிக் கூறப்பட்டிருக்கும் சட்ட திட்டங்கள் என்ன? முஸ்லிம்களின் முற்கால அனுஷ்டான முறை யாது? என்பதை நேயர்களுக்கு அறிவித்தல் நன்மைபயக்கும். ஆதலால் வட இந்தியாவிலுள்ள அஃலம்கட் என்ற ஊரில் மௌலானா ஷிப்லீமர்ஹூம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட நூலாசிரியர் விடுதி (தாருல் முசன்னிபீன்) என்ற ஸ்தாபனத்தில் முக்கியபதவி வகித்து, பல நூல்களை எழுதி, மௌலானா செய்யிது சுலைமான் நதவீ அவர்களுக்கு சக ஊழியராக இருந்து, அரிய தொண்டாற்றிவரும் மௌலானா அப்துஸ்ஸலாம் சாகிப் நதவீ அவர்கள் மேற்கண்ட தலையங்கமிட்டு எழுதியுள்ள நீண்ட கட்டுரையை நாம் சுருக்கி எழுதி நண்பர்களுக்கு சமர்ப்பிக்கின்றோம். அக்கட்டுரையை அப்படியே மொழிபெயர்த்து பிரசுரிப்பதானால் இப்பத்திரிகையில் 30 அல்லது 32 பக்கங்கள் தேவையாகும். தவிர அவ்வளவு நீண்ட வியாசத்தை நேயர்கள் பிரியமாகப் படிப்பதும் அருமையாம். ஆதலின் அவ்வியாசம் சுருக்கி எழுதப்பட்டுளது. சமயம் வாய்த்தால் இது சம்பந்தமாக இதரர் எழுதியுள்ள வியாசங்களையும் எடுத்து எழுதுவோம்.]

[ப—ர்.]

ஒரு சமூகத்தினரின் ஒழுக்கம், வாழ்க்கை முறை இவற்றில் இன்னொரு சமூகத்தின் பழக்கமும் ஆசாரமும் புகவிடாமல் பார்த்துக்கொள்வதே சமூக மேன்மையைப் பாதுகாக்கும் முறையாம். நுனிப்புல் மேய்வதைப் போன்ற சிலர் இதனைக் கண்மூடித்தனமாக சமூகாபிமானம் என்றும், குறுகிய புத்தியென்றும், தாராளமிலாத் தன்மையென்றும் கூறுவர். ஆனால், உலகத்திலுள்ள எத்தனையோ சமூகங்கள் இம்முறைக்கு மாறாக நடந்து நாசமாகியுள. இது சரித்திர மறிந்த உண்மை. இவ்வித அழிவைக் கண்டு பிரான்சு தேசத்தின் பிரபல தத்துவசாஸ்திரியும் நாகரிக சரித்திர நிபுணருமான டாக்டர் குஸ்தா வலீபான் என்பவர் "சமூகங்களின் அழிவானது அந்நிய சமூகத்தினருடன் கலப்பு ஏற்படுவதன் பயனாகும். ஆதலால், எந்தச் சமூகம் புறசமூகத்தைவிட்டு விலகி இருக்கிறதோ, அதுவே க்ஷீணதசை அடையாமலிருக்கும்; தவிர தனது சமூக நிலையையும் ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் காப்பாற்ற முடியும்" என எழுதி இருக்கிறார்.

புறசமூகத்தினரின் பழக்க வழக்கங்களை தங்கள் சமூகத்திற்குள் புகுத்திக் கலக்கச் செய்தல் பெரும்பாலும் பின்னடைந்த சமூகத்தினரிடமே காணப்படும். அத்தகைய சமூகத்தினரை முன்னேற்ற மடைந்த ஏனைய சமூகத்தினர் தமது நாகரிக சக்தியினால் வசியப்படுத்தி இழுத்துக்கொள்வர். ஆகவே, ஒரு சமூகத்தில் நவநாகரிகத்தையும், ஆசாரத்தையும் புதிதாகப் புகுத்துவதற்கு முன், பற்பல சமூகங்களிலும் அச்சமூகத்திற்கென விசேஷமான ஆசாரம் எவ்வாறு உண்டா

கின்றது என்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டும். நாகரிகம் பரவுங்காலத்தில், உற்பத்தியாகும் புதிய சாமான்களில் பெரும்பாலானவை அநேகமாக எல்லா சமூகத்தினரிடமும் பரவும். உதாரணமாக ஐரோப்பாவில் புதிது புதிதாக நூற்றுக்கணக்கான சாமான்கள் தயாராக, அவைகள் உலகமெங்கணுமுள்ள சமூகத்தினரால் கையாளப்படுகின்றன. ஆனுல், அச்சாமான்கள் ஒரு சமூகத்திற்கே உரியன என்பதல்ல. ஆதலால், அவைகளை எல்லா சமூகத்தினரும் கையாளுகின்றனர். அதனுல், அச்சமூகத்தின் கோட்பாட்டினுக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படுவதில்லை.

இதுபோலவே நாகரிக வாழ்வினுக்கு அவசியமான பல சாமான்களிருக்கின்றன. ஆனுல், அவைகள் ஒரு சமூகத்தினருக்கே வீசேஷமான ஆசாரமாக இருக்கும். அவைகளை உபயோகிப்பதால் ஜனங்களுக்குள் விசேஷ வித்தியாசங்கள் தோன்றும். கோட், ஹாட், ஷிராய் முதலியன ஐரோப்பியருக்கு இயற்கையான உடைகளாகும். அவற்றை ஐரோப்பியரல்லாதார் உபயோகிப்பதால் அவ்வாறு உபயோகிப்பவர்களுக்கு விசேஷ பெருமையுமுண்டாகிறது என நினைத்துக் கொள்கின்றனர். இது இக்கால வழக்கப்படி "தபர்ரஞ்சு" அதாவது ஐரோப்பிய நாகரிகம் என்று சொல்லப்படும்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் காலத்தில் உடை, வாழ்க்கை முறை இவையிரண்டும் இரண்டுவிதமாக இருந்தன. இதர சமூகத்தினர் கையாண்டதும், அவைகளைக் கையாளுவதால் முஸ்லிம் சமூகத்தில் விசேஷ மாறுதல் ஏற்படாததும் ஆனவை ஒருவகை; ஆகவே நபிகள் நாயகமவர்கள் இப்படிப்பட்டவைகளைப்பற்றி எவ்வித விதிவிலக்கும் ஏற்படுத்தவில்லை. மேலும், சிற்சில சமயங்களில் அந்நாயகமவர்களே அவைகளை உபயோகித்துமிருக்கிறார்கள். நௌஷேர்வான் அணிந்திருந்த விதமான கபா, ஷாம் தேசத்து ஜுப்பா ஆகியவைகளை நாயகமவர்கள் அணிந்திருந்தார்கள் என்றும், சிலசமயங்களில் விலையுயர்ந்த உடையை அணிந்திருந்தார்கள் என்றும், பல ஹதீதுகளிலிருந்து புலப்படும். அவையன்றி, அவற்றிற்கு நேர் மாறான பலகாரியங்களும் உண்டு. அத்தகைய காரியங்களை முஸ்லிம்கள் செய்ய நாயகமவர்கள் அனுமதிக்கவில்லை. ஆகவே அவைகள் என்னென்ன என விபரமாகத் தெரிந்து கொள்ள நாயகமவர்கள் காலத்தில் பிற சமூகத்தினரின் நாகரிகங்களில் அறபி சமூகத்தினரிடம் பரவி இருந்தவை யாவை என்றும், அவைகளில் சமூகத்திற்கெனப் பிரத்தியேகமாக உள்ளன யாவை என்றும் விசாரிக்க வேண்டும்.

அறபி தேசத்திற்கு அக்கம் பக்கத்தில் உரோம ஏகாதிபத்தியமும், பாரசீக ஏகாதிபத்தியமும் பரவியிருந்தன. அவ்விரண்டும் அக்காலத்தில் நாகரிகத்தில் உச்சஸ்தானம் அடைந்துமிருந்தன. அவ்விரு அரசாங்கங்களும் ஆடம்பரவாழ்க்கையில் பெரிதும் ஈடுபட்டு இருந்தவை; வாழ்க்கையில் புது மாதிரியான முறைகள் தினேதினே அவ்வரசுகளில் ஏற்பட்டுக்கொண்டிருந்தன. ஆதலால் அறபிகளின் வாழ்க்கை முறைகளிலும் பழக்க வழக்கங்களிலும் அவ்விரு அரசாங்கத்தின் தன்மைகள் பெரிதும் பரவலாயின. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சமூகத்தில் ஹஜ்றத் உமர்பாறுக் (றலி) அவர்கள் ஒருதரம் ஆஜரானபோது நாயகமவர்கள் கயிற்றுக்கட்டிலின்மீது படுத்துக் கொண்டிருந்தார்கள். அக்கட்டில் அழுத்திய தடிப்புகள் நாயகமவர்களின் விலாப்புறங்களில் பதிந்திருந்தன. அதுசமயம் வீட்டில் சில தோல்களைத்தவிர வேறென்றுமிருக்கவில்லை. இதைப் பார்த்ததும், ஹஜ்றத் உமர் அவர்களின் உள்ளம் சகிக்கவில்லை. உடனே அவர் நாயகமவர்களிடம், "அல்லாஹ்வின் தூதரே! தங்களுடைய உம்மத்துகளுக்கு இறைவன் திரவியத்தைக் கொடுக்குமாறு பிரார்த்தனை செய்யுங்கள். பாரசீகரும் உரோமரும் அல்லாஹ்வை அஞ்சி வணங்குபவர்கள் அல்லர். அவ்வாறிருந்தும் அவர்கள் சுகபோகம் துய்க்கின்றனர். அவர்களுக்கு உலகம் அளிக்கப்பட்டிருக்கிறது" என்றார். அப்பொழுது நாயகமவர்கள் எழுந்துட்கார்ந்து, "என்? கத்தாபுடைய மகனுரே? அவ்வாறு சொல்கிறீர்கள்? எவர்களுக்கு இவ்வுலகத்தில் மாத்திரமே அவர்கள் விரும்பிய வஸ்துக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அவர்களையே அவர்கள் சேர்ந்திருக்கிறார்கள்" என நாயகமவர்கள் நவின்றனர்; ஹஜ்றத் உமர் (றலி) அவர்கள் நாயகமவர்களிடம் (கேட்ட

கேள்வியானது பொருத்தமற்றது என்பதை யுணர்ந்து தகாதகேள்வியைக் கேட்ட குற்றத்திற்கு தன் பிழை பொறுக்குமாறு நாயனிடம் பிரார்த்திக்க வேண்டினார்கள்'' என்று ஸஹீஹு புகாரியில் விவாதத்தைப்பற்றிய அத்தியாயத்தில் காணலாம். ஹஜ்றத் உமர் (றலி) அவர்கள் இவ்வாறு நாயனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டியதற்கு ஹாபிஜ் இப்னுஹஜர் அவர்கள் பல காரணங்களைக்கூறி இருக்கிறார்கள். எனினும், உரோமர்கள், ஈரானியர்கள் இவர்களின் இத்தகைய வாழ்க்கை முறையில் அவர்களுக்கென பிரத்தியேகமான முறைகளும் சேர்ந்திருந்தன; அவைகளை முஸ்லிம்கள் பின்பற்றக் கூடாதென்பதற்கு "நீங்கள் பட்டுகளை யணியாதீர்கள்; வெள்ளி தங்கம் ஆகியவைகளால் செய்யப்பட்ட பாத்திரங்களில் தண்ணீர் அருந்தாதீர்கள், உணவருந்தவும் வேண்டாம். ஏனெனில், இத்தகைய வஸ்துக்கள் அவர்களுக்கு (அதாவது உரோமர்களுக்கும் பாரசீகர்களுக்கும்) உலகத்திற்றான் கிடைத்திருக்கின்றன'' என்று நாயகமவர்கள் கூறி அவைகளைத் தடுத்துவிட்டார்கள் எனத் தெரிந்து கொள்கிறோம்.

பட்டுத்துணிகளை யல்லாமல் வேறு விலை மதிப்புள்ள துணிகளும் விலக்கப்பட்டவை; இத்தகையன நாயகமவர்களிடம் சில சமயங்களில் வந்து சேர்ந்தன. தகுதியான உதார குணத்தாலோ, அல்லது வேறு எக்காரணத்தாலோ அவைகளை நாயகமவர்கள் ஒரு காலத்தில் உபயோகித்து, அப்பால்விட்டு விட்டார்கள்; தவிரவும் சங்கைவான்களான ஸஹாபிகளை அவைகளை உபயோகிக்க வேண்டாமென விலக்கியுமிருக்கிறார்கள். ஒரு தரம் நாயகமவர்களின் சமூகத்திற்கு உரோம தேசத்துச் சக்கிரவர்த்தி பட்டு ஜரிகை கோட்டு ஒன்றைக் காணிக்கையாக அனுப்பி வைத்தார். அதை நாயகமவர்கள் ஹஜ்றத் ஜஃபர் (றலி) அவர்களிடம் அனுப்பினார்கள். அவர் அதை அணிந்துகொண்டு ஒரு சமயம் நாயகமவர்களிடம் வந்தபோது, நாயகமவர்கள் அவரை நோக்கி, "தங்களின் உபயோகத்திற்காக நான் அதை அனுப்பவில்லை'' என்று கூறினார்கள். அதற்கு ஹஜ்றத் ஜஃபர் (றலி) அவர்கள் நாயகமவர்களைப் பார்த்து "அவ்வாறாயின் அதை நான் என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்டார்கள். அதற்கு நாயகமவர்கள் உங்கள் சகோதரர் நஜ்ஜாஷி பாதுஷாவுக்கு அனுப்பிவையுங்கள்'' என விடை பகர்ந்தார்கள். அபூதாவூத் முதலிய கித்தாபுகளில் அதுபற்றி அநேகம் ஹதீதுகள் உள.

மேற்கூறப்பட்ட வகையைச் சேர்ந்த ஓர் உடுப்பு விற்பனையாவதை ஹஜ்றத் உமர் அவர்கள் கண்டார்கள். உடனே நாயகமவர்களிடம் அவர் வந்து 'தாங்கள் இதை விலைக்கு வாங்கி ஜும்ஆவின் தினங்கள், அந்நியதேசங்களிலிருந்து தூதுவர்கள் வரும் சமயங்கள், ஆகிய காலங்களில் அணிந்து கொள்ளலாம்'' எனக்கேட்டுக் கொண்டார்கள். அதற்கு நாயகமவர்கள் மறு உலகில் எவ்வித பாத்தியமுமில்லாதவர்களே அதை அணிவார்கள்'' எனக் கூறினார்கள். பின்பு, இவ்விதமான உடுப்புகள் நாயகமவர்கள் சமூகத்திற்குச் சன்மானமாகச் சமர்ப்பிக்கப்பட்டன. அவைகளை நாயகமவர்கள் பெற்றுக்கொண்டார் களாயினும் அவற்றை அவர்கள் அனுபவிக்கவில்லை; தங்கள் ஸஹாபிகளுக்கே கொடுத்து வந்தார்கள். இவ்விதமாக ஹஜ்றத் உமர் அவர்களுக்கும் அவைகளிலிருந்து ஓர் உடை கொடுத்தார்கள். அப்பொழுது அவர்கள் நாயகமவர்களை நோக்கி, "நாயகமே! தாங்கள் இந்த உடையை எனக்கு அளிப்பது என்? இந்த உடை கூடாதென முன்பே சொல்லியிருக்கிறீர்களே'' என வினவினார்கள். அதற்கு நாயகமவர்கள், "ஆம், ஆனால் நீங்கள் அணிந்துகொள்வதற்காக நான் இதை உங்களுக்கு அளிக்கவில்லை'' எனக் கூறிவிட்டார்கள். இவ்விதமாகவே நாயகமவர்கள் திருச்சமூகத்திலிருந்து அவர்களின் அன்புக்கு ஆளாகி இருந்தமையாற்றான் ஹஜறத் உமர் அவர்கள் கலீபா பதவியை ஏற்று அஜம் தேசங்களை ஒன்றன்பின் ஒன்றாக வெற்றி கொண்டு வந்தபோது, தங்கள் சேனைத்தலைவர்களுக்கும் வரிவசூல் அதிகாரிகளான ஆமீல்களுக்கும் இது சம்பந்தமாக அடிக்கடி எச்சரிக்கை நிருபங்களை எழுதிவந்தார். ஆதர்பீஜானிலுள்ள ஆமீலுக்கு ஹஜ்றத் உமர் எழுதிய கடிதத்தில் "ஆடம்பர வாழ்க்கையையும் இணைவைப்போரின் முறையையும் பட்டாடை அணிதலையும் விட்டு விடுங்கள். ஏனெனில் நாயகமவர்கள் பட்டணிவதைத் தடுத்திருக்கிறார்கள்'' என எழுதினார்கள்.

திமிஷ்கின் அருகிலுள்ள ஜாபிய்யா என்ற தலத்தில் ஹஜ்றத் உமர் (றலி) அவர்கள் செய்த பிரசங்கத்திலும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் மேற்கண்ட போதனையை அனுசரித்து, பட்டு வஸ்திரத்தை உபயோகிக்கக் கூடாது எனக் கூறினர்கள். ஹஜ்றத் உமர் அவர்கள் காலத்திற்குப் பின்பும் அத்தகைய உடைகள் ஆட்சேபிக்கப் பட்டே வந்தன.

ஒரு தரம் ஹஜ்றத் அமீர் முஆவியா அவர்களின் தர்பாருக்கு மிஹ்காமுப்னுமஃதி கர்பு (றலி) என்பவர் வந்து கலீபாவாக இருக்கிற முஆவியா (றலி) அவர்களை நோக்கி, நான் சில சமாசாரங்கள் சொல்ல விரும்புகிறேன். அவைகள் உண்மையாக இருந்தால் அங்கீகரிக்க வேண்டும்; இல்லையேல் அவைகளை மறுத்துவிட வேண்டும்'' என்று கூறினர். அமீர் முஆவியா (றலி) அவர்கள் அதைக்கூற அனுமதியளித்தார்கள். அப்பொழுது அவர்கள் கூறியதாவது; "றஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பட்டு உடையை விலக்கி இருக்கிறார்கள் என்பது தங்களுக்குத் தெரியுமா? நாயகம் அவர்கள் தங்கப்பாத்திரங்கள் கூடாஎன்று கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்களா? ஐவாய் மிருகங்களின் தோலால் செய்யப்பட்ட உடை, படுக்கை ஆகியவைகளையும் உபயோகிக்க அனுமதிக்கவில்லை என்பதைத் தாங்கள் அறிவீர்களா? நான் இறைவன் மீது ஆணையிட்டுக் கேட்கிறேன்'' என்றார். அதற்கு அமீர் முஆவியா (றலி) அவர்கள், அவைகள் யாவும் சரிதான் என ஒப்புக் கொண்டார்கள். அப்பொழுது அவர் இந்த வீட்டில் விலக்கப்பட்ட இந்த வஸ்துக்களெல்லாம் இருப்பதாக எனக்குத் தெரியவருகிறது''எனக்கூறி அமீர்முஆவியாவுக்கு எச்சரிக்கை செய்தார். (தொடரும்)

— —

ஆசிரியர் குறிப்புகள்

மார்க்கத் தலைவரின் மக்கா யாத்திரை :— சென்னை மாகாணத்தைச் சேர்ந்த இராயவேலூர் மத்ரஸயே பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்தின் தலைமை ஆசிரியரான ஹஜ்ரத் மௌலானா மௌலவீ அல்லாமா முஹம்மது அப்துல் ஜப்பார் சாஹிபுல் காதிரி அவர்கள் இவ்வருஷ ஹஜ்ஜு யாத்திரையை முன்னிட்டு, நாளது 15-3-30 சனிக்கிழமை காலை பம்பாய் எக்ஸ்பிரஸில் மதராசைவிட்டுப் பிரயாணமானார்கள் என்ற நற்செய்தி தென் இந்திய முஸ்லிம்களுக்கு அளவற்ற ஆனந்தத்தை அளிக்கும். அல்லாமா அவர்கள் சென்ற 35 வருஷகாலமாக மேற்கண்ட பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் எனும் அறபிக் கலாசாலையில் ஆசிரியராக இருந்து, தென் இந்திய முஸ்லிம்களுக்கும் பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் கலாசாலைக்கும் ஆற்றிய தொண்டு அனந்தம். தென்னிந்தியாவிலுள்ள பெரும்பாலான மார்க்க அறிஞர்களும் மௌலவீகளும், உலமாக்களும் அல்லாமா அவர்களிடமோ அல்லது அவர்களின் சிஷ்யர்களிடமோ கல்வி பயின்று தேர்ச்சி யடைந்தவர்கள்.

அறபி, பாரசீகம் முதலிய பாஷைகளில் இயற்றப்பெற்ற பெரிய பெரிய கிரந்தங்களில் அல்லாமா அவர்களின் விரிவுரையும் குறிப்புகளும் இல்லாமலில்லை. தென்னிந்திய முஸ்லிம்களில் லௌகிக வைதிகக் கலைகளில் பூரண பாண்டித்தியம் அடைந்தவர்களில் அப்பெரியார் முக்கியமானவராவர். கல்வி கேள்விகளில் மாத்திரம் அல்லாமல் தேசீய ராஜீய விஷயங்களையும் அவர் நன்குணர்ந்தவர்; பழுத்த அறிவாளியுமாவர். வட இந்தியாவில் தேவ்பந்து அறபிக்கலாசாலை எவ்வளவு மதிப்பும் கௌரவமும் படைத்திருக்கிறதோ அவ்வளவு மதிப்பையும் கௌரவத்தையும் தென்னாட்டின்கண் வேலூர் மத்ரஸாவும் அடைந்திருக்கிறது. இதனை ஸ்தாபித்தவர்களின் தன்னலமற்ற உழைப்பும் விடாமுயற்சியுமே அதற்கு முக்கிய காரணம். இதனை ஸ்தாபித்த மேதாவிகளில் முக்கியமானவர்களில் பெரும்பாலர் தற்சமயம் இல்லாவிடினும், அவர்

களின் அடிச்சுவட்டினை அல்லாமா அவர்கள் பின்பற்றி, அதன் கௌரவத்தையும், மதிப்பையும் குறையவிடாமல் அதற்கு மென்மேலும் அதிக மதிப்பும், செல்வாக்கும் ஊட்டி வருகிறார்கள்.

1921-ம் ஆண்டிலே ஒத்துழையாமை இயக்கம் தோன்றிய காலத்தில், முஸ்லிம்களின் கல்வி ஸ்தாபனங்களுக்கு ஏற்பட்ட நெருக்கடியை எவருமறிவர். அந்நாள் ஷெ மத்ரஸாவுக்கு நேர்ந்த நெருக்கடியை ஜனப் அல்லாமா அவர்களும், நாவிராகிய கான் பஹதூர் அஃலாஹஜ்ரத் ஹாஜீ மௌலவீ ஜியாவுத்தீன் முஹம்மது சாகிப் ஹஜ்ரத் அவர்களுமே சமாளித்து, அதற்கு எத்தகைய இடையூறும் வாராமற் காப்பாற்றினார்கள். அன்று பள்ளி பகிஷ்காரத்தில் அக்கலாசாலை மாணவர்களும் ஈடுபட்டபோது, அல்லாமா அவர்கள் புகட்டிய நற்போதம் அக்கால மாணவர்களின் இருதயத்தில் இன்னும் இருந்து வருகிறது.

நிற்க, மௌலானா அவர்கள் அறபி, உருது, பார்சி ஆகிய பாஷைகளில் பல உயரிய கிரந்தங்களை இயற்றி, முஸ்லிம் சமூகத்தினருக்குப் பெரிதும் உபகாரஞ் செய்திருக்கிறார்கள். பிரசங்கம் செய்வதிலும் அவர் மிகுந்த நிபுணர். எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டாலும், அந்த விஷயத்தைப் படித்தவர், பாமரர், சிறுவர், பெரியவர், யாவரும் மிகச் சுலபமாக உணர்ந்து கொள்ளுமாறு எடுத்து விளக்குவதில் இணையற்றவர்; மௌலானா அவர்கள் இர்பானிலும், ஸுலூக்கிலும் பெரிய சமுத்திரத்திற்கு ஒப்பானவர். தத்துவ சாஸ்திரத்திலும் அவர்களுக்கு இணையானவர் தென்இந்தியாவில் எவருமே இல்லை; கற்கக் கசடற, கற்றபின் நிற்க அதற்குத் தக; அங்ஙனமே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவதுபோல், தெய்வப்பக்தியிலும், ஸாலிஹான அமல் செய்வதிலும் சிறந்தவர். திருக்குர்ஆன், ஹதீது ஆகியவைகளிற் கூறியனவே அவர்களின் சிறந்த ஒழுக்கம்; மௌலானா அவர்கள் தங்கள் மாணவர்களிடம் அதிக அன்பும் கருணையும் காட்டி ஆதரித்துவந்தார்கள். அவர்களிடம் கல்விபயின்ற மாணவர்கள் ஒவ்வொருவரும் தன்மீதுதான் ஹஜ்ரத் அவர்களுக்கு அதிகப்பட்சமும் கருணையும் உண்டு எனக்கருதி வருகின்றனர். ஹஜ்ரத் அவர்களிடம் கற்றுத்தேர்ந்த மாணவர்கள் தமிழ்நாடு, மலையாளம், இலங்கை ஆகிய நாடுகளில் மாத்திரம் அல்லாமல் மைசூர், ஹைதராபாத் அப்கானிஸ்தானம் ஆகிய பிரதேசங்களிலும் இருக்கிறார்கள். சுருங்கச் சொல்லின் தென்னிந்தியாவுக்கு நிகரற்ற ஞானசூரியனாக இருப்பதுடன் பொதுவாக இஸ்லாமிய உலகத்திற்கும் சிறப்பாக இந்தியா முழுவதிற்கும் முக்கிய மார்க்கத் தலைவரில் ஒருவராகவுமிருக்கிறார். இவ்வருஷ ஹஜ்ஜு பிரயாணத்தை உத்தேசித்து, மௌலானா அவர்கள் ஹிஜாசுக்குச் சென்றாலும், எகிப்து, இருக் ஆகிய தேசங்களுக்கும் சென்றுவர உத்தேசம். ஆகவே, அவர்களின் விஜயத்தால், அத்தேசத்தினருக்கும் அநேக பைஸ்கள் ஏற்படுமென்பதிற் சந்தேகமில்லை. தவிர, அத்தேசங்களிலுள்ள பிரபல மத்ரஸாக்களுக்கும் மௌலானா அவர்கள் சென்று, அங்குள்ள போதனா முறைத்திட்டங்கள் நிர்வாக முறைகள் இவைகளையும் கவனிப்பார். ஆதலால், தென் இந்தியாவிலுள்ள மார்க்க கலாசாலைகளுக்கும் மத்ரஸயே பாக்கி யாத்துக்கும் மௌலானா அவர்களின் மக்கா யாத்திரை மிகுந்த நன்மை பயக்கும். எல்லாம் வல்ல இறைவன், மௌலானா அவர்களின் யாத்திரையும் நோக்கமும் இனிது நிறைவேறச் செய்து, திடகாத்திரத்துடனும் க்ஷேமமாகவும் திரும்பிவந்து முஸ்லிம் சமூகத்திற்கு மேன்மேலும் பல நன்மைகளைச் செய்ய அருள்புரிவானாக ஆமீன்.

ஈரான் மாஜி அரசரின் மரணம்

சென்ற 31-10-1925-ல் அரசுரிமையைத் துறந்த பாரசீக மன்னரான அஹ்மது மிர்ஜா என்பவர் சென்ற 27-2-30 பிரான்சின் தலைநகரான பாரிஸ்மா நகரில் மரணமடைந்தார். இவர் பாரசீகதேசத்தை அரசுசெலுத்திவந்த காச்சார் வம்சத்தின் கடைசி மன்னர். இவருடைய தந்தை முஹம்மது அலிஷா காச்சார் என்பவர் ஈரான் தேசத்தில் எதேச்சையாக ஆட்சிசெலுத்தி வெகுஜனபாக்கியத்தை மதிக்காமல் நடந்துகொண்டார். ஆதலால் தேசத்தில் பெருங்கிளர்ச்சி ஏற்பட்டது. அதன் பலனாக அவர் சென்ற 1909ம் வருஷத்தில் அரசுரிமை இழந்தார். ஆயினும், தேசமக்களுக்கு அரச குடும்பத்திலிருந்த அன்பினால் இப்பொழுது காலஞ்சென்ற அவருடைய புதல்வரான

அஹமதுஷா மிர்ஸா என்பவரை பட்டத்திலமர்த்தினர். அப்பொழுது அவருக்கு வயது பன்னிரண்டுதான். ஆதலின் அவருக்குப் பதிலாக ரீஜெண்டு ஆட்சி ஏற்பட்டது: அதோடு ஐரோப்பிய மகாயுத்தமும் ஆரம்பமாகிவிட்டதால், பாரசீக ஆட்சி பாதிக்கப்பட்டு பலமற்ற நிலையிலிருந்தது. இளவயதிலேயே அரசப் பதவியை வகித்த இளைஞராக இவர் இருந்தமையால் தன்னாட்டில் சாசுவதமாக இருந்து அரசாங்கத்தைச் சீரும் சிறப்புமாக நடத்த இஷ்டப்படாமல் சுகபோகத்தில் மூழ்கலானார்: அதற்காக இவர் அடிக்கடி அந்நியநாடு சென்று வரலானார். அதில் இவருக்கு பாரிஸ் நகரே மிகவும் பிடித்தமாக இருந்தது. ஆதலால் தமது சுற்றுப் பிரயாணத்தின் பெரும்பாலான காலத்தை அந்நகரிலேயே கழித்து வந்தார். இறுதியில் இவர் சென்ற 1923-ம் ஆண்டில் அரசியலை அமைச்சர்வசம் ஒப்படைத்துவிட்டு, பாரிஸ் நகரையே இருக்கையாகக் கொண்டார். பாரசீக தேசத்துப் பார்லிமெண்டான ஈரான் மஜ்லிசும், மந்திரி பிரதானிகளும் இவரை எவ்வளவோ வேண்டிக்கொண்டும் தாய்நாட்டிற்குத் திரும்பிவர இவர் மனமிசைந்தாரில்லை. ஆதலின், பல பெருமக்கள் இவருக்கு நிருபங்களெழுதினர்; தூதுவக்கூட்டங்களை அனுப்பினர்; செல்வாக்குள்ள தனிப்பட்ட நபர்களை அனுப்பினர்; எதையும் இவர் சட்டைசெய்யவில்லை. ஈரானுக்கு வர முடியாதென்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். முடிவில் ஈரான் மஜ்லிசு சபையார் சென்ற 31-10-1925 தேதி கூடி, அஹ்மது ஷாஹ்மிர்ஸா அரச பதவியை வகிக்கத் தகுந்தவராகார் என்று தீர்மானித்து இவரை அரசபதவியிலிருந்து அகற்றிவிட்டனர்.

அத்தீர்மானம் எட்டியதும், இவர் அதனை எதிர்த்து, "என்னை அரச பதவியிலிருந்து அகற்ற ஈரான் மஜ்லிசுக்கு அதிகாரமில்லை; சட்டப்படி நானே அரசுக்கு உரியவன். என் தேசத்தில் கிளர்ச்சிகள் பலமாயிருப்பதால் அவை ஒழிந்து, அமைதி நிலவியதும் வருவேன்'' என்று பொருள்படும்படி கூறினார்: எனினும், பாரசீகப் பார்லிமெண்டு சபையினரும், பொதுஜனங்களும் இவருடைய வார்த்தையைப் பொருட் படுத்தவில்லை. ஈரான் தேசத்தைக் குடியரசாக்குவதா, அல்லது முடியரசாக்குவதா, என்பதைப்பற்றி யோசிக்க பாரசீக பார்லிமெண்டில் ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. குடியரசு கூடாது என்றும், முடியரசே முக்கியமென்றும் அக்கமிட்டிகூறி, அதுகாலை ஈரான் அரசாங்கத்தின் யுத்த மந்திரியாகவும், பிரதம மந்திரியாகவுமிருந்து தற்காலிகமாக ராஜ்ய பரிபாலனப் பொறுப்பு முழுவதையும் ஏற்றுத் திறம்பட நடத்திக்கொண்டிருந்த ரிஜாகான் பஹ்லவி என்பவரை பாரசீகத்திற்கு அரசராக்கிவிடவேண்டும் என்றும் அவருடைய வம்சத்திற்கு அரசுரிமையை அளித்துவிடவேண்டுமென்றும், சிபாரிசு செய்தது.

கமிட்டியாரின் சிபாரிசுகள் பாரசீகப் பார்லிமெண்டு சபையாரால் அங்கிகரிக்கப்பட்டன. தற்போது ஈரானுக்கு அரசராக இருந்து வருபவரான ரிஜா ஷாஹ் பஹ்லவி என்பவர் அரசராகவும், அவருடைய மூத்த புதல்வர் இளவரசராகவும் 16-12-925-ல் முடி சூட்டப்பட்டனர்.

பட்டந்துறந்த, பாரசீக மன்னரான அஹ்மது ஷாஹ் மிர்ஜா தம்முடன் கொண்டு சென்ற முத்துக்களையும் இரத்தினங்களையும் இன்னும் ஏராளமான நாணயங்களையும் கொண்டு மிக ஆடம்பரமாகபாரிஸில் வாழ்க்கையை நடத்திவந்தார். சென்ற 1929-ம் வருஷத்தில் நோய் வாய்ப்பட்டு வைத்திய சாலையில் கிடந்தார். இவரிடமிருந்த பணமெல்லாம் செலவாகிவிட்டது; தரித்திரதிசையும் கூடிக்கொண்டது. முன்னம் இவருக்கு உற்ற நண்பர்களாக இருந்தவர்களும், இவருடன் கூடிக் குலாவிக்கொண்டிருந்த நங்கைகளும் இவரைக் கைவிட்டனர். பின்பு, இவர் சுகமடைந்து, தமது ஜீவனோபாயத்திற்காக அத்தர் வியாபாரஞ்செய்தார். அதில் அதிக லாபங்கிடைக்கவே மிகுந்த செல்வந்தரானார்; மறுபடியும் இவர் சுகபோகத்தில் ஈடுபடத்தொடங்கினர். இறுதியாக நாடிழந்து, நகரிழந்து அரசிழந்து அந்நியநாட்டில் சாதாரணப் பிரஜையாக பாரிஸ் நகரில் மரணமடைந்தார்.

பிரிட்டிஷ் பத்திரிகையின் பெருந்தன்மை: முஸ்லிம்களின் மத உணர்ச்சி புண்படுமாறு நபிகள் நாயகம் அவர்களைப்பற்றி சென்ற ஜனவரி மாதத்தில் விகாரமான படம் வெளியிட்டு, வியாசமும் எழுதிய "பிரிட்டானியா அண்டு ஈவ்'' என்ற பிரிட்டிஷ் மாசிகை முஸ்லிம்களால் கண்டிக்கப்பட்டது நேயர்களுக்கு

ஞாபகமிருக்கலாம். இந்தியா கவர்ன்மெண்டார், முஸ்லிம்களின் உணர்ச்சியை மதித்து, அம்மாசிகையின் ஜனவரிமாத இதழைப் பறிமுதல் செய்தனர். ஷை பத்திரிகையின் ஆசிரியர், முஸ்லிம்களின் மனம் புண்படும்படியாகப் பிரசுரித்ததற்காக முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கேட்பதோடு லண்டனிலுள்ள இமாம்களால் எழுதப்பட்ட நபிகள் நாயகத்தின் உண்மைச் சரித்திரத்தைப் பிரசுரிக்கவும் ஒப்புக்கொண் டிருக்கிறார். ஏப்ரல் மாத சஞ்சிகையில் அது வெளிவரும் என்று தெரியவருகிறது. இதுவன்றோ பெருந்தன்மை! மனிதராகப் பிறந்தவர் தவறுமலிருக்கமுடியாது. ஆயினும், தவறை எடுத்துக்காட்டினால், அதனை உணர்ந்து நிவர்த்திக்க வழிதேடுவது தான் புத்திசாலித்தனமும் நேர்மையுமாம். ஆதலால் ஷை பத்திரிகையின் ஆசிரியரை நாம் பாராட்டுவதுடன், அப்பத்திரிகையின்மீது கொண்ட மன வருத்தத்தை மாற்றிக் கொள்ளுமாறு முஸ்லிம்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். இஃதிவ்வாறிருக்க, தன்னை முஸ்லிம் எனக் கூறிக்கொண்டு, நாயகமவர்கள்பாலும், இஸ்லாம் மதத்தின்பாலும் பல இடையூறுகளைச் செய்தும், அவ்விதமாகவே எழுதியும் எழுதிக்கொண்டு மிருக்கிற சில கனவான்கள், பிறரால் குற்றம் எடுத்துக் காட்டப்பட்டால், "நீங்கள் யார்?" என்றும், "மீசையை முறுக்காதீர்கள்", என்றும் எழுதிவிடுகின்றனர். இத்தகைய கனவான்கள் ஷை பத்திரிகாசிரியரைப் பார்த்தாகிலும் பாடங்கற்றுக் கொள்வார்களாக!

பறிமுதல்:—இலட்சுமண புரியைச் சேர்ந்த பண்டிதர் தரம் பக்ஷு என்பவர் எழுதிய "கலாமுர் ரஹ்மான் வேதமா? குர்ஆனா?" என்ற பெயருள்ள ஆபாச நூலும் இ. பி. கோ 295 ஏ. பிரிவின்படி பறிமுதல் செய்யப்பட்டுளது. இந்த நூலைக் கண்டித்து நமது "ஹிபாஜத்துல் இஸ்லா" த்தின் இரண்டாம் இதழில் நாம் எழுதியது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். முஸ்லிம்களின் மத உணர்ச்சி புண்பட்டுப் போனதை மதித்து, அவர்களைச் சாந்தப்படுத்த இந்தியா கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்ட நடவடிக்கையை நாம் பாராட்டவேண்டும். ஆனால் முஸ்லிம் உலகம் கேட்டுக்கொண்ட வண்ணம், தற்காப்பு ஏற்பாடுகளையும் செய்ய அரசாங்கத்தார் முன்வந்து, அதன் ஆசிரியர்மீதும் பிரசுர கர்த்தாமீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மராட்டியப் பத்திரிகையின் விஷமம்:—பூனாவில் பிரசுரமாகும் "ஸங்கராம்" என்ற மராட்டியப் பத்திரிகை சென்ற மாதம் 6ந் தேதிஇதழில் முஸ்லிம்சமூகத்தினரின் மனம் புண்படும் விதமாகவும், ஆத்திரமுண்டாகும்படியாகவும், பரிசுத்த குர்ஆன் மஜீதை காம சாஸ்திரத்திற்கு ஒப்பிட்டு, நபிகள்நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் மீது அபாண்டமான பழி சுமத்தி, நாயகமவர்கள் பெண்களை ஏமாற்றி அபகரித்துச் செல்வதில் தயங்காதவராக இருந்தார்கள் என்றும் விஷமமாக எழுதி இருக்கிறது. இஸ்லாத்தின் சத்தியங்கள் இன்னவென்றே அறியாத இத்தகையினர் எத்துணை துணிச்சலாயும் நியாயமற்ற தன்மையாயும் நடந்துகொள்ள முன்வந்திருக்கின்றனர் என்பதை எண்ணும்போது, உலகமுஸ்லிம்கள் கொதிப்புக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. ரங்கிலா ரஸுல் முதல் இதுவரை எத்தனையோ முறை இம்மாதிரி விஷமத்தனமாகப் பத்திரிகை வாயிலாகவும் புத்தகங்கள் மூலமாகவும் எழுதப்பட்டுவிட்டது. அரசாங்கத்தார் இவைகளைப் பறிமுதல் செய்வதுடன் மாத்திரம் நின்றுவிடுவதால், அவர்களுக்கு இதில் எவ்வித அச்சமுமின்றி மென்மேலும் இத்தகைய குற்றத்தைச் செய்துவருகின்றனர். இவர்களின்மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளாதவரையில் இவர்கள் தங்கள் விஷமச் செயல்களை விடமாட்டார்கள் என்பதை இந்திய அரசாங்கத்தார் உணர்வார்களாக.

ஹிபாஜத்துல் இஸ்லாம் புத்தகசாலை

அல்பாக்கியாத் துஸ்ஸாலிஹாத்தின் அழகிய சரிதை

இது வேலூர் மத்ரஸயே பாக்கியாத் துஸ்ஸாலிஹாத்தின் நாஜிரும் மீர்மஜ்லிசுமான அஃலாஹஜ்றத் ஹாஜீ மௌலவீ ஜியாவுத்தீன் முஹம்மது ஸாஹிப் கிப்லா அவர்களால் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டது. இதில் வேலூர் மத்ரஸாவின் சரித்திர வரலாறு எழுதப்பட்டிருந்தாலும் இஸ்லாத்தின் ஆரம்பக்காலத்தைய சரித்திர சம்பந்தமான பல அரிய விஷயங்களும், சுமார் 50 வருஷங்களுக்கு முன் நமது தென் நாட்டு முஸ்லிம்களின் நிலைமையும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. புத்தகத்தின் இடையிடையே மத்ரஸா கட்டிடத்தின் அழகிய ஆப்டோன் படங்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா நான்கே.

ஹஜ்ஜு யாத்திரை

அல்லது

ஹிஜாஸ் பிரயாணம்

இது சென்னை ''ஸைபுல் இஸ்லாம்'' ஆசிரியர் மௌலானா மௌலவீ அஹ்மது ஸயீது ஸாகிப் அவர்களால் இனிய எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டது. இந்நூலில் ஹஜ்ஜு யாத்திரை செல்லும் ஒவ்வொரு முஸ்லிமும் தம் இருப்பிடம் விட்டுப் புறப்பட்டது முதல் ஹஜ்ஜு உம்ரு ஜியாரத்து முதலியவைகளை நிறைவேற்றித் திரும்பும் வரை ரயில், சப்பல், ஒட்டகங்கள், மோட்டார் முதலிய பிரயாணங்களில் நடந்துகொள்ள வேண்டிய விபரமும், அவைகளுக் கேற்படும் செலவு தொகை விபரமும், ஹனபீ, ஷாபிஈ ஆகிய இருமத்ஹபுகளின்படி ஹஜ்ஜுடைய பர்லு, வாஜிபு முதலிய மஸ் அலாக்களும், துஆச் செய்யவேண்டிய விபரங்களும் அடங்கி இருக்கின்றன. இதன் விலை அணா நான்கே.

கிடைக்குமிடம்:—

ஹிபாஜத்துல் இஸ்லாம் புத்தகசாலை,
48, அங்கப்ப நாய்க்கன் தெரு,
சென்னை. G. T.

நமது பத்திரிகை கிடைக்கு மிடங்கள்.

சிங்கப்பூர்

மெஸர்ஸ் **A. M.** அப்துல்லாஹ் சாஹிப் **& Co,**
77, மார்கட் ஸ்டிரீட்.

ஜனுப் **K. V.** முகம்மது சுல்த்தான் அவர்கள்,
91, மார்க்கட் ஸ்டிரீட்.

மெஸர்ஸ் பிரிட்டிஷ் **&** அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
18, பாட்டரி ரோடு.

மெஸர்ஸ் **M. M.** துல்பகீர் கம்பெனி,
34, நார்த் பிரிட்ஜ் ரோடு.

கோலாலம்பூர்

மெஸர்ஸ் **M. M.** துல்பகீர் கம்பெனி, மார்கட் ஸ்டிரீட்.

கிள்ளான்

ஜனுப் ஹாஜீ **K. O.** முகம்மது இப்ருஹீம் சாஹிப்,
31, ரப்பா ஸ்டிரீட்.

பினங்

ஜனுப் **V. O.** ஹஸன் முகம்மது அவர்கள்,
34, கிட்டாரோடு.

ரங்கூன்

ஜனுப் **V. M.** அப்துற்றஹ்மான் அம்பலம் அவர்கள்,
85, மொகல் ஸ்டிரீட்.

Messrs. **A. P. N.** அப்துல் ஜப்பார் **&** பிரதர்ஸ்,
77, எடுவர்டு ஸ்டிரீட்.

நவீன கதா புக் டிப்போ, மங்கமாரி வீதி.

கொழும்பு

ஜனுப் அ. மு. க. ஆலிம் சாஹிப்,
No. 220, **2nd** கராஸ் ஸ்டிரீட், பெட்டா.

மதராஸ்

மெஸர்ஸ் அ. மு. க. ஹாஜி முகம்மது ஷரீப்,
மரைக்காயர் **&** பிரதர்ஸ்,
220, அங்கப்ப நாய்க்கன் தெரு.

M. A. காதர் பாவா **&** பிரதர்ஸ்,
206, அங்கப்ப நாய்க்கன் தெரு.

Printed at the Kesari Printing Works, & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb,
Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.